# குயிலே...
# குயிலே...
# குயில்க்கா...!

அகிலா கோவிந்த்

## ஆசிரியரின் பிற வெளியீடுகள்

| | |
|---|---|
| கண்ணான கண்மணி | 65.00 |
| அழகி... நீ.. பேரழகி...! | 65.00 |
| மௌனமே காதலாக | 65.00 |
| காதல் தேன் நிலா | 115.00 |
| என் இனிய கண்ணாளா | 65.00 |
| தோகை இளம் மயில் | 65.00 |
| அன்புள்ள மான் விழியே | 100.00 |
| எங்கே என் தேவதை? | 100.00 |
| ரதி என்னும் அழகுக்கு | 70.00 |
| மன்னவனே வரலாமா | 70.00 |
| கண்மணி நிமிர்ந்து நில்லடி | 65.00 |
| வருகிறேன் ராஜகுமாரி | 65.00 |
| வண்ணமயில் பெண்ணொருத்தி | 85.00 |
| விழியோரப் பார்வையிலே | 70.00 |
| காக்கைச் சிறகினிலே | 80.00 |
| பால்வண்ணம் பருவம் கண்டு | 75.00 |
| வா பொன் மயிலே | 70.00 |
| அழகு மயிலாள் | 70.00 |
| மைவிழி மானே | 90.00 |
| காத்திருப்பேன் ராஜகுமாரா | 70.00 |
| பொன்மகள் வந்தாள் | 75.00 |
| வெற்றித் திருமகள் | 65.00 |
| என் சின்னக் குட்டிம்மா | 100.00 |
| மைவிழி ராணி | 65.00 |

# குயிலே... குயிலே... குயிலக்கா...!

## 1



சிறு குருவியொன்று மெல்ல மெல்ல நுழைந்து உயரே பரண் பக்கம் போனது. வாயில் அழகாக கவ்வி வைத்திருந்த வைக்கோல் படப்பு குச்சிகளைக் கீழே போட்டு அடுக்கியது.

மற்றொரு குருவி இன்னொரு திசையிலிருந்து சர்ரென பறந்து வந்தது. அதன் குட்டி அலகுகளில் சிறுசு, சிறுசாய் பஞ்சுப் பொதிகைகள். அந்தப் பஞ்சுச் சிதறல்களை குச்சிகளின் மீது மெத்தன வைத்தது.

மறுபடியும் விர் விர்ரென, சர், சர்ரென, இரண்டும் பறந்து ஓர் ஐந்து நிமிடத்திற்குள் அழகான குருவிக்கூடு ஒன்றை உருவாக்கிவிட்டது. கைகளைத் தட்டியவளாய் மெய்மறந்து ரசித்தாள் மைவிழி.

''ஓ...! என்ன... அழகு...! என்ன... அருமை! நீயும் பாரேன்...!'' என் பக்கத்தில் ஏதோ ஒரு சிந்தனையோடு உட்கார்ந்திருந்த தனா என செல்லமாய் அழைக்கப்படும் தனசேகரன் அண்ணனை தட்டினாள் அன்புத் தங்கை.

சிந்தனையை தங்கை சட்டென கலைத்த கோபம் துளியும் இல்லாமல் தனசேகரன் திரும்பினான். அவள் காட்டிய வீட்டுத் தோட்டத்தின் முன்புற பரண் கம்பத்தில் தெரிந்த அந்த புதிய குருவிக்கூட்டைப் பார்த்தான்.

''வாவ்...! அழகுதான்...! அதுவும் உன்னைப் போலவே அபரிமிதமான அழகுதான்...! பாரேன்...!'' என்றான் பதிலுக்கு.

திரும்பி அவனை ஒரு அர்த்தமான பார்வை பார்த்து விட்டு, ''ஆஹா... புரிந்து விட்டது...!'' என்றாள் மைவிழி எதையோ கண்டு பிடித்து விட்டது போல்.

''என்ன புரிந்து விட்டது?'' என்றான் தனசேகரன் துணுக்குற்று.

மைவிழி கலகலவென கிண்கிணிப்பு சிரிப்பை சிரித்தவள், ''காலையிலே அண்ணன் இப்படி ஐஸ் வைப்பதைப் பார்த்தால் எனது அருமை அண்ணனுக்கு இந்த அன்புத் தங்கையிடம் ஏதோ ஒரு காரியம் ஆக வேண்டும். சாதிக்க வேண்டும். அப்படித்தானே?'' என்றாள்.

கண் சிமிட்டி தலையாட்டிக் கொண்டு மைவிழி அப்படிக் கேட்கும் குழந்தைத்தனமான அழகை ஒரு



கணம் வியந்து ரசித்துவிட்டுக் கொண்டிருந்த முறுவலை பெரிதாக்கினான் தனசேகரன்.

''ம்கூம்! மிகச் சரியாக யூகித்து விட்டாய். இந்த புத்திசாலித்தனம், அறிவாளித்தனம் எல்லாம் இயற்கையிலேயே உனக்கு...'' என ஆரம்பித்தவன் சட்டென நிறுத்தி, ''வேண்டாம் பின் திரும்பவும் ஐஸ் வைக்கிறேன் என்று சொல்லிவிடுவாய். நேரிடையாகவே விஷயத்திற்கு வரட்டுமா...?'' என்றான் குரலில் சிறிது கெஞ்சல் தொனிக்க...

''சொல்லுங்கள் தனா அண்ணா, என்னிடம் என்ன தயக்கம்?'' என்றாள் அவளும் குரலில் பரிவு காட்டி...

அதற்காக காத்திருந்தவன் போல் விஷயத்தை படபடவென கொட்டி விட்டான் தனசேகரன்.

அவனது பட்டணத்து நெருங்கிய நண்பனும், பெரும் தொழிலதிபனும் ஆன உதயசந்திரன் அவர்களது புன்னைவனம் கிராமத்திற்கு வந்து ஒரு வாரம் அல்லது பத்து நாட்கள் வந்து தங்கப் போகிறானாம். அவனுக்கு வேண்டிய பணிவிடைகள் செய்து அவனை நன்கு கவனிக்க வேண்டியது அவனது கடமையாகும்... என அவன் தயங்கித் தயங்கிச் சொன்னதை வியப்பாகவே பார்த்தாள் அவள்.

''ஐயோ... என்ன அண்ணா! இதற்குப் போய் என்னிடம் ஏன் கேட்கிறாய்? உன் நண்பர் என்கிறாய்...? தாராளமாக தங்கட்டும். நீயும் அவரை கவனித்துக் கொள்...'' என்றவளை கூர்ந்து பார்த்த தனசேகரன், ''அதில் தான் விஷயம் இருக்கிறது மைவிழி, என் நண்பர் தங்கப் போவது நம் வீட்டில்தான். உனக்குத்தான் ஆண்

வாடையே பிடிக்காது என்பாயே... அதான் யோசிக்கிறேன்...'' என்றான் பீடிகையோடு.

அவன் சொன்னதும் தான் பொட்டென தன் தலையிலேயே செல்லமாக ஒரு தட்டு தட்டிக் கொண்டாள் அவள்.

ஆங்! என்ன இது? அவளது தீவிரமான அந்த ஆண்களை வெறுக்கும் கொள்கையையும் அவளே ஒரு கணம் மறந்து விட்டாளே! என்ன ஒரு மறதி!

தன்னை ஒரு கணம் நொந்து கொண்டு நிமிர்ந்து பார்த்தவள், ''ஆமாம். அது உண்மைதான். ஆனால் அதற்காக வேறு ஒரு வழி யோசித்து விடலாமே?'' என்றாள்.

''என்ன வழி?'' என்றான் தனசேகரன்.

தன் வீட்டு முன் இருந்த 'குயில் பாட்டு' கூடத்தை, கைகளால் காட்டினாள் அவள்.

''ஆ...! அது உன் இசைப் பள்ளி அல்லவா...? அங்கயா என் நண்பனை தங்க வைக்க?'' என தனசேகரன் திகைத்துக் கேட்க தலையசைத்தாள் அவள்.

''அண்ணா, உன் நண்பர் அந்தக் கூடத்தில் தங்கிக் கொள்ளட்டும். அதில் உள்ள மூன்று அறைகள் அவருக்கு வசதியாக இருக்கும். நான் அவர் இருக்கும் வரை இசைப் பள்ளியை வீட்டில் வைத்து நடத்துகிறேன். தேடி வரும் சிறுவர் சிறுமியர்களுக்கு இங்கு வைத்துப் பாட்டுச் சொல்லிக் கொடுக்கிறேன். என்ன உன் நண்பரைத் தங்க வைக்கும் உன் பிரச்சினை தீர்ந்ததா? போதுமா?'' என்றாள் மைவிழி கண்களை சிமிட்டியபடி.



''தீர்ந்தது...!'' என பதிலுக்குத் தானும் கண் சிமிட்டிச் சிரித்தான் தனசேகரன்.

மலையடிவாரமாய் இருக்கும் அந்த புன்னைவன கிராமத்தில் திரும்பிய திசை எல்லாம் பச்சைப் பசேல் வயல்களும் பெரிய பெரிய மரங்களும் உடம்பைச் சில்லென வருடும் குளிர் காற்றும், விதவிதமான பறவைகள் பறக்கும் இயற்கையழகு கொண்டவை.

பத்து ஏக்கர் விவசாய நிலத்துடன் நடுநாயகமாக அமைந்த அழகான பண்ணை வீடு தனசேகரனுடையது. பத்து வருடங்களுக்கு முன் விபத்தொன்றில் பெற்றவர்களை பறிகொடுத்த பிறகு இருவரும் தனித்து விடப்பட... சிறிய தங்கை மைவிழி தான் இனி தன் துணை என முடிவெடுத்து எல்லா பொறுப்புகளையும் கையில் எடுத்துக் கொண்டான் தனசேகரன்.

பக்கத்து டவுனுக்குச் சென்று படித்து வந்த கல்லூரி படிப்பை பாதியிலே நிறுத்திவிட்டு விவசாயத்தில் இறங்கி விட்டான் அவன்.

அவ்வப்போது கைதேர்ந்த விவசாயியான தந்தையிடம் முன்பு கேட்டுத் தெரிந்த விஷயங்களை எல்லாம் அனுபவமாக்கிக் கொண்டு தங்களுக்கு இருந்த பத்து ஏக்கர் நிலத்திலும் விதவிதமான விளைச்சல்களை பயிரிட்டு மகசூலைப் பெருக்கினான்.

நிரந்தரமாய் நல்ல வருமானம் வரும்படி செய்து கொண்டு... தங்கையை படிக்க வைத்தான்.

அவன் பொறுப்பேற்ற மூன்று நான்கு வருடத்தில் நல்ல முறையில் விவசாயம் செய்து வருமானத்தையும், வசதிகளையும் பெருக்கினான். பத்துக்கு மேற்பட்ட

டிராக்டர்கள், கதிர் அறுக்கும் மிஷின், தவிடு இயந்திரம், ராட்சஸ பம்ப் மோட்டார்கள், புது ரக விதைகள், உரங்கள் என பலவற்றை வாங்கி அந்த கிராமத்திலேயே முன்னோடியாய் விளங்கினான்.

தான் மட்டும் பயன்பெறாமல் சக நிலத்தை வைத்திருப்போர்க்கும் தான் தெரிந்து வைத்திருந்த விவசாய நுணுக்க விஷயங்களை எல்லாம் எடுத்துச் சொல்லி பயிரிடும் ஆலோசனையைச் சொன்னான். பேங்க் லோன் மூலம் இயந்திரங்கள் வாங்குவதை விளக்கி அதற்கான உதவிகளையும் செய்தான்.

தந்தையைப் போலவே கிராமத்து மனிதர்கள் எல்லோரிடமும் அன்பு காட்டி அவன் அரவணைத்துச் செல்வதைப் பார்த்த கிராமத்தினரும் பதிலுக்கு அவனை, 'சின்னப் பண்ணை...' 'பண்ணையார்...' என்றெல்லாம் அன்பொழுக அழைப்பது உண்டு.

'ஐயோ... நான் பண்ணையாரா? அந்த அடைமொழி எல்லாம் வேண்டாமே...!' என ஓடி ஒளிவான் தனசேகரன். மைவிழியும் தன் பங்கிற்கு, ''ஹலோ... கிராமத்து பண்ணையார் அவர்களே... எப்படி இருக்கிறீர்கள்?'' என்றெல்லாம் சிலாகித்து அவனைக் கேலி செய்வது உண்டு.

அன்றும் அப்படியே அண்ணனிடம் கேலியும் நகைப்புமாய் பேசிக் கொண்டிருந்தவள் திடீரென ஞாபகம் வந்தவளாய், ''இன்னொரு முக்கியமான, பயங்கரமான விஷயம், நிபந்தனை உன் நண்பருக்கு இருக்கிறது அண்ணா...'' என்றாள் கண்கள் முழுவதையும் விரித்துக் கொண்டு.



''இப்படி ரொம்பவும் பயங்காட்டாமல் விஷயத்தைச் சொல் கண்ணம்மா...'' என்றான் தனசேகரனும் சிணுங்கல் குரலில்.

''உன் அந்த நண்பர்... பெயர்கூட ஏதோ... சந்திரன் என்று சொன்னாயே... ஆ...ங்... உதயசந்திரன்... அவர் என் விஷயங்களில், முக்கியமாகப் பாட்டு இசை பயிற்சிகளில், தோட்டத்தில் நான் உருவாக்கியிருக்கும் நந்தவனப் பூக்களில் இருந்து இந்த அழகான பரண் குருவிக்கூடு வரை எதிலும் தலையிடாமல் இடைஞ்சல் செய்யாமல் இருக்க வேண்டும். அப்படி இருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டியது உன் பொறுப்பு... சரிதானா?''

தங்கை கேட்டதற்கு மறுபடியும் பூம் பூம் மாடாய் தலையாட்டியவன், ''அந்தக் கவலையே உனக்கு வேண்டாம் கண்மணி. அவன் உன் பக்கம் எட்டிக்கூட பார்க்க மாட்டான். ஏனென்றால் அவனும் உன்னைப் போலவே தீவிரமாய் ஒரு கொள்கையை வைத்திருக்கிறான். என்ன கொள்கை தெரியுமா?'' என்று நிறுத்திவிட்டு, குரலை சற்று உயர்த்தி, ''பெண்களை வெறுக்கும் கொள்கை!'' என முடித்தான்.

''அது வேறா...? நீ சொல்வதைப் பார்த்தால், உன் நண்பர் பெரிய மன்மத மகாராஜாவாய்த்தான் இருக்கக் கூடும்...! ம்ம்... என்னவோ... போ...!'' எனப் பேசி சலிப்படைந்தவள் போல் தங்கை முடித்தாள்.

அத்தோடு உதயசந்திரனும் மணியைப் பார்த்தவன் கிளம்ப ஆரம்பித்து விட்டான். ''ரெயில் வரும் நேரமாயிற்று. நீ சொன்ன மகாராஜாவை வரவேற்று கூட்டி

வருகிறேன்...'' என்று வேகமாக தயாரானவன் ஏதோ யோசனையில் நின்று. ''நீயும் வருகிறாயா... மைவிழி?'' என திரும்பிப் பார்த்தான்.

மைவிழி அண்ணனை நினைத்து சிரிப்பே பொங்கியது. 'இவ்வளவு நேரம் அந்த விருந்தாளி நண்பர் பற்றி அப்படி, இப்படி என கட்டளைகள் போட்டு சிலாகித்து விட்டு இப்போது அவளையே வரவேற்க கூப்பிடுகிறானே?' என நினைத்தவள். ''என்ன மகாராஜாவிற்கு கூஜா தூக்க ஆள் இல்லையாக்கும்...?'' என்றாள் குறும்பாய்.

தனசேகரனும் விடாமல், ''அப்படித் தான் வைத்துக் கொள்ளேன்...'' என்றதும், திரும்பி அவன் முகத்தை உற்றுப் பார்த்தாள்.

அதை உணர்ந்த தனசேகரனும், ''அது ஒன்றுமில்லை கண்ணம்மா. என்னைப் பொறுத்த வரையில் என் நண்பன் உதயசந்திரன் ஒரு முக்கியமான விருந்தாளி. நண்பனாக மட்டுமில்லாமல், தாயும் தந்தையும் இழந்து நாம் தவித்தபோது, எனக்கு தைரியம் கொடுத்து பண உதவிகள் செய்து இன்று இப்படியொரு நல்ல நிலைமைக்கு வர அவனும் ஒரு காரணமாய் இருந்திருக்கிறான். அப்படிப்பட்ட ஒரு நல்லவனை விருந்தோம்பல் முறைப்படி நாம் இருவரும் சேர்ந்து சென்று வரவேற்றால் தானே நன்றாய் இருக்கும்? அதுதான் யோசிக்கிறேன்...'' என அவன் முடிக்கவும், ''நீ யோசிக்க வேண்டாம். நானும் வருகிறேன்...'' என உடனடியாய் கிளம்பிவிட்டாள்...

ஆனால் அந்த உதயசந்திரனால் தனது வாழ்க்கையே காட்டாற்று வெள்ளம் போல் புரளப் போகிறது என்பதை அப்போது அவள் கொஞ்சமும் உணரவில்லை.



# 2



தனசேகரன் ஷெட்டில் இருந்து தனது செகண்ட் ஹாண்ட் அம்பாஸிடர் காரை உயிரேற்றி வெளியெடுத்து வந்ததும் அவள் ஏறிக் கொண்டாள்.

''மகாராஜாவுக்கு ஏற்ற ஓட்டைக் கார்...!'' என்றதும் தனசேகரன் அடக்க முடியாமல் வாய்விட்டுச் சிரித்தான்.

பின் பேச்சும் கேலியுமாக ரெயில் நிலையம் நோக்கி அவர்கள் கார் சென்றது. போகிற வழியில் வயல் வெளியில் வேலைகள் நடப்பதை கண்காணித்த தனசேகரனும் எதிரே வந்த கணக்குப் பிள்ளை தங்கையாவிடம் தென்னந்தோப்பில் லாரியில் லோடு ஏறும் விபரம் பற்றி விசாரித்துவிட்டு குடோனில் ரசாயன உர மருந்துகள் ஸ்டாக் இருப்பதையும் தெரிவித்து, அன்று செய்ய வேண்டிய வேலைகளை அறிவுறுத்தினான்.

பின் கவலைகள் நீங்கியவன் போல் வண்டியைக் கிளப்பி செலுத்தினான்.

அவன் முகத்தில் ஓடிய பெருமிதத்தைக் கவனித்த மைவிழி விபரம் புரியாமல் அவனையே கூர்ந்து நோக்க, ''அது ஒன்றுமில்லை கண்ணம்மா. நம்மிடம் வேலை பார்க்கும் பண்ணையாட்கள், கணக்குப் பிள்ளை என

எல்லோருமே நல்ல மனிதர்கள்... தங்கமான குணத்தினர்... இப்படி நல்ல குணாதிசயத்துடன் இருப்பதால் தான் நம் விவசாய விளைச்சலும் அமோகமாக இருக்கிறது... அதை நினைத்துதான் வியந்தேன்...!'' என்றான் ஆச்சரியம் பொங்க.

அதற்கு தலையாட்டிய தங்கையும், ''இதில் வியப்படைய என்ன இருக்கிறது அண்ணா? பொதுவாக கிராமத்து மனிதர்கள் எல்லாம் நல்லவர்கள். நல்ல மனது உடையவர்கள்... இந்த பட்டணத்துக்காரர்கள் தான் சுத்த மோசம்...'' உதட்டைச் சுழிப்புடன் தங்கை பழிப்பதைப் பார்த்து நிஜமாகவே பயந்தான் தனசேகரன்.

''ஐயோ கண்ணம்மா... இப்போது பட்டணத்தில் இருந்து வரும் என் நண்பனை வரவேற்கத் தான் போய்க் கொண்டிருக்கிறோம். உன் கோபத்தை எல்லாம் அவன் மீது காட்டி விடாதே...!'' என்றான் போலியாய் தோள்களைக் குலுக்கி.

''அப்படியெல்லாம் இல்லை அண்ணா...! நீ தைரியமாக இரு. நீ தான் என் காதுகளே தேய்ந்து போகும் அளவுக்கு அந்த உதயசந்திர புராணம் பாடியிருக்கிறாய். அப்படிப்பட்ட உன் நண்பரை நான் உதாசீனப்படுத்துவேனா?'' என்றாள் கிண்கிணி சிரிப்புடன்.

''ஐயோ...! அந்த புராணத்தை நான் முழுசாய் முடிக்கவில்லை. இன்னும் கொஞ்சம் மிச்ச மீதி இருக்கிறது. அதையும் சொல்லிவிடட்டுமா?'' என்றான்.

''ம்ம்... சொல்லிவிடு...''

''அதாவது கண்மணி, என் நண்பன் உதயசந்திரன் பரம்பரை பணக்காரன். கோடீஸ்வரன். ஐந்து, ஆறு



நூற்பாலைகள், ஸ்டீல் பாக்டரி, எக்ஸ்போர்ட் யூனிட், கன்சல்டன்ஸி என பலவித தொழில்களை சென்னையில் செய்து வருகிறான். கோடீஸ்வர அப்பாவுக்கு ஒரே மகன். சதா பிஸினெஸ், மீட்டிங் என எப்போதும் அலைந்து திரிந்து விட்டதால் போரடித்து ஓய்வெடுக்க... இந்த நம் கிராமத்திற்கு வருகிறான். அப்புறம்...''

தனசேகரன் மேற்கொண்டு எதுவும் பேச முடியாதபடி தன் காதுகளை கைகளால் பொத்திக் கொண்டு, ''ப்ளீஸ்...! ப்ளீஸ்...! ப்ளீஸ் அண்ணா...! இதற்கு மேலும் நீ அவர் புராணம் பாடினால் என் காதுகளே கிழிந்துவிடும். நான் மிச்ச மீதி விவரங்களை நேரிடையாக அவரிடமே கேட்டுத் தெரிந்து கொள்கிறேன்... தயவு செய்து நீ நிறுத்திவிடு...!'' கைகூப்பி கெஞ்சுவது போல் செய்து சிரிக்க தனசேகரனும் டக்கென்று சிரித்து விட்டான்.

அப்படியும் சிரிப்பும் கேலியுமாய் அவர்கள் ரெயில் நிலையத்தை அடைய வண்டி ஐந்து நிமிடங்கள் முன்னதாகவே வந்து விட்டது தெரிந்தது.

அதனால் தனசேகரன் பதட்டமாகி அவளை இழுத்துக் கொண்டு உள்ளே ஓடினான்.

அங்கு பிளாட்பார்மில் பெரிய லெதர் பேக் சின்ன தோள்பை சகிதம் தயாராய் நின்று கொண்டிருந்தான் அவன்!

அவனைப் பார்த்ததும் பதறத்தான் செய்தான் தனசேகரன்.

அதுவரை தங்கையின் கையைப் பற்றிக் கொண்டு வந்தவன், அவனைக் கண்டதும் உதறிவிட்டு விறுவிறுவென அவனை நோக்கி ஓடினான்.

'அட... இந்த அண்ணனுக்கு என்னைவிட அந்த நண்பன் உசத்தியாய் போய்விட்டானா?' என ஒரு கணம் சினம் கொண்டவள், நிமிர்ந்து அவனை உற்றுப் பார்த்தாள்.

இதுதான் அந்த உதயசந்திரனா...? பெரும் தொழிலதிபன்... பெரும் கோடீஸ்வரன்... இன்னும் என்னென்னவோ இந்த அண்ணன் அடுக்கினானே...? என எரிச்சல் ததும்ப அவனை நோக்கியவள் அதிரவே செய்தாள்.

எவ்வித பணக்காரத்தனமும் இல்லாமல் சிம்பிளான பேண்ட் ஷர்ட்டில் நெடுநெடு உயரமும், வாட்டச் சாட்டமான தேகத்துடன் சுருள் முடியும், அடர்ந்து கருத்த மீசையின் கீழே சட்சட்டென உதிரும் வசீகரச் சிரிப்புமாய்... அவன் நின்றிருந்தான்!''

அண்ணன் சொன்னதை வைத்துப் பார்த்தால் மற்றவர்களை கொஞ்சமும் சட்டை செய்யாத ஒரு கொழுப்பெடுத்த பணக்காரனாய்த்தான் அந்த அண்ணனின் நண்பன் இருப்பான் என அவள் மனதில் விழுந்திருந்த பிம்பம் நொறுங்கியது.

அண்ணன் பக்கத்தில் கூட்டி வந்து அறிமுகப்படுத்தியபோது, கைகூப்பி அவன் வணக்கம் போட்டான். ''என் பெயர் உதயசந்திரன்...'' என்று தன்னைத்தானே அறிமுகப்படுத்தி சொன்னபோது பதிலுக்கு நமஸ்கரித்தவள் அவனது பணிவைக் கண்டு வியக்கவே செய்தாள்.

மேலும் அவனை தொழிலதிபன், கோடீஸ்வரன் என்றெல்லாம் புகழ்ந்த அண்ணன் அவனது இந்த பணிவைப் பற்றி சொல்லவே இல்லையே...? என நினைத்தவள் திகிலாய் அதையும் நினைத்தாள்.



பட்டணத்துக்காரர்களுக்கு தேவைப்படும் போது குழைவதும் நடிப்பதும் கை வந்த கலை என்று சொல்வார்களே... ஒரு வேளை அது போல இதுவும் நடிப்பாய், ஒரு பத்து பதினைந்து நாள் இங்கு டேரா போடும் காரியத்திற்காக இருக்குமோ?

அவள் அதே போஸில் கண்கள் வட்டமாய் விரிய திகைத்து சிந்தனையோடு அவனையே பார்க்க... ''என்ன தனா, உன் கிராமத்தில் வாட்டச் சாட்டமான ஆண்களுக்கு கூட பஞ்சம்தானா?'' என்ற உதயசந்திரனின் கேலிக் குரல் அவளை இடித்து நிஜத்திற்குக் கொண்டு வந்தது.

தன்னுடன் பேசிக் கொண்டிருந்த அண்ணனைத் தட்டி, அவள் வியந்து தன்னையே பார்ப்பதைக் காட்டி, உதயசந்திரன் சொல்ல, அவள் முகம் சிவந்தாள்.

ஆ! அவள்... அப்படி... அவனை... வியந்து பார்க்கிறாளா...? என்ன ஒரு மடத்தனம்... கர்வம்! இவனுக்கு...? என நினைத்தவள் சட்டென, ''ஆமாம் சார்... இந்தக் கிராமத்து ஆண்கள், பாதி பேருக்கு கை கால்கள் கிடையாதுதான். அதான் உங்களுக்கு அதுவெல்லாம் சரியாக அந்தந்த இடத்தில் இருக்கிறதா என்று பார்த்தேன்...'' என்றாள் வெடுக்கென.

அவளது அந்தப் பேச்சில் உதயசந்திரன் ஒரு கணம் திகைத்துவிட்டுக் கொண்டிருந்த முறுவலை பெரிதாக்கியபடி, தனசேகரன் பக்கம் திரும்பி ''தனா, நீ சொன்னது சரி. உன் தங்கை நிஜமாகவே சூராதி சூரிதான்...!'' என்றான்.

மறுபடியும் திகைத்தாள் அவள்.

இந்த அண்ணன் அவளைப் பற்றி எல்லாவற்றையும் இவனிடம் உளறிக் கொட்டியிருக்கிறானா? அவனைப்

பற்றி தன்னிடம் வம்பளந்தது போல், அவனிடமும் கொட்டித் தீர்த்து விட்டானா?

''ஆமாம்! உங்களைப் பற்றியும் என்னிடம் நிறையச் சொல்லியிருக்கிறார். அது தெரியுமா?'' என்றாள் அவளும் விடாமல்.

''அப்படியா? அப்படி... என்ன... என்னென்ன சொல்லியிருக்கிறான்...?'' என்றான் உதயசந்திரன் ஆர்வக் குரலில்.

''ம்ம்... அதாவது...'' என ஆரம்பித்தவள், அவள் தன்னையே உற்று நோக்குவது கண்டு, எரிச்சலாகி, ''நீங்களும் ஒரு சூராதி சூரர்தான்...! என்று தான் சொல்லியிருக்கிறார்'' என முடித்தாள் கோபமாய்.

உதயசந்திரனோ, அதை வெகுவாய் ரசித்து பலமாய் தலையாட்டியவன், ''அதானே பார்த்தேன்...! என் நண்பன் தனா... என்னை ஒரு போதும் விட்டுக் கொடுக்க மாட்டான்... அது அவனது தங்கையாக இருந்தாலும் கூட...'' எனச் சொல்லி மறுபடி மார் தட்டியது. அவளுள் சினத்தை அதிகப்படுத்தியது.

என்ன சொல்கிறான்...? தன்னைவிட அண்ணனுக்கு இவன் உசத்தியா...? தனா அப்படி ஒரு போதும் கிடையாதே... அவள் ஒரு வார்த்தை சொன்னால்... அப்படியே உயிரைக்கூட விட்டு விடுவானே...?

ம்ஹூம்...! சமயம் வரட்டும். இவன் மூக்கை உடைத்து நம் அண்ணன் - தங்கை பாசம் எத்தகையது என இவனுக்கு காட்டுவோம்...! முகம் வெட்டித் திரும்பிக் கொண்டாள் அவள்.

அவர்கள் இருவரும் வந்ததும், வராததுமாய் ஒருவருக்கொருவர் பதிலடி கொடுத்து வெடுக் வெடுக்கென



பேசுவதை ரசித்த தனசேகரன், ''சபாஷ்! சரியான போட்டி தான்...!'' என கைகளையும் தட்டினான். தங்கையை ஒரு மாதிரியாய்ப் பார்த்தான்.

அப்போதுதான் வந்ததும் வராததுமாய் விருந்தினனாய் வந்தவனிடம் தானும் மல்லுக்கட்டி நிற்பது மைவிழிக்கு புரிந்தது. அண்ணனுக்குப் பிடிக்காதே... உதவி செய்த உற்ற நண்பன்... விருந்தோம்பல்... அது இதுவென சொல்லிக் கூட்டி வந்தானே... என்பது அவளுக்கு உரைத்தது.

எனவே நிலைமையை சகஜமாக்க விரும்பியவளாய், புன்னகையை முகம் முழுவதும் மலர விட்டவாறு, உதயசந்திரன் பக்கம் திரும்பி, ''என் பெயர் மைவிழி...!'' என தன்னை அறிமுகப்படுத்தினாள்.

''மல்லுக்கட்டிய பின்தான் அறிமுகப்படலமா...?'' என்றபடி வாய்விட்டு பதிலுக்குச் சிரித்தவன், பின் அவளைப் போலவே முகத்தில் புன்னகையை ஓட விட்டு தலையை ஆட்டி, ''என் பெயரும் உதயசந்திரன்...'' என்றான்.

மைவிழி அந்த அவனது கேலிப் பாவனையில் டக்கென சிரித்து விட்டாள்.

முத்துப் பற்கள் பளிச்சிட, அவள் புன்னகைத்ததை அவன் வெகுவாய் ரசிக்க... தற்செயலாய் நிமிர்ந்து பார்த்தவள், அவன் பார்வையைக் கண்டு முறைக்கவே செய்தாள்.

முதலில் வம்பிழுக்கும் பேச்சு... பின்... பார்வை... பின் கடைசியில்... சே! இந்த ஆண்கள் எல்லோரும் ஒரே மாதிரிதானா?

அவளே மனதுள் அழுத்த போது அதை கொஞ்சமும் உணராத தனசேகரன், "பார்த்தாயா? என் தங்கை... பற்றி நான்... சொன்னது சரிதானே?" என கண்களைச் சிமிட்டி, உதயசந்திரனிடம் வினவ... பதிலுக்கு அவன் குறும்பான ஒரு சிரிப்புடன், "ரொம்பவும் சரி..." என்றபடி கண்களை அசைக்க, மேலும் எரிச்சலானாள் மைவிழி.

அதனாலேயே அதை நான் கேட்கப் போவதில்லை. சொல்லவும் வேண்டாம் என்பது போல் அவள் முன்னால் நடந்தாள்.

பின்னால் லக்கேஜை தூக்கியபடி இருவரும் வர ஆரம்பித்தனர்.

உதயசந்திரனும் என்ன நினைத்தானோ, அதன் பின் மைவிழியிடம் எதுவும் பேசாமல் தனசேகரனிடமே தனது தொழில் விஷயங்கள் பற்றி பேச ஆரம்பித்து விட்டான்.

காரில் ஏறிக் கிளம்பினார்கள். உதயசந்திரன் அவர்களின் புன்னைவன கிராமத்து அழகை அதிசயமாகவே பார்த்தான். ஆஹா...! பச்சைப் புல்வெளிகள்... தென்னை மரங்கள்... மலைக் குன்றுகள்... குளிர்காற்று... ஆற்றங்கரை வெண்ணிற கொக்கு... பார்க்கவே எவ்வளவு ரம்மியமாய் இருக்கிறது? இப்படிப்பட்ட ஒரு அமைதியான இடத்தைத் தான் இவ்வளவு நாள் நான் தேடிக் கொண்டிருந்தேன்? குழந்தைத் தனமாய் கண்களை விரித்து, அவன் ரசிப்பதை அண்ணனும், தங்கையும் ஆச்சரியமாகவே பார்த்தார்கள்.

பின் தனசேகரன் கிராமத்து வைக்கோல் பரப்பு, மாட்டுக் கொட்டகை, மணல் மேடு, பனை மரத் திரள்கள், அய்யனார் கோயில், இருநூறு வயது ஆலமரம், ஆற்றோர அழகான குளத்தங்கரை, மணல் மேட்டை



தாண்டியிருக்கும் பெரிய ஏரி, ஏரி ஓரமாய் பறக்கும் நாரை, கொக்கு மற்றும் நைட்டிங்கேல் பறவைகள்... என கிராமத்து அழகை ஒவ்வொன்றாய் விளக்கிக் கூறியபடியே வந்தான்.

உதயசந்திரனும் எல்லாவற்றையும் அதிசயமாகவே பார்த்து ஆச்சரியப்பட்டுக் கொண்டிருந்தான். மைவிழி அவன் பக்கம் பாராமல் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

என்ன இருந்தாலும், இவன் அண்ணனுக்குத்தான் நண்பன். நமக்கு அந்நியன்தான் என மைவிழி நினைத்தாலோ, என்னவோ அதற்குப் பின் பேசாதவளாய் உதடுகளை இறுக்கிக் கொண்டாள்.

ஆனால் உதயசந்திரன் ஓரக்கண்ணால் அதை கவனித்து புரிந்து கொண்டது போல், "கிராமத்தில் தான் உண்மையான அன்பு, பாசம் காட்டி பேசுவார்கள் என்று பார்த்தால், இங்கும் அதற்கு கஞ்சத்தனம் தெரிகிறதே?" எனவும் தனசேகரன் விளங்காமல், "என்ன சொல்கிறாய் நீ?" என்றான்.

"ஒன்றுமில்லை..." என்றபடி சிரித்து கண்களாலே தனசேகரனுக்கு மைவிழியைக் காட்டினான்.

ஜாடையால் தன் அண்ணனிடமே தன்னைக் காட்டிக் கிண்டலடிப்பது கண்டு வெகுண்டவள், "இந்த அண்ணன் என்ன மக்கு மாதிரி இவன் சொல்வதற்கெல்லாம் இளித்துக் கொண்டிருக்கிறான்?" என திரும்பி தனசேகரனையும் முறைத்தாள்.

தனசேகரனோ, அதைக் கொஞ்சமும் உணராமல், "ஆ...! சொல்ல மறந்து விட்டேனே...? என் தங்கை மைவிழிக்கு...

...ருந்த... சிறந்த குரல் வளம்... கர்நாடக இசை முறைப்படி கற்ற பாடகி... இங்கு கிராமத்து பிள்ளைகளுக்கு சிறு ...டம் ஒன்று அமைத்து, அவர்களுக்கு இசையும் நடனமும் கற்றுக் கொடுக்கிறாள்... அதனாலே அவளுக்கு சிறுமியர் மத்தியில், ''குயிலக்கா...'' என்ற செல்லப் பெயரும் உண்டு...'' என முடித்தான்.

சரிதான்! இந்த அண்ணன் நிஜமாகவே 'பேக்கு' மாதிரியே ஆகிவிட்டான் தான்! என மைவிழி முடிவுக்கு வந்தபடி தலையில் கை வைத்துக் கொள்ள உதயசந்திரனும் விடாமல், ''குயிலக்கா... மிக இனிமையான பெயர் தான்... அதான் குயிலக்காவின் குரல் பேச்சுகூட ரொம்பவும் இனிமையாய் இருக்கிறது இல்லையா?'' என்றபடி மைவிழியைச் சீண்டினான்.

அதற்கு பதிலாய் மைவிழி ஏதோ சொல்ல நினைத்தாள். அதற்குள் வீடு வந்து விட உதடுகளை இறுக்கிக் கொண்டு இறங்கினாள்.

உதயசந்திரனும் இறங்கியவன் திரும்பவும் அதிசயிக்கவே செய்தான். விசாலமான புல் தரைகளுக்கு நடுநாயகமாக பெரிய வீடு. சுற்றிலும் மரங்கள், விதவிதமான பூச்செடிகள்... என தனசேகரனின் வீட்டு அமைப்பைப் புகழ்ந்தவன், ''தனா, எனக்கு உன் ஊரை, உன் வீட்டை உன் தங்கையை என எல்லோரையுமே பிடித்து விட்டது...'' என்றான் உற்சாகத்தோடு.

ஊரையும், வீட்டையும் சொன்னது சரி, தன்னையும் பிடித்து விட்டது என்றல்லவா சொல்கிறான்? என்ன இது? என திடுக்கிடவே செய்தாள் மைவிழி...!



# 3



வீடு வந்ததும் அவள் இறங்கி உதயசந்திரன் தங்க வேண்டிய, குயில் கூடத்தின் கதவுகளை எல்லாம் நன்கு திறந்து விட்டாள்.

''இதுதான் நான் தங்கப் போகும் மாளிகையா? பெயர் என்ன குயில் கூடமா? அருமை! அருமை!'' என்றபடி உதயசந்திரன் சுற்றும் முற்றும் நடந்து ஜன்னல் பக்கமெல்லாம் சென்று வெளியே எட்டிப் பார்த்து, தெரிந்த இயற்கை அழகை ரசித்தபடி பேசினான்.

தனசேகரனோ கிட்டத்தட்ட போர்ட்டர் போலவே தலையில் ஒன்றும், கையில் ஒன்றுமாக அவனது உடைமைகளை தூக்க முடியாமல் உள்ளே தூக்கி வந்தான். அதைக் கண்ட மைவிழி பதறித்தான் போனாள்.

''என்ன அண்ணா...? என்னிடம் சொல்லியிருக்கலாம் அல்லவா...? இப்படியா சிரமப்படுவது?'' என கடிந்தபடி அவன் கையிலிருந்த தோள் பையை வாங்கினாள்.

திரும்பி கைகளை வீசியபடி நின்ற உதயசந்திரனை, 'இவன் என்ன பெரிய மகாராஜாவா? நாங்கள் என்ன இவனுக்கு தூக்கு தூக்கிகளா?' என்பது போல் பார்த்து முறைக்க, ''ஐயையோ...! அண்ணன் தங்கை சேர்ந்து

...வா சிரமப்படுத்துகிறேன்? அழகான வீட்டைப் பார்த்த குஷியில் உடைமைகளைக் கூட மறந்து விட்டேன். கொடுங்கள் இப்படி...?" என பிடுங்காத குறையாய் வாங்கி கீழே வைத்தான் அவன்.

பின் தனசேகரனைப் பார்த்து, "ரொம்பவும் நன்றி தனா. எனக்கு மூளைக்கு ஓய்வு கொடுத்து, மனதை வேறு திசையில் திருப்ப அருமையான இடம் ஒன்றை தேர்ந்தெடுத்துக் கொடுத்திருக்கிறாய்... இனி... நான் எனது கவலைகள் எல்லாம் மறந்து விடுவேன்...!" என்றபடி முன் வந்து தனசேகரனின் கையைப் பிடித்து வேறு குலுக்கினான்.

அத்தோடு தன் வேலை முடிந்து விட்டது போல், விறு விறுவென வெளியே வந்து கொண்டிருந்த மைவிழி யின் காதுகளில் உதயசந்திரனின் வார்த்தைகள் விழ, அவள் முகம் குழப்பத்திற்குப் போனது.

என்ன சொல்கிறான்? கவலையாமே...? மனதை திருப்ப சரியான இடம் இதுவாமே...? அண்ணன் இது பற்றி ஒன்றுமே சொல்லவில்லையே... ஏன்...?

வீட்டிற்குச் சென்றதும் அவளது 'குயில் கூடத்து' சிறுவர் சிறுமியர்கள் பத்து பேர் அவளது வருகைக்காக காத்திருக்க, எல்லாவற்றையும் மறந்து போனாள் அவள்.

அவளுக்கு பொழுது போகாததாலும், கொண்டிருந்த கலையார்வத்தினாலும், அவளே கிராமத்துச் சிறுவர், சிறுமியரை தேடிப்பிடித்து மாலை வேளைகளில் விளை யாட்டாய் பாட்டும் நடனமும் சொல்லிக் கொடுக்க... வந்த சிறுசுகள் அந்தப் பாட்டில் இசையில் லயித்து போய் ஆர்வமாய் வந்து விட்டார்கள்.



வாரத்திற்கு மூன்று நாள் வகுப்புகள் எனவும், மைவிழி வைத்துக் கொண்டாள். தனது சிறிய இசைப் பள்ளிக்கு 'குயில் கூடம்' என அவள் பெயர் சூட்டவும், சிறுசுகள் எல்லாம் அவளை குயிலக்கா... குயிலக்கா என்று அழைக்க ஆரம்பித்துவிட... அதுவே அவளுக்கும் பிடித்துப் போனது.

தினமும் கர்நாடக இசையில் பக்திப் பாடல்கள், இறை வனைத் துதித்து உருவாக்கிய கீர்த்தனைகள், பலவித ராகங்களை உணர்த்தும் சங்கீதம் என பலவற்றைக் கற்றுக் கொடுக்க ஆரம்பித்தாள். டவுன் இசைப்பள்ளி ஒன்றில் முறைப்படி பாட்டும், நடனமும் அவள் கற்றிருந்த தால், அவளுக்கு அது எளிதாகவும் விருப்பமானதாகவும் இருந்தது.

அதிலும் சலங்கைகளைக் கட்டிக் கொண்டு அவள் ஒயிலாக ஆடும் பரதநாட்டியத்தை சிறுமியர்கள் மெய் மறந்து ரசிப்பர்.

தனசேகரனை அவள் ஆடும் ஆட்டத்தை ஒருமுறை கண்டு வியந்து, "ரொம்பவும் அபாரம்...! பேசாமல் உன் நடன அரங்கேற்றத்துக்கு ஏற்பாடு செய்து விடட்டுமா...? எதிர்காலத்தில் பெரிய டான்ஸர் எனது தங்கை என நான் மார் தட்டிக் கொள்ளலாம். என்ன சொல்கிறாய்?" என்ற போது, "போங்கள் அண்ணா! உங்கள் தங்கை என்பதற் காக ரொம்பவும் புகழாதீர்கள். நான் கற்றுக் கொள்ள வேண் டியது நாட்டியத்தில் இன்னும் நிறைய இருக்கிறது..." என்றபடி மறுத்து விட்டாள்.

ஆனால் அதுவே அவளுக்கு சிறுமிகளுக்கு கற்றுக் கொடுப்பது, பயிற்சி அளிப்பது என்றால் கொள்ளைப் பிரியமாயிற்று. சில சமயம் கோயில் திருவிழாக்கள்,

முக்கியமான பண்டிகை நாட்கள் வரும்போது உடனே அந்த சிறுவர் சிறுமியர்களைக் கொண்டு கலை நிகழ்ச்சிகளையும் நடத்துவாள்.

கிராமத்து சிவன் கோயிலை ஒட்டிய கலையரங்க மண்டபத்தில் அது போன்ற நிகழ்ச்சிகள் நடக்கும். மொத்த கிராமமும் கூடி நின்று கலை நிகழ்ச்சிகளை ரசிக்கும்.

பாட்டு, நடனம் என்பதில் ஆரம்பித்து நாட்டுப் பற்றையும், தன்னம்பிக்கையும் வளர்க்கும் சிறு சிறு நாடகங்களையும் அவள் நடத்துவாள்.

சிறுவர், சிறுமியர்களுக்கு நன்கு பயிற்சியளித்து, அப்படி அவள் நடத்துவது பார்ப்போரை மகிழ வைக்கும். அப்படி நடத்தும் கலை நிகழ்ச்சியில் சிறந்து ஆடி சிறப்பாகச் செய்தவர்களுக்கு பரிசும் உண்டு.

தன் சொந்த செலவில் பண முடிப்பாக ஊர்ப் பெரியவர்களை தலைவராக வைத்து பரிசளிப்பாள்.

படித்து முடித்துவிட்டு கிராமத்தில் என்ன செய்வது, எப்படி நேரத்தைப் போக்குவது என திகைத்தவளுக்கு இந்தக் குயில் கூடம் பெரும் வரப்பிரசாதமாய் மகிழ்ச்சியளிப்பதாகவும் அமைந்து விட்டது.

மறுநாள் குயில் கூடம் பற்றி கேள்விப்பட்ட உதயசந்திரன், முதல் வேலையாய் அங்குதான் வந்து எட்டிப் பார்த்தான். ஆர்வமாய் ஆடும் சிறுவர் சிறுமியரையும் அவர்களுக்கு உற்சாகமாய் பயிற்சியளிக்கும் மைவிழியையும் கண்டவன் வியந்தான். கூடவே வைத்த கண் மாறாமல் மைவிழியையே பார்க்க ஆரம்பித்தான்.



# 4



தனசேகரனுக்கு அடுத்தாற்போல் உள்ள சிறிய மச்சு வீடு கணக்குப் பிள்ளை தங்கையாவினுடையது. அங்கு தான் அன்று உதயசந்திரனை அழைத்துச் சென்றிருந்தான் தனசேகரன்.

'தங்கையா மாமாவை நாங்கள் வெறும் கணக்குப் பிள்ளையாக நினைப்பது கிடையாது. எங்களது குடும்ப நண்பராய், குடும்பத்துப் பெரியவராகவே வைத்திருக்கிறோம். எனது தந்தையார் காலம் முதல் வேலை பார்த்து வருகிறார். எங்கள் விவசாயத் தொழில் வேகமாக வளர்ச்சி கண்டதற்கு அவரும் ஒரு முக்கிய காரணம்...' என்ற முன்னுரையுடனே கூட்டிப் போய் அவரை உதயசந்திரனுக்கு அறிமுகப்படுத்தினான் தனசேகரன்.

கைகூப்பி, சிரம் தாழ பணிவுடன் அவர் வணங்கிய பாங்கே உதயசந்திரனுக்கு அவரது நல்ல மனதை எடுத்துக்காட்டியது போலும். கொஞ்சமும் யோசிக்காமல், காலில் குனிந்து நமஸ்காரம் செய்து, ''என்னையும் ஆசீர்வதியுங்கள்...!'' என்றான்.

பதறிப்போனார் தங்கையா, ''என்ன தம்பி...! எவ்வளவு பெரிய பணக்காரர்... கோடீஸ்வரர்... நீங்கள் போய்

என் காலில் விழுந்துகொண்டு...?'' என்றபடி ஆசீர் வதித்து உருகத்தான் செய்தார்.

பின் உள் பக்கம் திரும்பி, தன் மனைவி கமலத்தை அறிமுகப்படுத்தினார். ''தம்பி, என் மனைவியின் கைப்பக்குவமே தனிதான்... இன்று உங்களுக்கு மதிய சாப்பாடு என் வீட்டில்தான். சரிதானே?'' என்றபடி தனசேகரனைப் பார்க்க... தனசேகரன் தலையசைத்து, ''மாமா நாங்கள் வந்ததே அதற்குத்தானே...?'' என்றபடி உதயசந்திரன் பக்கம் திரும்பி, ''அதிலும் கமலம் அத்தை ஒரு காரக் குழம்பு வைப்பார்கள் பார்... அதன் மணமும் ருசியும்... மறக்கவே முடியாது... சாப்பிட்ட பின்பும் எச்சில் ஊற... நினைக்குமளவுக்கு ரொம்பவும் சுவையாக இருக்கும்...'' என்று சொல்ல... கமலம் முகத்தில் ஒரு வண்டிப் புன்னகையும் நாணமும் ஓடியது.

அப்போதுதான் உதயசந்திரன் கவனித்தான். நடுக்கூட கதவு மறைவில் திரைச்சீலைகளுக்குப் பின்னால் ஒரு ஜோடிச் சலங்கையுடன் கூடிய கால்கள் மை தீட்டிய விழிகள் சட்சட்டென தோன்றி மறைவதைக் கண்டான்.

இது... நிஜமா? பிரமையா? என அவன் திகைப்பாய் தன சேகரனைப் பார்க்க, அவன் சிரிப்புடன், ''ஓ... அதுவா...? சுட்டிப் பெண் மதுரம். மாமாவின் ஒரே பெண்...'' என்றதும் தங்கையாவும் திரும்பி, ''ஏய்... குட்டி... வா... இங்கே... தம்பியிடம் உன்னை அறிமுகப்படுத்தவில் லையே...?'' என்று பின்புறமாய் அழைக்க, திரைச்சீலை மறைவிலிருந்து வெளிப்பட்டாள் அந்தப் பெண் மதுரம்.

செதுக்கிய சிற்பம் போன்ற உடல்வாகுடன் காந்தக் கண்களைச் சிமிட்டியபடி வெளிப்பட்ட மதுரத்திற்கு



பதினெட்டு, இருபது வயது இருக்கும். பட்டுப் பாவாடை, தாவணியில் நீண்ட ஜடை. அதில் பட்டுக் குஞ்சம். நளினமாய் ஆட, அசல் கிராமத்துப் பெண்ணாய் நடந்து வந்து உதயசந்திரனை நமஸ்கரித்தாள்.

உதயசந்திரனும் கண்களை அகலமாக்கி கூர்ந்துதான் அவளைப் பார்த்தான். கறுப்பாய் இருந்தாலும் களை யாய் இருந்த மதுரத்தின் முகம், அந்த படபடக்கும் கண்களில் அடிக்கடி தோன்றி மறையும் ஒருவித காந்த வீச்சு... என எல்லாமே பார்க்கும்படியாய் வசீகரமாய்த் தான் இருந்தது.

அதிலும் மதுரம் தன்னைப் பார்த்த பார்வையில், ஒருவிதமான ஏக்கத்தையும் வித்தியாசத்தையும் அவன் உணர்ந்தான். ''தம்பி, இவளுக்கு பாட்டு, ஆட்டம் என் றால் உயிர். பரத நாட்டிய உடைகளுடன் விட்டால் நாள் முழுக்கக்கூட ஆடிக் கொண்டிருப்பாள்'' என தங்கையா உபரியாய்ச் சொல்ல, தனசேகரன் குறுக்கிட்டு, ''மைவிழி யின் உற்ற தோழி. குயில் கூடத்து உறுப்பினர். தினமும் கைகளையும் காலையும் ஆட்டிக் கொண்டு ததிங்கிணத் தோம் ஆட்டம் போடாவிட்டால் இவர்களுக்கு தூக்கமே வராது...'' என்று சொல்ல எல்லோரும் கொல்லெனச் சிரித்தனர்.

பின் தங்கையா வீட்டை, பின்புற சிறிய தோட்டத்தை எல்லாம் சுற்றிப் பார்த்துவிட்டுச் சாப்பிட உட்கார்ந்தனர்.

கமலம் உணவுகளை எடுத்து வைக்க, மதுரம் தான் ஓடியாடி பரிமாறினாள். குழம்பு... கூட்டு... என போதுமா போதுமா? எனக் கேட்டு உதயசந்திரன் தட்டை நிரப்புவ திலேயே குறியாயிருந்தாள்.

அன்று அவர்கள் வருவது தெரியாமல் தற்செயலாகவே காரக் குழம்பை வைத்திருந்தாள் கமலம். புளியும், வெள்ளப் பூண்டு மணமும் கலந்து தூக்கலான வாசனையில் மொறு மொறு காரத்துடன் சுவைபட இருந்த அந்தக் குழம்பை உதயசந்திரனும் ரொம்பவும் ரசித்து ருசித்தே சாப்பிட்டான். ''கிராமத்து ருசியே தனிதான்...! இனி அடுத்து எப்போது இந்த காரக் குழம்பு சாப்பிடக் கிடைக்கும்? என்ற ஏக்கம் இப்போதே நாவில் எழுந்து விட்டதே!'' என வெளிப்படையாய் பேசிவிட்டு, உண்டு முடித்தான்.

பின் முற்றத்தில் பேசிக் கொண்டிருந்தபோது, மதுரம் தட்டில் கொண்டு வந்து அதை நீட்டினாள்.

இளம் பொன்னிறத்தில் பளபளவென பிடித்து வைக்கப்பட்ட உருண்டைகள் அதில் இருந்தது. உதயசந்திரன் புரியாமல் விழிக்க... பின்னால் நின்ற கமலம், ''தம்பி சத்து உருண்டைகள் அவை. சோளம், கம்பு, தினை மாவு போன்றவைகளை வறுத்துப் புடைத்து இனிப்புக் கட்டி வெல்லம் சேர்த்துப் பிடிக்கப்பட்டது. உடம்பிற்கு மிக நல்லது...'' எனவும் உதயசந்திரன் இரண்டு உருண்டைகளை எடுத்து சுவை பார்த்தவன், ருசி மிகுதியால் மேலும் இரண்டை ஆசையாகவே உண்டு முடித்தான்.

அவன் அப்படி ஆசையாய் விழுங்குவதை மதுரம் கண்கள் விரித்துப் பார்ப்பதை உதயசந்திரனும் கவனித்தான். கிராமத்துப் பெண். ஆனாலும் கண் மை, ஸ்நோ க்ரீம், ஜிகினாக்கள், காதணி, ஜடை மாட்டி என ஒன்று விடாமல் செய்து அவள் தன்னை அலங்கரித்து அழகுபடுத்த முயன்றதை செயற்கையாகவே அவனுக்குத் தெரிந்தது.



நொடிக்கொருதரம் புரண்டு கிடக்கும் தாவணி மடிப்பை சரி செய்வதும், காற்றில் சிலுசிலுக்கும் தலை முடிக் கற்றைகளை ஒழுங்குபடுத்துவதும் தனது சின்னக் கண்களின் உள்ளே துள்ளும் கருவிழிகளை நிலையில்லாமல் சுழலவிடுவதும், தன்னை அடிக்கடி அப்படி ஒரு பார்வை அவள் பார்ப்பதும் எதற்காக? என்று குழம்பவே செய்தான் உதயசந்திரன்.

அந்த நேரம் பார்த்து வாயில் பக்கம் ஏதோ அரவம் கேட்க, நிமிர்ந்து பார்த்தால் மைவிழி வந்து கொண்டிருந்தாள்.

மைவிழியைப் பார்த்ததும் மதுரம் ஓடிப்போய் ஆவலாய் கட்டிக் கொண்டாள். 'இரண்டு பேரும் உற்ற தோழிகள். சிறு வயது முதலே, பேசி, விளையாடி, ஊர் சுற்றிய வாண்டுகள்!' என தங்கையா அவர்களை கை காட்டியபடி சிரிக்க அங்கு சிரிப்பலை எழுந்தது.

பின் தங்கையா உதயசந்திரன் பக்கம் வந்தவர், ''தம்பி நீங்கள் உணவிற்கு எந்த ஏற்பாடும் பண்ண வேண்டாம். வேளா வேளைக்கு சுவையான உணவை மதுரம் டாணென்று கொண்டு வந்து விடுவாள். சரிதானா?'' எனவும் உதயசந்திரன் தயங்குபவனாய், ''உங்களுக்கு எதற்கு சிரமம்?'' என்றதும், ''இதில் சிரமமெல்லாம் ஒன்றுமில்லை தம்பி. நாளை முதல் உங்கள் வீடு தேடி உணவு வரும்...'' என கமலமும் சொல்ல உதயசந்திரன் தலையாட்ட வேண்டியதாயிற்று.

அப்படித் தலையாட்டும்போது அவன் தற்செயலாய் மதுரம் பக்கம் பார்க்க அவள் அவனை நோக்கி ஒரு வெட்கச் சிரிப்பு சிரித்துக் கொண்டிருந்தாள்.

அவள் அப்படிச் சிரிப்பதை மைவிழியும் கவனித்தவள், முதல்முறையாய் அதிரத்தான் செய்தாள்.

# 5



மறுநாள் உதயசந்திரன் பற்றிய எந்த நினைவுமில்லாமல், தனது பாட்டு, பயிற்சி என இசை வேலைகளில் ஆழ்ந்து விட்டாள் மைவிழி.

ஆனால் மதியம் வந்த அண்ணன் தனசேகரன், ''மைவிழி இன்று உனக்கு வேறு வேலைகள் எதுவும் இருக்கிறதா?'' என்று கேட்டபோது புரியாமல்தான் அவனைப் பார்த்தாள்.

''எதற்குக் கேட்கிறீர்கள் அண்ணா?''

''ஒன்றுமில்லை... உதய் நம் கிராமத்தைச் சுற்றிப் பார்க்க விரும்பினான் அதான்...'' எனவும் அவளுக்கு சினமே மூண்டது. ''தாராளமாக அவர் சுற்றிப் பார்க்கட்டுமே... அவர் என்ன சிறு குழந்தையா...? துணைக்கு ஒரு ஆளை அனுப்பி அவர் கையைப் பிடித்துக் கொண்டு போய் காட்டி வர?'' என குரல் உயர அவள் கேட்கவும் தனசேகரன் சிரித்து விட்டான்.

''ஐயோ... அது இல்லை... கண்ணம்மா...! நம் கிராமத்து புராதான கால காளையார் கோயில், மலைக்குகை



சிற்பம், பலநூறு வருடங்களை கண்ட ஆலமரம் என முக்கியமான இடங்களை எல்லாம் உடன் சென்று காட்டி விவரித்தால் உதய் ரசிப்பான் அல்லவா...? அதற்குச் சொன்னேன். சரி உனக்கு இஷ்டமில்லை என்றால் விட்டு விடு. மதுரம் தயாராக இருக்கிறாள் அவளை அனுப்பி வைக்கிறேன்...'' என்றான்.

'மதுரம்...' என்ற பெயரைக் கேட்டதும், ஸ்விட்ச் போட்டாற்போல் நிமிர்ந்து விட்டாள் மைவிழி. அதனாலே மறுகணம், ''அது... அது... இஷ்டமில்லை... என்று இல்லையண்ணா... காரணம் தெரிந்து கொள்ளத்தான் கேட்டேன். நீ சொன்ன காரணமும் சரி. நான்... நானே அவரை அழைத்துப் போகிறேன்...'' என்றாள் அவசரமாய்.

தனசேகரன் திரும்பி அவளை ஒரு பார்வை பார்த்து விட்டு, ''சரி... கண்ணம்மா.. நானும் உதயிடம் சொல்லி விடுகிறேன். அப்புறம் உரக் கொள்முதல் வாங்க பட்டணம் வரை செல்கிறேன். திரும்பி வர இரவாகிவிடும். அதனால் நீ எனக்காக காத்திராமல் உணவருந்திவிட்டு படுத்து விடு. சரிதானா...?'' என்றபடி அவனும் கிளம்பி விட்டான். அவன் போனதும் தான் ஏன் இப்படிச் சொன்னோம் என அவளே ஆச்சரியம் கொண்டாள்.

அன்று மாலை நான்கு மணிவாக்கில் உதயசந்திரன் அவளைத் தேடி வர கிளம்பிவிட்டாள் மைவிழி.

'போவோமா?' என்றபடி உதயசந்திரன் அன்று நீல வெளிர் நிற சட்டையும், பழுப்பு நிற பேண்ட்டும் போட்டு, நெஞ்சை நிமிர்த்திய சீரான நடை நடக்க ஆரம்பித்தான். அவனது திடமான உடற்கட்டும், அவளை நிமிர்ந்து பார்க்க வைக்கும் உயரமும், கறுப்பு மீசையின்

கீழ் அடிக்கடி உதிரும் மயக்கமான சிரிப்பொன்றும் அவனை வசீகரிக்கவே செய்தது.

அதனாலேயே கிராமத்து விவசாய வளத்தைப் பற்றி ஏதோ அவனுடன் பேசியபடி நடந்தவள், இடையிடையே அவனை அளவிடும் கூர்மையான பார்வையொன்றையும் செலுத்தினாள்.

ஆனால் உதயசந்திரன் இந்த விஷயங்களில் யம காதகன் போலும்! கொஞ்ச வினாடியிலேயே அதைக் கண்டு பிடித்து விட்டவன் 'டக்'கென நின்றான். திகைத்து நோக்கியவளைப் பார்த்து, ''எல்லாம் உங்களுக்காகத் தான் அம்மணி. நின்று நிதானமாய் என்னைப் பார்த்துக் கொள்ளுங்கள். எதற்காக அந்த கள்ளப் பார்வை?'' என்றான் துடுக்காய்.

அட... அவன் கண்டு பிடித்து விட்டானே என முகம் சிவந்தவள், அவன் சொன்ன, 'கள்ளப் பார்வையை'க் கேட்டு சினமே கொண்டாள்.

''என்ன... கள்ளப் பார்வையா? என்ன உளறுகிறீர்கள்?'' என்றாள் குரல் உயர்த்தி.

உதயசந்திரன் கொண்டிருந்த புன்னகை முறுவலை பெரிதாக்கியவன், கள்ளத்தனம் என்று சொன்னதும் சினந்து விட்டாள் என்பதை புரிந்துகொண்டு, ''ஐயோ... கோபம் வேண்டாம்...! ஒரு விளையாட்டுக்காக அப்படி சொன்னேன்...'' என சரணாகதி போல் கைகளைத் தூக்கியவன், ''நீங்கள் தாராளமாய் வேண்டும் வரை என்னைப் பார்க்கலாம். நான் கோபப்பட மாட்டேன்...'' என்றான்.



அவன் கைகளைத் தூக்கி விரித்து ஒரு கணம் போஸ் கொடுப்பது போல் அப்படியே நின்ற கோலத்தைப் பார்த்து மைவிழி டக்கென சிரித்து விட்டாள்.

கூடவே, ''ஆமாம் பெரிய மன்மத மகாராஜாவுடன் நடக்கிறேன் அல்லவா...? அதான்... அப்படி விழுந்து விழுந்து பார்க்கிறேன்...'' என்றாள்.

உதயசந்திரனும் விடாமல், ''நீ சொன்னாலும், சொல்லா விட்டாலும் நான் மன்மத மகாராஜா தான். என்னை ஒரு பெண் விழுந்து விழுந்து பார்க்கிறாள். பார்க்க ஆரம்பித்து விட்டாள். அது தெரியுமா?'' என நிறுத்தினான்.

வில்லான புருவங்களை உயர்த்தி, அவள் நிஜமாகவே திகைத்தாள்.

தன்னைச் சொல்கிறானா... அல்லது வேறு யாரையும் குறிப்பிடுகிறானா? என்ற வியப்பு அவளுள் ஓடியது.

''நீயல்ல... இன்னொரு... பெண்...!'' தெளிவாக உச்சரித்தான் அவன்.

''யாரது...?'' என்றாள் அவள் திடும்மென நெஞ்சுக்குள் ஓடிய படபடப்பையெல்லாம் அடக்கியபடி.

''மதுரம்...!''

மீண்டும் நிறுத்தி நிதானமாய் உச்சரித்தான் உதயசந்திரன்.

தொடர்ந்து, ''நீயே... சொல்... மைவிழி... அவள் என்னை... எப்போதும் அப்படி ஒரு பார்வை... கண்களை விரிய விரியப் பார்க்கிறாள். அது என்ன மயக்கப் பார்வையா...? அதற்கு என்ன தான் அர்த்தமோ...? ஆனால் நிமிர்ந்து உற்றுப் பார்த்தால் தலையை கீழே குனிந்து

கொண்டு விறுவிறுவென ஓடி விடுகிறாள். இதற்கு என்ன சொல்கிறாய்?'' என்றான்.

மைவிழி ஒரு கணம் முகம் மாறினாலும், அதை வெளிக்காட்டாமல், ''வேறென்ன...? கிராமத்துப் பெண் அப்படித்தான் இருப்பாள்...!'' என்றாள்.

கூடவே பேச்சை மாற்ற விரும்பியவளாய், ''அதோ... அந்த மேட்டுத் திடலை தாண்டித் தெரிகிறதே... கோயில்... அதுதான் இந்த கிராமத்தில் பிரசித்தி பெற்ற அய்யனார் கோயில். பல நூற்றாண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டது. பாருங்கள் கோயில் முகப்பில் இருக்கும் அந்த கம்பீரமான அய்யனார் சிலையை... இங்கு இருக் கும் சிறிய சிறிய குதிரை பொம்மைகளில் உட்கார்ந்து தான் சிறு வயதில் நாங்கள் விளையாடுவோம்...'' என விவரிக்க ஆரம்பித்து விட்டாள்.

உதயசந்திரனும் அந்த பிரும்மாண்டமான அய்யனார் சிலையைப் பார்த்து, அதிசயிக்கவே செய்தான். இரு வரும் உள்ளே சென்று பயபக்தியுடன் சாமி கும்பிட்டனர்

பின் கோயிலை ஒட்டிய குளத்தைப் பார்த்தான்... மரங்கள் சூழ நடுவில் இருந்த பெரிய ஆலமரத்தையும் காட்டினாள் மைவிழி.

ஆலமரத்து அடியில் பொன்னம்மா பாட்டி பதனீ பானையுடன் உட்கார்ந்திருக்க... அவனை அங்கு கூட்டி சென்றாள். சுவையான பதனீரை பனை ஓலையில் தா இருவரும் வாங்கிக் குடித்தார்கள்.

அந்த வயதிலும் பாட்டி அரிவாளைப் பிடித்து நுங் கொலைகளை அனாவசியமாய் வெட்டி, நுங்குகளை



பாளங்களாய் அழகாய் எடுத்து உண்ணக் கொடுத்ததை உதயசந்திரன் ஆச்சரியமாய்த்தான் பார்த்தான்.

பதனீருக்கு காசு வாங்கிக் கொண்ட பொன்னம்மா பாட்டி, கூடவே தன் பக்கத்தில் வைத்திருந்த பெரிய தூக்குச் சட்டியைத் திறந்து நாலைந்து உருண்டைகளை அவர்களிடம் நீட்டினாள்.

''பணியாரம். அதுவும் பனைவெல்லம், தினை மாவு கலக்கப்பட்ட சுவையான பணியாரம்... என் பேரப் பிள்ளைகளுக்குச் செய்து வைத்திருந்தேன். நீங்களும் இரண்டு சாப்பிடுங்கள்...'' என உண்ணக் கொடுத்தாள்.

நடந்த களைப்பில் ஆவலாய் வாங்கி புசித்தனர். உதய சந்திரனும் காணாததைக் கண்டது போல்தான் விழுங் கினான்.

பணியாரம் திகட்டாத இனிப்புடன் மிக ருசியாக இருந் ததை உணர்ந்து, பாட்டியின் அன்பிற்கு நன்றி சொல்லி விட்டு அங்கிருந்து கிளம்பினர்.

மைவிழி அதற்குப் பின் அடர்ந்து மூங்கில் மரங்கள் நிறைந்த தோப்புக் காடு, மாஞ்சோலை குளத்தருவிக்கு கூட்டிப் போனாள். குளத்தை ஒட்டிய ஏரிக்கரையில் விதவிதமான பறவைகள். அடர்ந்த புதர்ச் செடிப் பக்கம் துள்ளி ஓடும் முயல்கள்.

அழகான மலைகளுக்கு இடையே மறையும் ஆரஞ்சு வண்ணச் சூரியன். அந்த மிதமான ஒளியில் பொன்னிற மாய் தகதகக்கும் குளத்து நீரோடை. உடம்பை சில்லென வருடும் மெல்லிய குளிர்காற்று.

எல்லாவற்றையும் வெகுவாய் ரசித்த உதயசந்திரன், திரும்பி மைவிழியைப் பார்த்தான். பின், ''ஆஹா...!

ஒன்றுக்கொன்று சரியான போட்டிதான்...!'' என சொல்லியவாறு அவன் பாட்டுக்கு சிரிக்க ஆரம்பித்தான்!

மைவிழி புரியாமல் விழிக்க... சிரித்து ஓய்ந்து விட்டு விளக்கினான். ''வேறு ஒன்றுமில்லை மைவிழி...! இவ்வளவு ரம்மியமான இயற்கை அழகோடு... உன் அழகும் சரிக்கு சமமாக எப்படி போட்டி போடுகிறது தெரியுமா? இந்த மாலைநேர மஞ்சள் வெயிலில் நீயும் ஒரு தங்க தேவதை போல் தான் ஜொலிக்கிறாய்?''

சட்டென முகம் சிவந்து போனாலும் அதை மறைக்கும் விதமாய் முகத்தைத் திருப்பியவள், ''நல்ல கண்டு பிடிப்புதான்...!'' என உதட்டைச் சுழித்தாள்.

அவன் விடாது அவளையே பார்ப்பது போன்ற உணர்வு அவளுக்குத் தோன்ற எரிச்சலுடன் அவன் பக்கம் திரும்பினாள்.

''இந்த ஆண்கள் எல்லாம் இப்படித்தான் பார்ப்பார்கள், சிரிப்பார்கள், பின் புகழ்வார்கள். பின் கடைசியில்...'' என இழுத்துவிட்டு... ''அதான் எனக்கு ஆண்களையே பிடிப்பதில்லை...!'' என்றாள்.

அவனோ கொஞ்சமும் அசராமல், ''எனக்கும் அப்படித் தான்! பேசுவார்கள், பழகுவார்கள். கடைசியில் அம்போவென விட்டுவிட்டுப் போய்விடுவார்கள். ஏமாந்த சோணகிரியாய் நிற்க வேண்டியது பரிதாபத்துக்குரிய இந்த ஆண்கள்தான்...!'' என்றான்.

''அப்படியா...? அப்படியானால் யாரும் உங்களை ஏமாற்றினார்களா...?''

அவன் பதில் சொல்லாமல் தலையை மட்டும் அசைத் தான்.



''யாரது...?'' என்றாள் ஆவலாய் கண்கள் மின்ன...

அவன் நீள மூச்சொன்றை இழுத்து வெளிவிட்டவன், ''அது பெரிய கதை. இப்போது என்னால் சொல்ல முடியாது. உன் அண்ணனிடமே கேட்டுத் தெரிந்து கொள்...'' என்றபடி நடக்க ஆரம்பித்தான் உதயசந்திரன்.

## 6



வீடு வந்த மைவிழிக்கு இருப்புக் கொள்ளவில்லை. அண்ணனிடம் கேட்டுத் தெரிந்து கொள்... என்று உதய சந்திரன் சொல்லிவிட்டான்.

அப்படி என்னவாய் இருக்கும்?

காதல் கதையா? அல்லது காதலில் தோற்ற சோகக் கதையா... எதுவாக இருக்கும்?

அன்று இரவு அவள் தனசேகரனிடம் கேட்டபோது, அவன் உடன் பதில் சொல்லாமல் அவளது முகத்தையே கூர்ந்து பார்த்தான்.

''எதற்காக கேட்கிறாய்?'' என்றான்.

''அது ஒன்றுமில்லையண்ணா... இன்று பேச்சுவாக்கில்... பெண்கள் ஏமாற்றுக்காரர்கள்... யாரோ அவரை ஏமாற்றி விட்டது போல் சொன்னார். என்ன ஏதுவென்று கேட்டால்... விஷயத்தை நான் சொல்ல மாட்டேன். உன்

அண்ணனிடமே கேட்டுத் தெரிந்துகொள்...'' என்று சொல்லிவிட்டார்.

மைவிழி விளக்கியதும், பெரிதாய் தலையாட்டியபடி பேச ஆரம்பித்தான் தனசேகரன்.

''அது... அவன் கல்லூரிப் படிப்பை முடித்த காலத்தில் ஏற்பட்ட காதல் தான் கண்ணம்மா. அந்தப் பெண் பெயர் மஞ்சரி. ஏறக்குறைய உதயசந்திரனுக்கு தூரத்து உறவு தான். அதனால் அடிக்கடி பார்த்து பேச சந்தர்ப்பம் ஏற்பட, அது கொஞ்ச நாளில் காதலாய் மாறிவிட்டது.

இருவரும் உயிருக்குயிராய் 'நீ இன்றி நான் இல்லை...' என்பது போல் காதலித்திருக்கிறார்கள். அப்போது ஒரு சந்தர்ப்பத்தில் உதயசந்திரனின் பணக்கார நண்பன் ஒருவன் இருவருக்கும் அறிமுகமாகி இருக்கிறான்.

அந்த நண்பன் உதயசந்திரனை விட பணக்காரன். பல கோடிகளுக்கு அதிபதியான பிறவிப் பணக்காரன். அவன் அந்த மஞ்சரியிடம் பேசிப் பழக ஆரம்பிக்க... ஒரு கட்டத்தில் மஞ்சரி மனம் மாற ஆரம்பித்தாள்.

பெரும் கோடீஸ்வரனான அவனைக் கண்டு அவளுக்கு காதல் மட்டுமல்ல, காதல் மயக்கமே வந்து உதயசந்திரனை உதறி விட்டு அவனைத் தீவிரமாய் காதலிக்க ஆரம்பித்து விட்டாள். திகைத்துப் போனான் உதயசந்திரன்.

ஆனால் அவனை அதிர்ச்சியாக்கும்படி அடுத்த ஒரே மாதத்தில் உதயசந்திரனை ஒரேடியாய் உதறி டாடா காட்டிவிட்டு அந்த நண்பனை ஒரு கோயிலில் வைத்து கல்யாணமும் செய்து கொண்டாள் மஞ்சரி.



நம்ப முடியாமல் திகைத்து, அப்படியே ஆடிப் போய் விட்டான் உதயசந்திரன். பணத்துக்காக அலையும், இப்படி ஒரு கேவலமான பெண்ணைப் போய் காதலித்து விட்டோமே என வருந்தினான்.

அந்த வருத்தத்தில் இடிந்து போனவனுக்கு, எதிலும் ஈடுபட முடியாமல் விரக்தியான மன உணர்வே ஏற்பட்டது. நான் தற்செயலாய் அவனது அலுவலகம் சென்று பார்க்கும்போது, இடித்த புளி போல் மனம் வெறுமையாகி கல் போல் உட்கார்ந்திருந்தான்.

கலகலப்பாக ஒரு பேச்சும் சிரிப்புமாய் இருப்பவன், இப்படியாகிவிட்டானே என்ற கவலையும் எனக்கு வந்தது. அதனால்தான் அவனுக்கு ஆலோசனைகளை... சொல்லி உனக்கு இடமாற்றம் அவசியம் தேவை... என வலியுறுத்தி, நம் கிராமத்திற்கு வரும்படி வற்புறுத்தவும் செய்தேன்!'' என முடித்தான் தனசேகரன்.

ஐயோ... பாவம்...! என அன்று முழுவதும் அவனுக்காக வருத்தம் கொண்டாள் மைவிழி. மறுநாள் உதயசந்திரனை தற்செயலாய் வயற்பரப்பு பக்கம் காலாற நடந்து கொண்டிருந்த போது சந்திக்க நேர்ந்தது.

''என்ன... கிராமத்திலும் நடைப்பயிற்சியா?'' என கேலிப் புன்முறுவலுடன் கேட்டவனை, 'இவனா அப்படி யாரோ ஒரு பெண்ணை உருக உருக காதலித்து ஏமாந்தவன்... பார்த்தால் அப்படிக் கணிக்க முடியவில்லையே...?' என்பது போல் உற்றுப் பார்த்தாள்.

அவளது மைவிழிக் கண்களுக்கிடையே சொடுக்கிட்டான் அவன். ''ஹலோ... என்னாயிற்று? அதற்குள் கற்பனையில் சிறகடித்து எங்கு பறந்தாயிற்று...?'' என்றதும்,

"ஒன்றுமில்லை...! ஒன்றுமில்லை...!" என்றவாறு நினைவுக்கு வந்தாள்.

"ஒன்றுமில்லையா...? சரிதான்...!" என அவன் மறுபடி சிரிப்புக்குப் போனான்.

'இவனிடம் அந்த காதலித்து ஏமாந்த கதை பற்றி கேட்டால் என்ன...? இவன் வாயாலே அதை முழுவதும் தெரிந்து கொண்டால் என்ன...?' என்று நினைப்பு அவளுள் ஓடியது.

ஆனால் அதற்கு முன்பாக உதயசந்திரன், "உங்களிடம் ஒன்று கேட்க வேண்டும்..." என ஆரம்பித்த போது திகைக்கவே செய்தாள்.

"என்னிடமா... என்ன விஷயம்?" அவள் ஆச்சரியமாய் புருவம் உயர்த்த, "உங்களுக்கு ஆண்களை அவ்வளவாய் பிடிக்காது.. என்று ஒரு கொள்கை போல் வைத்திருப்பதாய் தனா... சொன்னான்... அது உண்மையா?" என்றான்.

பலமாய் தலையாட்டியவள், "அவ்வளவாய் இல்லை... சுத்தமாகவே பிடிக்காது..." என திருத்தினாள்.

"ஓஹோ...! அப்படியா...? அதற்கு என்ன காரணமோ...?" என்றான் கேலியாய்.

மைவிழி முதலில் இவனிடம் எதற்கு சொல்ல வேண்டும் என நினைத்தவள் பின் கடகடவென சொல்லிவிட்டாள்.

"பக்கத்து டவுனுக்குச் சென்று கல்லூரியில் படிக்கும் போது ஏற்பட்ட அனுபவங்கள் அவை. ஒவ்வொரு வருட படிப்பின் போதும், இரண்டு மூன்று சக மாணவர்கள் முதலில் பல்லைக் காட்டுவதும் பின் மறுநாள் காதல் கடிதத்தை நீட்டியவாறு காதல் வசனம் பேசுவதும் எனக்கு மிகவும் எரிச்சலை உண்டாக்கிற்று. அவர்களது ரோமியோத் தொல்லையால் அடிக்கடி பிரின்ஸிபால் வரை விஷயம் போய் அவர் கண்டித்து அடக்கியதாலே என்னால் நிம்மதியாய் படிப்பை முடிக்க முடிந்தது. அதனாலே இந்த ஆண்கள் மீது அளவு கடந்த வெறுப்பொன்று ஏற்பட்டு விட்டது..." என பெரிய கதை போல் அவள் சொல்லி முடிக்க கடகடவென சிரிக்க ஆரம்பித்து விட்டான் அவன்.



"என்ன சிரிக்கிறீர்கள்?"

"மலரை... வண்டுகள் மொய்ப்பது இயற்கை தானே...? இதற்குப் போய் இந்தக் குதியாட்டம் தேவையில்லையே...?" என்றான்.

"மலரா...?"

"ம்ம்... நீங்கள் ஒரு அழகான மலர் போன்று தான். உங்கள் அழகில் மயங்கி அந்த ரோமியோ வண்டுகள் கவிதை பாடியிருக்கிறது. அதை நீங்கள் ரசிப்பதை விட்டு விட்டு..." மறுபடியும் அவன் பெரிதாக சிரிக்க ஆரம்பிக்க, அவளுக்கு எரிச்சலே வந்தது.

முறைத்தபடியே அவனைப் பார்த்தவள், "எல்லாம் ஆண்கள் புத்தி...!" என்றாள் வெறுப்புடன்.

"அப்படியா...? அது என்ன ஆண்கள் புத்தி...?"

"முதலில் பார்ப்பார்கள். பின் வம்பிழுக்க பேசுவார்கள். பின் காதல், அது இதுவென உளற ஆரம்பித்து விடுவார்கள்..."

உதயசந்திரன் சிரிப்பை, கேலியை நிறுத்திவிட்டு சீரியஸாய் அவளைப் பார்த்தான்.

''நீங்கள் மட்டும் என்னவாம்? நீங்களும் அப்படித் தானே...?''

''என்ன நானா... என்ன சொல்கிறீர்கள்?''

''நீங்கள்... என்றால்... நான் உன்னைச் சொல்லவில்லை... அவள்... அவள்... மதுரத்தைச் சொல்கிறேன்...'' என்றான்.

மதுரம் என்ற வார்த்தை அவளுள் மறுபடியும் ஸ்விட்ச் போட்டாற் போல் நிமிர்த்தியது.

''என்ன... மதுரமா...?'' என்றாள் திகைப்பாய்.

''ம்ம்... அவள் தான்... என்னைப் பார்த்து என்னமாய் வழிகிறாள்... குழைகிறாள்... அவள் என்னைப் பார்க்கும் பார்வைகூட அப்படியே வழிசலாய்... ஏக்கமாய்... எதையோ உணர்த்துவது போல்...''

''நல்ல ஆராய்ச்சிதான்...!'' என்றாள் அவள் இகழ்ச்சியாய்.

''ஆராய்ச்சி அல்ல... உண்மையில் நடக்கிறது. தினம் எனக்கு சாப்பாடு எடுத்து வரும் மதுரம்... நிஜமாய் என்னிடம் செய்கிற விஷயங்களைத்தான் சொல்கிறேன்...''

அவன் சொல்லச் சொல்ல மைவிழிக்கு முதன் முதலாய் உதயசந்திரனைப் பார்த்ததும் செய்த தேவையில்லாத உடல் நெளிப்பும், அவள் காட்டிய அதீத கவனமும் தான் ஞாபகத்திற்கு வந்தது.

மதுரம் எதற்காக அப்படி நடந்து கொள்ள வேண்டும்? என்ன காரணம்?

ஒருவேளை அவள் மனதில், அப்படி ஒரு ஆசை இருக்குமோ?



திடும்மென முடிச்சு போல் அந்த எண்ணம் விழுந்து மைவிழியினுள் வலுப்பெற அவளையறியாமல் அவளது முகம் மாறி இறுகியது.

அதை கவனித்த உதயசந்திரன், ''என்ன என்னாயிற்று?'' என்று வினவ, ''ஒன்றுமில்லை...! நான் வருகிறேன்...'' என்றபடி வேகமாய் அங்கிருந்து குழப்பத்துடன் அகன்றாள் அவள்.

# 7



மைவிழி மதுரம் விஷயத்தை முதலில் அவ்வளவு பெரிதாய் நினைக்கவில்லை தான். சின்னப் பெண். பட்டணத்துக்காரனான உதயசந்திரனை வியந்து அண்ணாந்து பார்க்கிறாள் என்று நினைத்தாள்.

அவள் அவனைப் பார்த்ததும் காட்டுகிற தேவையற்ற உடம்பு நெளிப்பும், பற்களைக் காட்டிக் கொண்டே முகத்தில் ஓடும் 'குபீர்' பரவசமும் வேறு எதையோ உணர்த்தியது.

அதற்கு ஏற்றாற் போல் மதுரம் உதயசந்திரன் ஞாயிற்றுக் கிழமைகளில் 'குயில் கூடத்தில்' நடக்கும் சிறுமியர்களின் நாட்டிய பயிற்சியை காண வரும்போது மெனக்கெடுத்து அவளும் வந்தாள்.

வந்தவள் சும்மா நில்லாமல் ஒருநாள், நாட்டிய உடையுடன் வந்து... ''எனக்கும் பரதம் தெரியும். மைவிழி போல நானும் முறைப்படி பயின்றவள்தான். என் நாட்டியத்தைப் பார்க்கிறீர்களா...?'' என்று புருவம் உயரக் கேட்க தலையசைத்து விட்டான் உதயசந்திரன்.

குயில் கூடத்தின் கம்பளம் விரிக்கப்பட்ட சிறிய ஸ்டேஜில் டேப் ரிக்கார்டில் ஜதிகள் காசெட்டைப் போட்டு விட்டபடி தாம் தீம்மென அவள் பாட்டுக்கு ஆட ஆரம்பித்து விட்டாள். சிறுமிகளுக்கு நடன அசைவுகளை சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்த மைவிழிக்கு அதைப் பார்த்ததும் என்னவோ போல் ஆயிற்று!

இது அவள் பாட்டு, நடனம் சொல்லிக் கொடுக்க அமைத்திருக்கும் கூடம். ஒரு வார்த்தை அவளிடம் சொல்லவில்லை. அனுமதி கேட்கவும் இல்லை. அவள் பாட்டுக்கு ஆட ஆரம்பித்து விட்டாளே!

சரி... அவள்தான் அப்படி ஆடுகிறாள் என்றால், இந்த உதயசந்திரனுக்கு அறிவு எங்கே போனது? அவனும் பக்கத்தில் கிடந்த நாற்காலியில் ஹாயாய் சாய்ந்த உட்கார்ந்து கொண்டு, கால் மேல் கால் போட்டபடி அதை வெகுவாய் ரசிக்கும் பாவனையில்...?

இவனுக்கு அப்படி என்னதான் ஆயிற்று?

மதுரம் ஆடியதைவிட அதை ரசிக்கும் பாவனையில் உதயசந்திரன் முக பாவனை காட்டியது, கடைசியில் எழுந்து நின்று கை தட்டியது எல்லாம் தான் மைவிழியை மிகவும் எரிச்சல் படுத்தியது.

அவன் கைதட்டலில் மதுரம் பெரிய விருதே கிடைத்து விட்டது போல் முகம் முழுவதிலும் பூரிப்பை



கொண்டு வந்து சந்தோஷத்தில் திண்டாடினாள்... அதைக் கண்ட மைவிழியின் முகம் தான் இறுகியது.

திரும்பிய உதயசந்திரனும் மைவிழியின் முகம் போகும் போக்கை கவனித்து விட்டான்.

ஒருவித ரசமான சிரிப்புடன் அவள் பக்கம் வந்தவன், ''ஏன் மைவிழி; நம் மதுரத்தின் ஆட்டத்தை பார்த்து விட்டேன். உங்களது ஆட்டத்தையும் பார்க்க ஆசையாய்த் தான் இருக்கிறது. அந்த பாக்கியம் எனக்குக் கிடைக்குமா?'' என்றான்.

இவன் பார்க்க வேண்டுமென்றால் உடனே ஆடிவிட வேண்டுமாக்கும்? எனக்கு வேறு வேலை வெட்டி இல்லை...? என சினமாய் அவள் நினைத்து நெஞ்சுல் தாழ... அதை யூகித்தவன் போல், ''உங்களுக்கு நிறைய வேலை இருக்கும்... மைவிழி. ஆனால் உங்களது நடனம்... அதுவும் தனா சொல்லியிருக்கானே. நீங்கள்... மயில் போல் அபிநயித்து மயிலாட்டம் என்னும் ஒரு நடனம் ஆடுவாயாமே... அது... ரொம்பவும் சிறப்பாக இருக்கும் என அவன் சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறேன். அதனாலே கேட்டேன்...'' என அவன் விளக்கம் சொல்லவும் அவள் ஓரளவு மௌனமானாள்.

பின்னால் நின்ற மதுரம் சும்மா இருக்காமல், ''எனக்கும் அந்த மயிலாட்ட நடனம் தெரியும்...'' என்றாள்.

உதயசந்திரன் அதைக் காதில் வாங்காதவன் போல் மைவிழி பக்கமே பார்த்தான்.

பதில் சொல்லவில்லை என்றால் சரியாக இருக்காது என நினைத்தவள், ''இன்னொரு முறை ஆடுகிறேன்...'' எனக் கூறி சமாளித்தாள்.

மைவிழிக்கு முக்கியத்துவம் கொடுத்து உதயசந்திரன் பேசுவதைக் கண்டு மதுரத்தின் முகம் கொதிப்படைவது மைவிழிக்குப் புரிந்தது.

இவளுக்கு என்ன வந்தது? ஏன் இந்த வரத்து வருகிறாள்? என்றே நினைததாள்.

ஆயினும் விடாமல் உதயசந்திரன் முன் வந்து, "நிஜமாக என் நாட்டியம் நன்றாக இருந்ததா...? நீங்கள் ரசித்தீர்களா?" என்றாள் பற்கள் முழுவதையும் காட்டிக் கொண்டு.

"ம்ம்... ம்ம்..." என தலையாட்டினான் உதயசந்திரன்.

அவன் தனக்காக வாயைத் திறக்காமலே அப்படி தலையாட்டுவது மைவிழிக்குப் புரிந்தது.

இவன் ஏன் இப்படிச் செய்ய வேண்டும்? நமக்காக ஏன் மெனக்கெட வேண்டும்? என அதற்கும் சினமே அவளுள் வந்தது.

ஒரு வழியாய் அவளை மேலும் சோதிக்காமல் உதயசந்திரன் விடைபெற்று, அங்கிருந்து கிளம்பி விட்டான்.

அவன் கிளம்ப... வால் பிடிப்பது போல் மதுரமும் அவனைப் பின் தொடர்ந்தாள். ஏதேதோ... தேடிப் பிடித்துப் பேசி தேவையில்லாமல் நொடிக்கொரு தரம் சிரித்து நடந்தாள்.

இந்த மதுரம் கிராமத்துப் பெண்ணாய் ஆண்களைக் கண்டாலே வெட்கமாய் ஓடி ஒளிபவள். இந்தப் பேச்சு பேசுகிறாளே? என மைவிழி வியந்தாள்.

கூடவே, அவள் உதயசந்திரனுடன் பேசினால் என்ன! நமக்கு ஏன் ஒருவித பொறாமை உணர்ச்சி தலை தூக்குகிறது? என திகைப்பாகவும் நினைத்தாள்.



அன்று அப்படி ஒரு சலனம் ஏற்பட்டதாலோ, என்னவோ அன்று முழுவதும் நடன வகுப்பில் சிறுமியர்களுடன் பயிற்சி செய்ய முடியாமல் தடுமாறினாள்.

இரவு தனசேகரன் வந்தவன், பேச்சுவாக்கில் அந்த விஷயத்தைச் சொன்னான். உதயசந்திரனுக்கு இது போன்ற டான்ஸ், கச்சேரி என்றால் பிடிக்கும் எனவும், பட்டணத்தில் ஒவ்வொரு சபாவாக தேடிப் போய் கச்சேரிகளை ரசிப்பான் எனவும் சொன்னான்.

மைவிழியும், 'ஓ... அதனால் தான் தேடி வந்து ஆவலாய் நடனம் பற்றியெல்லாம் கேட்டானா...?' என நினைத்தவள், அவன் முன்கூட ஆடிக் காட்டியிருக்கலாமே...? எனவும் நினைத்தாள்.

ஆனால் டக்கென மதுரம் ஆடியது அவன் வெகுவாய் ரசித்து கைதட்டியது எல்லாம் ஞாபகத்திற்கு வந்து உறுத்தியது. அதிலும் உதயசந்திரனை சுற்றிச் சுற்றி வரும் மதுரத்தின் பாங்கு, அவள் முகம் ஓடும் பரவசம் எல்லாம் மீண்டும் நினைவுக்கு வந்தது.

இரண்டு நாளுக்கு முன்புகூட உதயசந்திரன் பேச்சோடு, தன்னை குழையக் குழைய ஒரு பெண் சுற்றி வருவதாகவும், அவள் பெயர் மதுரம் எனவும் புதிர் போல் சொன்னதும் உரைத்தது. அன்று அவளைப் பற்றி சொன்னவன் மதுரம் பற்றி அவனது கருத்தை எதுவும் சொல்லாமல் போய்விட்டானே என்று நினைத்தாள்.

மேலும் தினம் தினம் தன்னைவிட மதுரம் தான் உணவு கொடுக்கும் சாக்கில் பலமுறை உதயசந்திரனைச் சந்திக்கும் சாக்கில் சந்திக்கிறாள், பேசுகிறாள் என்பது புரிந்தது.

ஆரம்பத்தில் அவளே தினமும் இலையைப் போட்டு உணவைப் பரிமாற, அதை சங்கடமாய் உணர்ந்த உதயசந்திரன் அதைத் தவிர்க்கவே, ''சிறிது நேரம் கழித்து, நானே சாப்பிட்டுக் கொள்வேன். உணவை அப்படி வைத்து விட்டுப் போ...!'' என உறுதியாய் சொல்லி விட்டான்.

நிஜமாகவே சிறிது நேரம் கழித்து சாப்பிட விரும்புகிறானா... அல்லது தன்னை விரட்டுவதற்காக சொல்கிறானா... என புரியாமல் வந்த மதுரம் அங்கிருந்து விழித்தபடியே அகன்றாள்.



# 8

மதுரம் அன்று இரவு தூக்கம் இல்லாதவளாய் படுக்கையை விட்டு எழுந்து குட்டிப் போட்ட பூனை போல் குறுக்கும் நெடுக்கும் நடந்து கொண்டிருந்தாள்.

அவளுக்கு எப்போதும் இந்த பட்டணத்துக்காரர்கள் பகட்டுத்தனம் என்றெல்லாம் அதன் மீது ஆர்வமும் ஆசையும் உண்டு. அதனாலே பட்டணத்துக்காரனான வாட்டசாட்டமான உதயசந்திரனைப் பார்த்ததும் அந்த முதல் சந்திப்பிலேயே மயங்கி விட்டாள்.

சட்டை இல்லாமல் முண்டாசு கட்டிக்கொண்டு வயல் பரப்பில் ஏர் பிடிக்கும் கிராமத்துக் காளைகள் முன்



பேண்ட் சர்ட்டுடன் அவன் கம்பீரமாக இருந்தது அவளை ரொம்பவும் ஈர்த்து விட்டது. அதைவிட அம்மா அன்று அவனைப் பற்றி, ''தம்பி பெரிய கோடீஸ்வரனாம். பட்டணத்தில் நிறைய மில்கள், பேக்டரிகள் என பல தொழில்கள் நடத்துகிறானாம்'' என்று சொன்னது அவளது ஆசைக்கு எண்ணெய் ஊற்றி மனதுள் கிடுகிடுவென வளர வைத்தது.

இந்த கிராமத்தில் உட்கார்ந்து கொண்டு... சதா மோட்டு வளையைப் பார்த்துக் கொண்டு... ஆலமரத்தையும், மேட்டுத் திடலையும் சுற்றி வந்து கொண்டு... பழைய ஓட்டு வீட்டில் வாழ்வது ஒரு வாழ்க்கையா? என அடிக்கடி அவள் சலிப்பாள்.

ஒரு பணக்காரியாய், பங்களாவில் பணியாட்கள்... சென்று வர விதவிதமான கார்கள், கழுத்தில் பளபளக்கும் நகை நட்டுகள் என நாலு பேர் அண்ணாந்து பார்த்து வாயைப் பிளக்கும் பகட்டான வாழ்க்கையொன்று வாழ வேண்டும் என்பது தான் அவளது கனவு, லட்சியம்.

அதனாலே உதயசந்திரனைப் பார்த்ததும், அவன் கோடீஸ்வரன் என்றதும், அவன் தான் தனது கனவு நாயகன். எப்படியும் அவனை வளைத்துப் போட்டுவிட வேண்டும் என்று முடிவு பண்ணிக் கொண்டாள்.

அதிலும் உதயசந்திரன் கிராமத்துப் பெண்ணாய் அவள் ஓடி ஒளிந்து வெட்கப்படுவதைப் பார்த்து வெகுவாய் ரசித்தது, அதற்காய் அவளை பக்கத்தில் அழைத்துச் சிரிக்க சிரிக்கப் பேசியது எல்லாம் அவளை ரொம்பவும் கிளர்ச்சியூட்டியது.

மேலும் உதயசந்திரனுக்கு தினம் தன் வீட்டில் இருந்துதான் உணவு போகப் போகிறது. அதை தான்

தான் தினம் கொண்டு செல்லப் போகிறோம் என்பதை
கேள்விப்பட்ட போது அவள் மனது உற்சாகத்தில் குதி
போடவே ஆரம்பித்துவிட்டது.

பழம் நழுவி பாலில் விழுவது போல் எவ்வளவு அரி
சந்தர்ப்பம் இது...? என நினைத்தாள் அவள்.

தினம் அவனுக்கு உணவு எடுத்துச் செல்லும் முன்
நிலைக்கண்ணாடி முன் நின்று ஒரு அரை மணி
நேரமாவது செலவழிப்பாள். தனது மாநிறமான முகத்தில்
ஸ்நோ க்ரீம்களை தடவி, வெள்ளையாய் பளபளக்க
வைத்து, முடிக் கற்றைகளை சரி செய்து, முன் நெற்றிக்கு
இழுத்து, கவர்ச்சி தோன்றும் வண்ணம் படரச் செய்து
ஜிமிக்கி, தொங்கட்டான் என்று தனது பாவாடை
தாவணிக்கேற்ற உடையலங்காரத்துடன் கிளம்புவா
அவள்.

அப்படி முதல் நாள் அவள் உதயசந்திரனுக்கு இப்ப
ஒரு வண்டி மேக்கப் சமாச்சாரங்களை போட்டு
கொண்டு போய் உணவை நீட்ட, அவன் கடகடவெ
சிரித்து விட்டான்.

''என்ன மதுரம். இப்படி வெள்ளை அடித்தாற் போ
மேக்கப் செய்து கொண்டு வந்திருக்கிறாய்?'' எ
அவன் கேட்கவும், திடுக்கிடவே செய்தாள்.

''ஏன் நன்றாக இல்லையா?'' என அவள் பயக்குரலி
கேட்க, மேலும் சிரித்த உதயசந்திரன், ''மதுரம் இ
அந்த மேக்கப் எல்லாம் உனக்குத் தேவையில்லை
இயற்கையாகவே நீ அழகாய்த்தான் இருக்கிறாய். மே
அந்த பகட்டில்லாத கிராமத்து அழகுதான் என
ரொம்பப் பிடிக்கும்...'' என்று கூறிவிட மறுநாள் மு



ஸ்நோ க்ரீம்களை எல்லாம் ஒதுக்கிவிட்டு, அவன் விரும்பியது போன்ற ஒப்பனை செய்து கொண்டு அவன் முன் போய் நின்றாள்.

கைகளைத் தட்டி நிஜமாகவே அவளைப் பாராட்டினான் உதயசந்திரன்.

அது சாதாரண பாராட்டுதான் என்றாலும் அவளுக்கு அது ரொம்பவும் முக்கியமானதாக உதயசந்திரன் தன்னை ரசித்துச் சொன்னதாய் உணர்ந்தாள்.

அத்தோடு விடாமல், மைவிழி அவளைப் பார்த்து, ''என்ன மதுரம், ஸ்நோ, க்ரீம், செண்ட் வகையறாக்களை திடீரென விட்டு விட்டாய்?'' என்று கேட்டபோது பதிலுக்கு உற்சாகமாய், ''உதயசந்திரன் சாருக்கு பிடிக்கவில்லை... அதனால் எனக்கும் பிடிக்கவில்லை!'' என்றாள் பூடகமாய்.

உதயசந்திரன் பெயரைக் கேட்டதும் மைவிழி அகல மான பார்வை பார்க்க, ''அதாவது நான் இயற்கையாக இருக்கும் போதுதான் அழகு கூடுகிறதாம். அவரும் ரசித்துப் பார்க்கிறாராம். அதான் மாறிவிட்டேன்...'' என்றாள்.

''ரசித்துப் பார்க்கிறார்...'' என வேண்டுமென்று அழுத்தம் கொடுத்து மதுரம் உச்சரித்தது மைவிழிக்கு உள்ளுக்குள் நகைப்பையே உண்டு பண்ணியது. தொடர்ந்து அவள் முகத்தில் ஓடிய பரவசம் அவளைத் திகைப்பாக்கியது.

கூடவே உதயசந்திரனைப் பார்க்கும் போதெல்லாம் அவள் கொடுக்கிற தேவையில்லாத நெளிவு, உடம்பு அசைவுகள் எல்லாம் மைவிழியின் ஞாபகத்திற்கு வந்தது.

சின்னப் பெண்! படிப்பறிவில்லாத கிராமத்துப் பெண்! உதயசந்திரனோ நவநாகரீகமான பட்டணத்து ஆள்! ஏதேதோ கனவுகளை வளர்த்து பின்னால் இவள் ஏமாந்துவிடக் கூடாதே... என்ற பயமும் அவளுள் எழுந்தது.

மைவிழி இது பற்றி பேசி எச்சரிக்கலாம் என்றால்... அவள் எடுத்துச் சொன்னால் மட்டும் கேட்கவா போகி றாள் என்றே தோன்றியது.

அதனால் யோசனை செய்தவள், உதயசந்திரனிடமே இது பற்றி நேரிடையாக பேச நினைத்து அது சரி வராது என்று முடிவு செய்து அண்ணனிடமே போய்ச் சொன்னாள்.

தனசேகரன் அவளிடம் விஷயத்தைக் கேட்டு நிஜ மாகவே திகைப்புக்குப் போனவன், ''மதுரமா...? நன் றாகத் தெரியுமா?'' என்றான் நம்ப முடியாதவனாய்.

அவள் குயில் கூடத்தில் மதுரம் அவன் முன்னிலை யில் நடனமாடியதையும், தினம் உணவை உதயசந்திர னுக்கு கொடுக்கும் சாக்கில் பேசி வருவதையும், அவள் உடையலங்காரத்தில் செய்த மாற்றங்களையும் விளக்கிச் சொன்னாள்.

அவள் முடித்ததும் தனசேகரன், யோசனையோடு முகம் மாறியவன், ''அப்படி விஷயம் போகிறது என்றால்...'' என்றவன், ''ஏன்... கண்ணம்மா... அந்த மதுரம் அப்படிக் காதலித்தால் காதலித்து விட்டுப் போகட்டுமே... நமக் கென்ன வந்தது?'' என்றான் சாதாரணமாக.

தனசேகரனின் இந்த பதிலைக் கண்டு மைவிழி திகைத் தாலும், அண்ணன் சொல்லியவாறு தன் முகக் குறிப்பை அறிய தன்னையே உற்று நோக்குவது கண்டு திடுக்கிடவும் செய்தாள்.



ஆனாலும் தன் முக மாற்றத்தை அவன் அறியாதபடி, ''என்ன அண்ணா... நீ...? மதுரம் நம் வீட்டு கணக்குப் பிள்ளையின் மகள். அவரோ உன் உற்ற நண்பர். இருவரும் நமக்கு மிகவும் வேண்டியவர்கள். அதனால்தான் சொல் கிறேன். நாளை... மதுரம் ஏதாவது நினைத்து அது நடக் காமல் போய் அவள் ஏமாந்து விட்டால்...?'' என பேசி நிறுத்த தனசேகரனோ, கொஞ்சமும் பதட்டமில்லாமல் முன்பு போலவே சாதாரணமாக பார்த்தான்.

''நீ சொல்வது புரிகிறது கண்மணி... ஒரு வேளை அப் படி மதுரம் ஏமாறாமல் அவள் நினைத்தபடியே எல்லாம் நடந்துவிட்டால்... எல்லாம் நல்லதுதானே...?'' என்றான் திரும்பவும் அவளை நோக்கி ஆழமான பார்வையை வீசியபடி.

'ம்ஹூம்! அண்ணன் நம்மிடம் வேறு எதையோ தேட ஆரம்பித்து விட்டான். இனியும் இவனிடம் பேசிக் கொண்டிருந்தால் நமக்குத் தான் ஆபத்து...' என மைவிழி நினைத்தவள், ''ம்ம்.. நல்லதுதான்!'' என சுரத்தில்லாத குரலில் சொல்லியவாறு வேகமாக அங்கிருந்து அகன்றாள்.



# 9

மைவிழி திடும்மெனத்தான் ஒரு நாள் அமர்ந்து திருப்பி யோசித்துப் பார்த்தாள். திடுக்கிடவும் செய்தாள்.

எல்லாம் உதயசந்திரனுடன் பழகுவது பற்றி தான். மைவிழி இயல்பிலே கலகலப்பானவள். எதிலும் ஓர் ஆர்வத்துடன் ஈடுபடுவாள். முனைந்து முன்னின்று எதிலும் நிற்பாள். கூச்சம் வெட்கம் என ஓடி ஒளிய மாட்டாள்.

அதனாலே உதயசந்திரன் பட்டணத்துக்காரனாய் இருந்தாலும் சரிசமமாகவே பழகினாள். அவன் கேலிக்கும் கிண்டலுக்கும் பொறுத்துக் கொள்ளாமல் தக்க பதிலடி கொடுத்தாள். புத்தகங்கள் படித்து தெரிந்து கொண்ட விஷயங்களை அறிவுப் பூர்வமாக விவாதிக்கவும் செய்தாள்.

இதற்காக சந்திக்கும் போதெல்லாம் இருவரும் எதையாவது பேசுவது வழக்கமாயிற்று. முதலில் வெறும் வணக்கத்தோடு சென்றவர்கள், நின்று நிதானித்து பொது விஷயங்களை எல்லாம் இழுத்துப் போட்டு பேசியது யார் கண்களை உறுத்தியதோ இல்லையோ மதுரத்தின் கண்களை உறுத்தியது.

அதனால்தான் மைவிழிக்கு உற்ற தோழியாய் பழகி வந்த அவள் அடிக்கடி அவளிடம் கோபப்பட்டாள். தேவையில்லாமல் தன் எரிச்சலைக் காட்டினாள். ஏன் சில சமயம் ஒன்றுமில்லாத விஷயத்திற்காகச் சண்டைகூட போட்டாள்.

அப்போதுதான் மைவிழிக்கு தெளிவாகப் புரிந்தது. மதுரத்தின் கோபத்திற்குக் காரணம் உதயசந்திரன்! உதயசந்திரனோடு அவள் அடிக்கடி பேசுவதைக் கண்டு பொறாமைப்படுகிறாள் இந்த மதுரம்!

மதுரத்தின் பொறாமையைவிட இன்னொரு விஷயமும் வெகுவாய் உறுத்தி, மைவிழியை சிந்திக்க வைத்தது.



அது... தினம் எழுந்ததும் உதயசந்திரனிடம் பேச வேண்டும்... இது பற்றியெல்லாம் அவனிடம் விவாதிக்க வேண்டும்... இன்று அவனைப் பார்க்க வேண்டும் என்றெல்லாம் ஆர்வம் அவளையறியாமல் அவளுள் எழுந்ததுதான்.

என்ன... இது...? என்ன இருந்தாலும் உதயசந்திரன் அந்நியன். அண்ணனின் நண்பனாய் கொஞ்ச நாள் இங்கு தங்கிவிட்டுச் செல்லப் போகிறவன். அவன் ஏதோ நேரம் போகவில்லை என்பதற்காக தன்னிடம் பேசிச் செல்லலாம். அதற்காக... நாமும் தினம் வலியப் போய் பேசுவதா?

வலியப் போய் பேசுவதுகூட பரவாயில்லை. ஆனால் அப்படிப் பேசுவதைப் பேச வேண்டும் என்று தினம் மனம் எதிர்பார்க்க ஆரம்பித்து விடுகிறதே...?

அந்த எதிர்பார்ப்பு பெரும் தவறு அல்லவா? அவளையறியாமல், அவள் யோசிக்காமல் விட்ட கவனப்பிழை அல்லவா?

அதை அப்படியே விட்டால் எதிர்பார்ப்பு எல்லாம் கூடி, வீணான அர்த்தங்களுக்கு அவளை கூட்டிச் சென்று... பின் பெரும் ஆபத்தில், இக்கட்டான சூழ்நிலையில் கூட அவளை நிறுத்திவிடக் கூடும் அல்லவா...?

கூடும்... என்ன...? கண்டிப்பாய் நிறுத்திவிடும்!

அப்போது அவள் நிலைப்பாடுதான் என்ன?

பார்த்தால்... கொஞ்சம் பேசினால்... அவ்வப்போது சிரித்தால்... கடைசியில் 'அது'தானா? அப்படி எண்ணம் கொண்டு கல்லூரி நாட்களில் காதல் கடிதங்களை நீட்

டிய எத்தனை ரோமியோக்களை அவள் விரட்டியிருக்கிறாள்?

அப்படி விரட்டி அவர்களை கேவலமாக நினைத்தவள், கடைசியில் அவர்கள் பாதையையே தனக்காக தேர்ந்தெடுப்பாளா?

அப்படித் தேர்ந்தெடுத்தால் இந்த உதயசந்திரன்தான் அவளைப் பற்றி என்ன நினைப்பான்?

ஆண்களைப் பற்றி என்னென்னவோ மட்டமாக பேசினாய்... இதில் ஆண்களைப் பிடிக்காத கொள்கை என்று வேறு பறை சாற்றினாய்? கடைசியில் நீயும் அப்படித்தானே? எல்லாம் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்தான்!

அவளை கேலி செய்து அடக்க முடியாமல் சிரிக்கக் கூட செய்வான்.

மேலும் இந்த உதயசந்திரன் பட்டணத்துக்காரன் மட்டுமல்ல. பெரிய தொழில் அதிபனாய் வளைய வரும் கோடீஸ்வரன். நண்பனின் தங்கை என இரண்டு வார்த்தை சிரித்துப் பேசலாம் வளைத்துப் போடலாம் என நினைத்து விட்டாயா? என கடைசியில் அவளை நிற்க வைத்து எதிர் கேள்வி கேட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை...!

பலவாறாக சிந்தித்து பயந்தவள், இப்படியொரு ஆபத்தான வழியைத் தொடர்வது மிகவும் தவறானது.

உடனடியாய் உதயசந்திரனுடன் ஏற்படும் இந்தப் பழக்கத்தை, ஒருவித நெருக்கத்தை நிறுத்தியாக வேண்டும் எனவும் தீர்மானம் கொண்டாள் அவள்.



அதனாலே கொஞ்சம் கொஞ்சமாக அவனைப் பார்ப்பதை, பேசுவதைத் தவிர்க்க ஆரம்பித்தாள். தினம் மாலையில் அவன் அவளது குயில் கூடத்திற்கு வந்து ஒரு எட்டு பார்த்தவாறு சிறுவர், சிறுமியர்களின் பயிற்சிகளை ரசித்து விட்டுச் செல்வதுண்டு.

அதையறிந்து அவன் வரும் நேரம் பார்த்து ஏதோ அவசர வேலை இருப்பது போல் வீட்டினுள் சமையல் கூடத்தினுள் சென்று மறைந்தாள். உதயசந்திரனும் ஐந்து நிமிடங்கள் அவளுக்காக காத்திருந்து பார்த்து விட்டுச் சென்றதும் திரும்பித் தோன்றுவாள்.

அதுபோல் தினம் அதிகாலையில் தோட்டத்திலிருந்து தூரத்து பச்சைப் பசேல் வயற்பரப்பு வரை அவள் காலாற நடப்பது உண்டு. வழி நெடுக தென்னை மர நிழல்களும், தூய்மையான சில் காற்றும் காலை நேரத்தில், அவளை ரொம்பவும் பரவசப்படுத்தும்.

ஒருநாள் அப்படி அவளோடு நடைப்பயிற்சிக்கு வந்து பழகிய உதயசந்திரன், தினம் காலை எழுந்து அவளோடு வர ஆரம்பித்திருந்தான்.

அவனை சந்திப்பதை தவிர்ப்பதற்காகவே தனக்குப் பிரியமான அந்த பயிற்சியையும் நிறுத்தினாள் அவள்.

அப்படியே ஒன்றிரண்டு முறை வழியில்லாமல் உதயசந்திரனை நேருக்கு நேர் சந்திக்க நேர்ந்தாலும், ஒரு வித செயற்கைப் புன்னகை வரவழைத்தவாறு, "நேரம் ஆகி விட்டது. வீட்டில் நிறைய சமையல் வேலைகள் இருக்கிறது. பிறகு பேசுவோம்..." என நழுவ ஆரம்பித்தாள்.

தொடர்ந்து பத்து நாட்கள் அவள் இப்படி அவனைத் தவிர்க்க எல்லா முயற்சிகளையும் செய்து வர உதயசந்திரன் கண்டு பிடித்து விட்டான்.

ஆயினும் எதையும் வெளிக்காட்டாமல் மறுநாள் மாலை குயில் கூடம் வந்தவன் அவள் அவன் வருவது அறிந்து வீட்டின் உள்கூடத்தில் அவசரமாய் சென்று மறைவதையும் கவனித்தான்.

அப்படி மறைந்த மைவிழி ஐந்து நிமிடங்கள் கழித்து அவன் காத்திருக்க மாட்டான். போய் இருப்பான் என்ற நினைப்போடு வெளிவந்து குயில் கூடத்தினுள் நுழைய அதிர்ந்து போனாள் அவள்.

மொட்டு மாதிரி அந்த கூடத்து நாற்காலி இருக்கையில் சத்தமில்லாமல் அமர்ந்திருந்தான் அவன்.

அவனைப் பார்த்ததும் அவள் திருதிருவென விழித்து, ''நீங்கள்... நீங்கள்... போகவில்லையா...?'' என்று தடுமாற நிதானமாய் எழுந்து அவள் பக்கம் வந்தவன் கைகளைக் கட்டியபடி நின்றான்.

''எதற்காக இந்த கண்ணாமூச்சு நாடகம்? திடீரென என்ன வந்தது? எதற்காக என்னைக் கண்டு பயந்து ஓட வேண்டும்?''

படபடவென அவன் கேட்டபடி அவளையே கூர்ந்து பார்த்தான்.

''அப்படியெல்லாம் ஒன்றுமில்லையே...! நான் எதற்காக ஓடி ஒளிந்து... பயப்பட வேண்டும்? நீங்கள் என்ன புலியா... சிங்கமா... நான் பயந்து ஓட...?'' எதிர் கேள்வி கேட்டு கேலியாய் சிரிக்க முயன்றவள், அவனது



திடமான பார்வையைக் கண்டு அப்படியே சிரிப்பை நிறுத்தினாள்.

இனி உண்மையை மறைக்க முடியாது. என்ன சொல்லி சமாளிப்பது? என்ற நினைப்பு அவளுள் ஓடியது.

''எதுவானாலும் வெளிப்படையாகப் பேச வேண்டும். அதுதான் இருவருக்கும் நல்லது...'' என்றான். அவன் இலகுவான குரலில் சூழ்நிலையை இதமாக்கியபடி.

வெளிப்படையாகச் சொல் என்கிறானே...? அவளால் என்ன சொல்ல முடியும்? உன்னுடன் இன்னும் பழகினால் மனதளவில் பெரும் பாதிப்பு ஏற்பட்டு, உணர்வுகளின் பிடியில் சிக்கி தினமும் தவிக்கும் தவிப்பான சூழ்நிலை... ஏற்பட்டு விடும் என்ற பயம்தான் காரணம் என்று சொல்ல முடியுமா?

யோசித்தவளுக்கு சட்டென மதுரத்தின் ஞாபகம் தான் வந்தது.

உடனே, ''மதுரத்துக்குப் பிடிக்கவில்லை... வீணாக நாம் பழகுவதை சந்தேகமாய் பார்க்கிறாள்...'' என்றாள். மீதியை அவனே புரிந்து கொள்ளட்டும் என்ற தொனியில்.

அவன் தோள்களைக் குலுக்கி கைகளைத் தட்டினான்.

''ஓஹோ...! கதை அப்படிப் போகிறதோ?'' என்றவன் சட்டென நிறுத்தி, ''அவள் சந்தேகமாய் பார்ப்பது சரி. நீ என்ன நினைக்கிறாய்?'' என்றான் அவள் முகத்தை படபடக்கும் விழிகளை கூர்ந்து நோக்கியபடி.

அவள் கண்களை விரித்து நோக்கியபடி, ''நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?'' என்றாள் அவனை மடக்குவது போல்.

''நான் ஒன்றும் நினைக்கவில்லை...'' என்றான் அவன் விட்டேற்றியாய் கைகளை உயர்த்திக் காட்டியபடி.

அவன் முடிப்பதற்குள், ''நானும் அப்படித்தான்...!'' என் றாள் அவனைப் போலவே கைகளை உயர்த்தி செய்த படி.

உதயசந்திரன் புருவம் உயர்த்தியவன், ''மடியில் கனமில்லை என்றால் எதற்குப் பயப்பட வேண்டும்?'' என்றான்.

அவள் பேசாமல் இருப்பதைப் பார்த்ததும், ''மதுரத்தை நினைத்து பயப்படுகிறாயா?'' என்றான்.

அவள் மறுப்பாய் தலையசைக்கவும், அவன் விடாமல், ''அப்படியே மதுரம் தவறாய் நினைத்தாலும், அவளிடம் பேசுவோம். அவளைக் கூப்பிட்டு விளக்குவோம். அவளுக்கு புரிய வைப்போம்...'' என்றான்.

இதற்கு என்ன பதில் சொல்வது?

உண்மையில் அதற்கு மேல் என்ன பேச என்று தெரி யாமல் அவள் திருதிருவென விழிக்கத்தான் செய்தாள்.

அவள் அப்படி திகைத்து விழிப்பதை ரசிப்பது போல பார்த்தவன், ''ஒன்று சொல்கிறேன் நன்றாக கேட்டுக் கொள். அடுத்தவர்களை... ஏமாற்றக் கூடாது... என்பது போல சில விஷயங்களில் நம்மை நாமே ஏமாற்றிக் கொள்ளக் கூடாது. அதுதான் புத்திசாலித்தனம். புரிந்து கொள்...'' என உபதேசித்து விட்டு திரும்பி நடக்க ஆரம்பித்தான்.

'நம்மை நாமே ஏமாற்றிக் கொள்ளக் கூடாதா?' என்ன தான் சொல்கிறான் இவன்?

மீண்டும் திகைப்புக்குப் போனாள் மைவிழி.





# 10

''உன்னிடம் முக்கியமான ஒன்று பேச வேண் டும்...'' என்றவாறு அன்று குயில் கூடத்தினுள் வந்து உட்கார்ந்து விட்டாள் மதுரம்.

''என்ன விஷயம் மதுரம்...?'' என மைவிழி உறுத்து நோக்க... ''எல்லாம் உதயசந்திரன் சார் பற்றியது தான்...'' என்றதும் தூக்கி வாரித்தான் போட்டது அவளுக்கு.

''அவருக்கென்ன...?'' என மைவிழி கேட்பதற்கு முன், ''அவரைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய்?'' என் றாள் மதுரம்.

''ஓ... ஒன்றும் நினைக்கவில்லை...'' என்றாள் மைவிழி இறுக்கமாக.

''ஒன்றும் நினைக்கவில்லையா...? அப்படியானால் ஏன் விழுந்து விழுந்து அவருடன் பேசுகிறாய். பல்லை இளித்துக் கொண்டு அவருடன் அலைகிறாய்...?'' என்றாள் வெடுக்கென.

மைவிழி முகம் மாறியவளாய், ''என்ன உளறுகிறாய் மதுரம்...? நீ சொன்ன விஷயங்களை எல்லாம் செய்வது நான் அல்ல... நீ... நீதான்! அது பற்றி நான் உன்னிடம்

கேள்வி கேட்க வேண்டும்...'' என்றாள் குரலில் கோபம் தொனிக்க.

மதுரம் உட்கார்ந்திருந்தவள் எழுந்து கைகளைக் கட்டிக் கொண்டு முறைப்பது போன்ற பார்வை ஒன்றைப் பார்த்தாள்.

மைவிழி இதுவரை அவளின் அப்படி ஒரு கடுமைப் பார்வையை பார்த்திராதவள் திகைத்தாள்.

''என்ன மதுரம்... என்னைப் பார்த்தா முறைக்கிறாய்?'' என்றாள்.

மதுரம் பார்வையின் சீற்றத்தைக் குறைக்காமலே, ''ஒன்றைப் புரிந்து கொள் மைவிழி. நான் அவரை விரும்பு கிறேன். மனப்பூர்வமாய் நேசிக்கிறேன். என் வழியில் குறுக்கிடாதே...!'' என்றாள்.

இந்த பதிலில் மைவிழி திடுக்கிட்டு திகைத்தாலும், சமாளித்துக் கொண்டு, ''சரி மதுரம் நீ விரும்புவது சரி அவர் உன்னை விரும்புகிறாரா? அப்படி எதுவும் உன் னிடம் சொன்னாரா?'' என்றாள்.

ஆனால் மதுரம் கொஞ்சமும் அலட்டிக் கொள்ளாமல் பார்த்தாள். ''அது உனக்குத் தேவையில்லாதது...'' என்றாள்

''என்ன சொல்கிறாய் நீ?'' என்றாள் மைவிழி பார் வையை கூர்மைப்படுத்தியவாறு.

ஆனால் மதுரம் மறுபடியும் ஒருவித இறுக்கமான முகத்துடன், ''இதோ பார் மைவிழி, அவர் உதயசந்திரன் எனக்காகப் பிறந்தவர். அதனால் தான் எங்கிருந்தோ என்னைத் தேடி வந்திருக்கிறார். அதனால் நீ வீணாக என் வழிகளில் குறுக்கிட்டு இடைஞ்சல்கள் பண்ணாதே



இது நான் உனக்கு விடும் எச்சரிக்கை. புரிந்து கொள்!'' என்றாள் கொண்டிருந்த கோபம் குறையாமலே.

அவள் அப்படி என்னவோ ஜென்ம விரோதி போல் தன்னிடம் முறைத்துக் கடுமையாய் பேசுவது கண்டு மைவிழிக்கு ஒரு பக்கம் ஆச்சரியம். மறுபக்கம் திகைப்பு!

என்னாயிற்று இவளுக்கு?

''என்ன... என்ன மதுரம்? உனக்கு என்னாயிற்று? என்னிடமா இப்படியெல்லாம் பேசுகிறாய்? என்னையா எச்சரிக்கை செய்கிறேன் என்கிறாய்?'' என்றபடி அவள் தோள் மீது கை வைக்க படக்கென தட்டி விட்டாள் அவள்.

''சும்மா... நடிக்காதே! உன்னைப் பற்றி எனக்குத் தெரியும்...!''

''என்ன தெரியும் மதுரம்?''

''நீ உன் சிகப்பழகை காட்டி அவரை உதயசந்திரனை மயக்க முயற்சிக்கிறாய். நான் விடமாட்டேன்...''

அவள் சொன்னதைக் கேட்டு மைவிழி கடகடவென சிரித்தாள்.

''உன் கற்பனை அபாரம்...!''

''நான் சொல்வது உண்மை...!''

''நீயாக அப்படி நினைத்துக் கொண்டால் நான் என்ன செய்ய முடியும்...?''

''அப்படியானால்... வா... என்னுடன் வா... கோயில் முன் சாமி முன் வைத்து சத்தியம் பண்ணு...''

மைவிழி பதில் சொல்லாமல் சிரிக்கவே செய்தாள். ''மதுரம் என்னாயிற்று உனக்கு? ஏன்... இப்படியெல்லாம்

பேச ஆரம்பித்து விட்டாய்?'' என்றுதான் திரும்பத் திரும்ப கேட்டுக் கொண்டிருந்தாள்.

மதுரமோ, ''பார்த்தாயா...? நீ சரியான கள்ளி. அது தான் நழுவப் பார்க்கிறாய். ஆனால் பார்... நான் விட மாட்டேன்... அவர்... அவர்... உதயசந்திரன் எனக்குத் தான்... உனக்கு கிடைக்கமாட்டார்... கிடைக்கவும் விட மாட்டேன்...!'' குளுரைக்காத குறையாய் உரக்கச் சொல்லி விட்டு அங்கிருந்து அகன்றாள் அவள்.

அவள் போய் வெகு நேரமாகியும், அப்படியே சிலை போல் நின்று கொண்டிருந்தாள் மைவிழி.

சின்னப் பெண். படிப்பு வாசனையில்லாமல் கிராமத்தி லேயே வளர்ந்து விட்டவள் என்று நினைத்தால்... என்ன வெல்லாம் பேசிவிட்டாள்...?

ஏன்... இவ்வளவு நாள் பழகியவள் என்று கூட பாரா மல் மிரட்டக்கூட துணிந்துவிட்டாள்? எதனால் இப்படி மாறினாள்? எப்படி இவ்வளவு தைரியம் வந்தது இவ ளுக்கு?

அவள் மிரட்டியதைவிட அவளது நினைப்புதான் அவளுக்கு பெரும் பயத்தையே கொடுத்தது.

உதயசந்திரன் தனக்காக பிறந்தவர்... தனக்குத் தான்... என முடிவே பண்ணி விட்டாளே?

இவ்வளவுக்கு உதயசந்திரன் இவளிடம் அப்படி ஒரு போதும் சொல்லியதும் கிடையாது. சொல்லி இருக்கவும் மாட்டார்.

பின் வகையாய் ஏமாந்து போவாளே!

இவளுக்கு உண்மையை எப்படிப் புரிய வைப்பது?



யோசித்தவள்... கடைசியில் தீவிரமாக சிந்தித்தது போல் அந்த முடிவிற்கு வந்தாள்.

உதயசந்திரனிடம் இது பற்றிப் பேசிவிட வேண்டும். அவன் மூலமாகவே மதுரத்தைத் தெளிவுபடுத்திவிட வேண்டும்... என நினைத்தாள்.

அன்று மாலையே குயில் கூடத்திற்கு தற்செயலாய் வந்த உதயசந்திரனிடம் மதுரம் பற்றி பேசவும் செய்தாள்.

விஷயத்தைக் கேட்ட உதயசந்திரனின் முகம் முதலில் அதிர்ச்சிக்குப் போனது. பின் பெரும் நகைச்சுவையைக் கண்டது போல் கடகடவென சிரிக்க ஆரம்பித்தான்.

அவன் அப்படிச் சிரிப்பதைப் பார்த்ததும் தான் மைவிழி யினுள் அதுவரை கொண்டிருந்த படபடப்பு நீங்கி நிம்மதி வந்தது.

தன் முகக் குறிப்பை ஆவலாய் ஆராய்ந்த மைவிழியை நோக்கி புருவம் உயர்த்தியவன், ''ஏதோ கிராமத்துப் பெண்... பார்க்கும் போதெல்லாம் வெட்கப்பட்டு ஒடி ஒளிகிறாள் என்று விளையாட்டுத் தனமாய்ப் பேசப் போனால்... என்னை வைத்து இவ்வளவு கற்பனைகள் பண்ணி விட்டாளா? பெரும் ஆச்சரியம்தான்!''

நம்ப முடியாமல் திரும்பவும் சிரித்து கன்னத்தில் கை வைத்தபடி திரும்பவும் ஆச்சரியம் கொண்டான் அவன்.

''சரி... மைவிழி...! நீ கவலைப்பட வேண்டாம். இது பற்றி மதுரத்திடம் நானே பேசுகிறேன்...!'' என்று சொல்லிவிட்டு அவளிடம் விடைபெற்று அகன்றான் உதயசந்திரன்.

அப்படி குயில் கூடத்தில் இருந்து மைவிழியிடம் சிரிக்கச் சிரிக்கப் பேசிவிட்டு, உதயசந்திரன் அகல்வதை

தூரத்து மரத்தின் மறைவில் இருந்து ஒரு ஜோடி கண்கள் அனல் தெறிக்க பார்த்துக் கொண்டிருந்தது.

அந்தக் கண்கள் மதுரத்துக்குச் சொந்தமானவை. கூடவே அக்கணமே மதுரத்தின் மனதில் அந்த விஷ மான திட்டமும் உருவாக ஆரம்பித்தது.

# 11



மறுநாள் மதுரத்தின் நடவடிக்கைகள் எல்லாம் மா மைவிழியை மிகவும் ஆச்சரியப்படுத்தியது.

நேற்று சண்டையிட்டவள் போல் துளியும் இல்லா அவளிடம் பவ்யமும் பரிவும் காட்டினாள். வெடுக் வெடு கென இல்லாமல் குரல் தாழ்த்திப் பேசினாள். எதற்கா இந்த திடீர் கரிசனம்? என்று மைவிழி பார்த்தால், அ ளுக்குப் பின்புறமாய் உதயசந்திரன் சத்தமில்லாம நின்று கொண்டிருந்தான்.

ஓ... இதுவா... விஷயம்...? அதனால்தான் வாலை சுருட்டிக் கொண்டு இருக்கிறாளா? என நினைத்தவ திரும்பி உதயசந்திரனைப் பார்த்தாள்.

அவன் கண்களாலே அவளுக்கு மட்டும் தெரியும்ப ஒருவித சைகை செய்துவிட்டு மதுரம் பக்கம் சென்றா

அவன் பக்கத்தில் வந்ததும், சூரியனைக் கண்ட தாமரை போல முகம் முழுவதும் புன்னகை பூத்து மலரத்தா செய்தாள் மதுரம்.



''ஒன்றுமில்லை... மதுரம்... ஒரு முக்கியமான விஷயம் சொல்ல வேண்டும்... சொல்லட்டுமா?''

''சொல்லுங்கள்...'' என்றாள் மதுரம் விழிகளை மலர்த்தி பரவசத்தை முகத்தில் ஓடவிட்டவாறு.

உதயசந்திரன் ஒரு நிமிடம் தயங்கிவிட்டு கடகட வென பேசினான். ''அதாவது மதுரம் என் வாழ்க்கை, என் கல்யாணம் பற்றி நான் எந்த முடிவும் எடுக்கவில்லை. யாரும் என் மனதில் இல்லை. அதனால் வீணாக மனதில் ஆசைகளை வளர்த்துக் கொள்ளக்கூடாது பார்...'' என குரலில் உறுதியைக் கூட்டினான்.

அவன் பேசி முடித்ததும் அவன் வியப்பு கூடும் வண்ணம் மதுரம் உற்சாகமாகிக் கொண்டிருந்த சிரிப்பை பெரிதாக்கியவாறு. ''நன்றாக உரக்க... உரைக்கும்படிச் சொல்லுங்கள் சார்... அப்படிச் சொன்னால் தான் புரிய வேண்டியவர்களுக்கு நன்றாகப் புரியும்...'' என்றாள் மைவிழியை நோக்கி பார்வையை ஓட்டியபடி.

அதை கவனித்த உதயசந்திரன் சட்டென முகம் மாறியவனாய், ''நான் சொல்வது உனக்குத்தான் மதுரம்... புரிந்து கொள்ள வேண்டியது நீதான்...!'' என போட்டு உடைக்க.. இதை சற்றும் எதிர்பாராத மதுரத்தின் முகம் அப்படியே கறுத்துவிட்டது.

''என்னை... என்னையா...?'' என நம்ப முடியாமல் கண்களை விரித்து உதயசந்திரனை உறுத்து நோக்கினாள்.

''உன்னை... உன்னைத்தான்... மதுரம்...'' என சுட்டு விரலை உயர்த்தி நீட்டினான் அவன்.

மதுரத்தின் முகம் மேலும் இறுகி மைவிழியின் பக்கம் திரும்பியது. கண்கள் சிவக்க கருவிழிகளை உருட்டி

அவளை அப்படியொரு முறைப்புப் பார்வை பார்த்... தான்.

பின் திரும்பி விடுவிடுவென பதில் பேசாமல் அகல்... நாள் அவள்.

அவள் அப்படி கோபமும், ஆவேசமுமாய் போவதைப் பார்த்த மைவிழியே அரளத் தான் செய்தாள்.

"எவ்வளவு சாதுவான பெண்... எப்படி மாறிவிட்... டாள்...!" என வாய்விட்டு அரற்றியபடி மைவிழி திகைக்க... பக்கத்தில் வந்த உதயசந்திரன், "எல்லாம் காதல் படுத்... தும் பாடு..." என்றான்.

மைவிழி புரியாமல் அவனை உறுத்துப் பார்க்க, "நானும் இப்படித்தான் என்னை விரும்பாத ஒரு பெண்ணை காத... வித்து ஏமாந்தவன் தானே..." எனக் கூறவும் அவளுக்கு... புரிந்தது.

அண்ணன் அது பற்றியெல்லாம் முன்பு விளக்கமாக... சொன்னதும் ஞாபகத்திற்கு வந்தது.

அதனாலே அதை மீண்டும் ஞாபகப்படுத்தி கேள்வி... களை கேட்க விரும்பாதவள் போல் தலையை மட்டு... அசைத்தாள்.

உதயசந்திரனும் பேச்சை அத்தோடு மாற்ற விரும்பி... வனாய், "இன்னொரு விஷயமும் எனக்குப் புரியவில்லை..." என்றான்.

"என்ன விஷயம்?" என்றாள் அவள் இமைகளை... உயர்த்தியவாறு.

"பொதுவாக பெண்கள் தங்கள் மனதில் உள்ளதை... எளிதில் வெளியே சொல்ல மாட்டார்கள் என்று கேள்...



பட்டிருக்கிறேன். ஆனால் இந்த மதுரம் எப்படி இப்படி வெட்கமில்லாமல் உன்னிடம் உளறிக் கொட்டினாள்?" என்ற போது அவள் படபடத்த விழிகளை அப்படியே தாழ்த்தினாள்.

ஆனால் அவனும் விடாமல், "மதுரம் உள்ளதை அப்படியே கொட்டி விட்டாள். ஆனால்... சில பெண்கள்... அப்படி இல்லையே... உள்ளத்தில் ஒன்றை வைத்துக் கொண்டு அதை வெளியே சொல்லாமல் மறைத்துக் கொண்டு..." எனச் சொன்னவன் நிறுத்தி அவளை ஒரு பார்வை பார்த்தவாறு, "நான் சொன்னது மதுரம் மாதிரி பெண்கள் அல்ல... உன் மாதிரி அழகான பெண்கள்..." என முடிக்கவும் கன்னங்கள் சூடேற அப்படியே முகம் சிவந்தாள் அவள்.

அதற்கு மேல் அவள் முன் நின்றால் அவன் வேறு ஏதாவது கேட்டு விடுவான் என பயந்தவள், "வேலைகள் நிறைய இருக்கிறது. நான் கிளம்பட்டுமா...?" என்றாள் அனுமதி கேட்பது போல்.

"தாராளமாக..." என்றபடி கொண்டிருந்த புன்முறுவலை பெரிதாக்கியபடி கைகளை விரித்தான் அவன்.

குனிந்தபடியே தன் கூடம் நோக்கி ஓடினாள் அவள்.

அவளது நீண்ட கூந்தல் அழகையும், அதன் முடிவில் துள்ளிய பட்டுக் குஞ்சத்தையும் ரசித்துப் பார்த்தான் உதயசந்திரன்.

அவன் அப்படிப் பார்க்க... சற்றுத் தூரமாய் பெரிய சுவர் தடுப்பு ஓரமாய் நின்றிருந்தாள் அவள்.

மதுரம்!

வீராப்பாய் விடுவிடுவென கோபத்தில் சென்றவ சற்றுத் தள்ளிப்போய் மறைந்து என்ன நடக்கிறது எ கவனிக்கவும் செய்தாள்.

அவளது பார்வைக்கு அவளை அனுப்பிவிட்டு உத சந்திரனும் மைவிழியும் சிரிக்கச் சிரிக்க பேசுவது தெரிந்தது.

என்ன பேசுகிறார்கள்... என்று தெரியவில்லை...

ஆனால் இந்த மைவிழி ஏதோ சொல்ல அவன் உத சந்திரன் விழுந்து விழுந்து சிரிக்கிறான்.

பதிலுக்கு இவன் ஏதோ சொல்ல அவள் மைவி காணாததைக் கண்டது போல் அப்படி பல்லைக் காட்டு கிறாள்...

அப்படி... என்னதான் அங்கு நடக்கிறது? எதைத்தா அவர்கள் பேசி இருப்பார்கள்?

ஒருவேளை... மைவிழி அவளைத்தான் எதுவு கிண்டலடித்திருக்கிறாளோ?

அதற்குத்தான் இந்த உதயசந்திரன் இப்படிச் சிரி கிறானோ?

என்ன தைரியம் இந்த மைவிழிக்கு?

இப்போது அவளுக்கு எல்லாம் புரிவது போலவு இருந்தது. தான் மிரட்டிய விஷயத்தை மைவிழி உத சந்திரனிடம் சொல்லி அவனை இப்படிப் பேச வை திருக்கிறாள்!

ஆக... நடந்த எல்லாவற்றுக்கும் காரணம் மைவி தான்! அவளை சும்மா விடக்கூடாது!

ஆத்திரத்தோடு பற்களை கடித்தாள் மதுரம்.





# 12

அதற்குப் பின் வந்த ஒரு வாரம் எவ்வித சலனமுமில் லாமல் போனது. மதுரமும் வாலைச் சுருட்டிக் கொண் டவள் போல் அவளைப் பார்த்து வழக்கம் போல் சிரித் தாள். ஓரிரு வார்த்தைகள் பேசினாள். ஓடிவிட்டாள்.

சரி... உதயசந்திரன் நேரிடையாய் அப்படி முகத்திலடித் தாற்போல் சொன்னதைக் கேட்டு திருந்தி விட்டாள் என நினைத்தாள் மைவிழி.

ஆனால் புலி பதுங்குவது பாயத்தான் என்பது போல் மதுரம் வேறு ஒரு திட்டம் தீட்டியிருந்தாள். இரண்டு நாளுக்கு முன் தற்செயலாய் பட்டணத்து மார்க்கெட் டிற்கு சாமான்கள் வாங்கச் சென்றவள் தற்செயலாய் அவனைப் பார்த்துவிட்டாள்!

அவன் பாஸ்கர்...!

முன்பு மைவிழியுடன் கல்லூரியில் படித்தவன். அவ ளிடம் காதல் கடிதமெல்லாம் கொடுத்து வம்பு செய் தவன். ஒருமுறை அவனை நன்கு அடையாளம் காட்டி மைவிழி அவளிடம் சொல்லியிருக்கவும் செய்திருக் கிறாள்!

அது போதாதா மதுரத்திற்கு? இந்த மைவிழியை மட சரியான ஆள் இவன்தான்! இவனிடம் கொஞ்சம் பே பார்ப்போம் என முடிவும் செய்தாள் அவள்.

அதனாலே, "மிஸ்டர் பாஸ்கர்... பாஸ்கர்..." என அவ அழைத்து எதிரே இருந்த ஹோட்டல் ஒன்றுக்கு பே கூட்டிப் போனாள்.

அவளைத் திகைப்பாய் பார்த்த பாஸ்கர் மைவி பெயரைச் சொன்னதும் முகத்தின் வன்மம் தூக்க ஆ லாகி விட்டான்.

"என்ன... மைவிழி... உன் கிராமத்தில்தான் இரு கிறாளா? அவளைத்தான் பழி வாங்க இவ்வளவு நா துடித்துக் கொண்டிருந்தேன். விஷயத்தைச் சொல்லு...! என பரபரத்தான்.

மதுரம் அவள் பெரும் பணக்காரனான உதயசந்திர வளைத்துப் போடப் பார்ப்பதையும், தனக்கு மிகப் பெரி இடைஞ்சலாய் இருப்பதையும் விளக்கினாள்.

கேட்ட பாஸ்கர் கடகடவென சிரித்தான்.

"சரிதான்...! என்னிடம் வீசியது போல் காதல் வலை இன்னொருவனிடம் அதுவும் பணக்காரனாய் பார்த் வீசுகிறாளா?" என்றான்.

மதுரம் திடுக்கிட்டாள்.

"என்ன சொல்கிறீர்கள் பாஸ்கர்? மைவிழி உங்களுக் காதல் வலை வீசினாளா? நீங்கள்தான் அவள் பின்னா அலைந்து காதல் கடிதம் எல்லாம் கொடுத்து வம்பு செய் தாக..."



அவள் முடிப்பதற்கும் திரும்பவும் கடகடவென சிரிப்பை ஓடவிட்டான் அவன்.

"அப்படித்தான்... உன்னையும் எல்லோரையும் அவள் நம்ப வைத்திருக்கிறாள். உண்மையில் நடந்தது என்ன தெரியுமா?"

"என்ன நடந்தது...?" என்றாள் மதுரம் ஆவலாய்.

"நான் அவள் அழகில் மயங்கி அவள் மீது காதல் வலை வீசியது போல் அவளும் என் பர்ஸனாலிட்டியில் மயங்கி பதிலுக்கு என் மீது காதல் பார்வை வீசினாள். அதாவது ஆரம்பத்தில் என்னிடம் மயங்கி அவளும் என்னைக் காதலிக்க ஆரம்பித்து விட்டாள். பின் தான் என் குணம் பிடிக்காமல் வெறுத்து ஒதுக்கினாள். அதனால் அவளது முன்னாள் காதலன் முதல் காதலன் நான்தான்...! இதுதான் யாருக்கும் தெரியாத உண்மை...!"

பாஸ்கர் சொன்ன முழு விஷயத்தைக் கேட்டு அப்படியே வாய் பிளந்து விட்டாள் மதுரம்.

"அட...டா...! கதை அப்படிப் போயிருக்கிறதா? மைவிழி முதலில் காதல் செய்தாளா? என்னால் நம்பவும் முடியவில்லை... நம்பாமல் இருக்கவும் முடியவில்லை...!" என்றாள்.

"என்னிடம் சரியான ஆதாரம் இருக்கிறது..." என்றான் பாஸ்கர்.

"என்ன ஆதாரம் சொல்லுங்கள்?"

"காதல் கடிதம்! மைவிழி எனக்கு என் பெயருக்கு எழுதிய காதல் கடிதம்...!"

"என்ன மைவிழி உங்களுக்கு காதல் கடிதம் எழுதினாளா?"

மறுபடியும் மதுரம் வாய் பிளக்க நமட்டுச் சிரிப்பு சிரித்தான் பாஸ்கர்.

''எழுத வைத்தேன்... என்று தான் சொல்ல வேண்டும்...'' என்றான்.

''என்ன... எழுத வைத்தீர்களா...? என்ன... சொல்கிறீர்கள்...?''

பாஸ்கர் விளக்கினான். ''அதாவது மைவிழி... என் மீது ஓரளவு ஈடுபாடு கொண்டு பழக ஆரம்பித்ததுமே அதை எப்படியும் காதல் போல் ஆக்கிவிட வேண்டும் என துடித்தேன். அதனாலே ஒரு நாள் அவளை வேறு ஒரு நண்பன். அவன் காதலிக்குக் கொடுக்க ஒரு காதல் கடிதம் கேட்டான். நீ எழுதிக் கொடு எனக் கெஞ்சி ஒரு காதல் கடிதம் எழுத வைத்தேன். அப்படி அவள் எழுதி முடித்ததும் நான் சொன்னது பொய். இது நீ எனக்கு எழுதும் காதல் கடிதமாய் இருக்க வேண்டும். அதுதான் என் ஆசை. அதற்காகத்தான் இப்படிச் சொன்னேன். அதனால் கோபப்படாமல் மேலே என் பெயரையும் கீழே உன் பெயரையும் போட்டுக் கொடு... என பஞ்சரித்தேன். அவள் மைவிழியும் ஏதோ அரை சிந்தனையில் வேறு வழியில்லாமல் அப்படி போட்டுக் கொடுத்தாள். அதை அப்படியே பின்னால் ஒருநாள் உதவும் என பத்திரப்படுத்தி வைத்திருக்கிறேன்...''

அவன் முடிப்பதற்குள், ''கவலையே வேண்டாம் பாஸ்கர். அந்தக் கடிதத்தை உபயோகிக்க சரியான சமயம் சந்தர்ப்பம் இப்போது வந்துவிட்டது...'' என்றாள் மதுரம் உற்சாகமாக.

எப்படி...? என பாஸ்கர் விழிக்க... விஷமமான தன் திட்டத்தை அவனுக்கு விளக்கினாள் அவள்.





# 13

மைவிழி வாரந்தோறும் அவளது புன்னைவன கிராமத்தில் இருக்கும் பொது நூலகத்திற்கு செல்வதுண்டு. நூலகத்தில் பழைய இலக்கிய நூல்கள், பொது அறிவு நூல்கள் என ஆவலாய் எடுத்து படிப்பது உண்டு.

அன்றும் சனிக்கிழமை ஆனதால் அப்படியே பொது நூலகத்திற்கு மாற்ற வேண்டிய புத்தகங்களை எடுத்துக் கொண்டு தனது சைக்கிளில் கிளம்பினாள்.

இரண்டு மூன்று நாளாய் உதயசந்திரனைப் பார்க்க முடியவில்லை. விசாரித்தபோது தனது தொழில் விஷயமாய் பட்டணம் சென்றிருப்பதாகவும், இரண்டொரு நாளில் திரும்பி வந்து விடுவான் என்பதையும் அறிந்தாள்.

இப்படி மூன்று நாள் அவனைப் பார்க்காதது, பேசாதது என்னவோ போல் இருக்கிறதே...? என அவளுக்கே அது வியப்பாகவும், ஒருவித எரிச்சலையும் உண்டு பண்ணியது.

அதனாலே பார்க்கும் எந்தவொரு வேலையிலும் முழுதும் லயிக்க முடியாமலே நடமாடினாள். அன்று நூலகத்திற்கும் அப்படியே அரை மனதுடன் தான் கிளம்பிச் சென்றாள்.

நூலக கட்டிடம் ஊர் பஞ்சாயத்து அலுவலகத்தி
பக்கத்திலேயே மரங்கள் சூழ அமைந்திருந்தது. சைக்கி
ஸ்டாண்ட் செய்துவிட்டு உள்ளே நுழைந்தாள்.

வழக்கம் போல் நூலகரிடம் புன்முறுவல் பூக்க பே
விட்டு புத்தகங்களை ரேக்குகளில் தேடினாள். வேண்டி
புத்தகங்களை அடுத்த அரை மணி நேரத்தில் எடுத்
விட்டு வெளிவந்தவள் தனது சைக்கிள் பக்கம் நின்
கொண்டிருந்தவனைப் பார்த்து அப்படியே திடுக்கிட்டு
போனாள்.

அங்கு... அவளுக்காக கைகளைக் கட்டியபடி தயாரா
பாஸ்கர் காத்திருந்தான்.

பாஸ்கர்... இவன் எப்படி இங்கு...?

விழிகள் மேலும் விரிந்து அவள் அதிர்ச்சியி
திகைக்க... பாஸ்கர் அவளைப் பார்த்துவிட்டான். அவனு
நீளமான முகத்தில் கோணலான சிரிப்பு ஒன்று ஓடிய

"அட... இப்படி அங்கே... திகைத்து நின்றால் எ
படி...? வா... வா... மைவிழி...!" என கைகளை உயர்த்
அழைத்தவாறு தனது விஷமப் புன்னகையைப் பெரிதா
கினான் பாஸ்கர்.

மைவிழி திகைப்பு விலகாமலே அவன் பக்க
போனாள்.

"எப்படி இருக்கிறாய் மைவிழி...?" என்றான் பாஸ்க
ரொம்பவும் நலம் விசாரிப்பது போல.

மைவிழி பதில் சொல்லாமல் அதே முறைப்பு பார்வை
பார்க்க, "என்ன மைவிழி... இன்னும் என்னை யாரென்
தெரியவில்லையா...? நான் தான் பாஸ்கர்... உனத



பழைய நண்பன்... உனது பழைய... காதலன்..." என
வேண்டுமென்றே காதலன் என்பதில் அழுத்தம் கொடுத்து
உச்சரித்தான் அவன்.

"காதலனா...? ச்சீ...!" காறி உமிழாத குறையாய்
அவனைப் பார்த்தாள் மைவிழி.

அவள் எரிச்சல் படுவதைக் கண்டு குஷியானவன்
போல் மேலும் அசிங்கமாய் சிரித்தான் அவன்.

"அட... கோபத்தைப் பாரேன்...! புதுக் காதலன்
கிடைத்தவுடன் இந்தப் பழைய காதலனை மறந்து விட்
டாய் பார்த்தாயா?" என திரும்பவும் அவன் சொன்ன
போது அதிரவே செய்தாள்.

"என்னம்மா... பார்க்கிறாய்? எனக்கு எல்லாம் தெரி
யும்... அவன் பட்டணத்துக்காரன்... பெரிய கோடீஸ்வர
னாமே... அவன் தான் உனது புதுக் காதலன்...? எல்
லாம்... எல்லா விஷயமும் எனக்குத் தெரியும்..."

"ச்சீ... வாயை மூடு!" என கோபமாய் பதிலுக்கு அவள்
சொன்னாலும் உதயசந்திரன் பற்றியெல்லாம் எப்படி
இவனுக்குத் தெரியும்...? யார் சொன்னார்கள்? என்ற
திகைப்பே அவளுள் ஓடியது.

பாஸ்கர் தொடர்ந்து தனது விஷமச் சிரிப்புடன்
உடம்பை நெளித்தவன், "உன்னைத்தான் இவ்வளவு
நாள் தேடிக் கொண்டிருந்தேன் மைவிழி. நீ எங்கோ
வடநாட்டுப் பக்கம் உறவினர் வீட்டோடு சென்று விட்ட
தாய் உன் கல்லூரித் தோழி ஒருத்தி கூறி என்னை ஏமாற்றி
விட்டாள். கடைசியில் பார்த்தால் நீ இங்கு இந்த அஞ்ச
ரடித்த கிராமத்தில் ஒளிந்து கொண்டிருக்கிறாய். இது
தான் உனது பூர்வீகம் என இவ்வளவு நாள் எனக்குத்

தெரியாமல் போய்விட்டது... எல்லாம் என் நேரம்... என்றபடி தன் கைகளைக் குத்தியவன், "ம்ம்... சரி... மைவிழி இப்போதாவது அது தெரிந்து விட்டதே... அதுவும் நல்லதாய் போயிற்று... ஏன் தெரியுமா...? பழைய கணக்கு ஒன்று உன்னிடம் தீர்க்க வேண்டியிருக்கிறது..." என்றான் பெரிய பீடிகை போடுபவன் பால்.

"பழைய கணக்கா...?"

மறுபடியும் அதிர்ந்தாள் அவள்.

"ம்ம்... பழைய கணக்கு... அதுவும் காதல் கணக்கு...!" எனச் சொல்லி அசிங்கமாய் கண்களைச் சிமிட்டினான் அவன்.

"என்ன உளறுகிறாய்?" என்றாள் கோபம் சீறும் குரலில்.

"நீ மறந்திருப்பாய். அதை ஞாபகப்படுத்துகிறேன். முன்பு ஒரு முறை என்னுடன் நீ பழகியபோது வேறு ஒரு நண்பனுக்குத் தேவை என்று உன்னிடம் நடித்து உன்னை ஒரு காதல் கடிதம் எழுதச் சொல்லி கடைசியில் அதில் உன் பெயரை போடச் செய்து, நீ எனக்கு எழுதிய மாறி மாற்றி உன்னை எழுத வைத்தேனே... ஞாபகமிருக்கிறதா? அந்தக் காதல் கடிதம் இப்போது என்னிடம் பத்திரமாய் இருக்கிறது. தெரியுமா?"

அவன் சொல்லச் சொல்ல அப்படியே அரண்டு தான் போனாள் அவள்.

பாவி! அன்று ஒரு நாள் விளையாட்டுப் போல் கெஞ்சிக் கூத்தாடி நம்மை எழுத வைத்துவிட்டு இன்று கெக்கலிப்பாய் பேசுகிறானே? என்ன திட்டம் வைத்திருக்கிறான் இவன்?



அவள் திகைக்க... "என்ன விழிக்கிறாய் மைவிழி? அந்தக் கடிதம் தான் எனது துருப்புச் சீட்டு. அதை வைத்து பலே திட்டம் ஒன்று வைத்திருக்கிறேன்..." எனச் சொல்லியபடி விஷமச் சிரிப்பு சிரிக்க மேலும் அதிர்ச்சியானாள் அவள்.

இருந்தாலும் தன் திகைப்பை, அதிர்ச்சியை எல்லாம் சமாளித்துக் கொண்டு, "என்ன திட்டம்?" என்றாள் அவள்.

"வேறென்ன...? எனக்குப் பணத் தேவை ஜாஸ்தி. அதனால் உன்னிடம் கொஞ்சம் பணம் பறிக்க வேண்டும். அது தான் எனது திட்டம்..."

"என்ன... பணமா...?"

"ம்ம்... அதற்கு ஏன் இப்படி வாய் பிளக்கிறாய் மைவிழி? ரொம்பவும் பதறாதே... எல்லாம் ஒரு சிறிய தொகை தான். ஒரு பத்தாயிர ரூபாயை நீ இப்படி விட்டெறிந்தால் நான் அந்தக் கடிதத்தை உன்னிடம் விட்டெறிவேன்..."

"என்ன பத்தாயிரமா?"

"ம்ம்... வெறும் பத்தாயிரம்தான்! உன்னிடம் பத்து லட்சம் கூட கேட்கலாம். ஆனால் என்னுடைய இப்போதைய தேவை பத்தாயிரம்தான். அதான் குறைவாகவே கேட்கிறேன். சொல்! எப்போது தரப் போகிறாய்?"

"அது... அது..."

"ம்ம்..." என உறுமிய பாஸ்கர், "ரொம்பவும் திணறாதே...! உனக்கு மூன்று நாள் டயம் தருகிறேன்... நான்காம் நாள் நீ ஊர் எல்லையில் உள்ள மலை முகடுப் பக்கம் பணத்துடன் தனியாக வர வேண்டும். அங்கு

அந்த நீ எழுதிய காதல் கடிதத்துடன் தயாராய் நா
காத்திருப்பேன்... நீ பணம் கொடுத்தால் அடு
நிமிடமே கடிதத்தை உன்னிடம் ஒப்படைத்து விடுவே
நீ ஏமாற்ற நினைத்தாலோ வராமல் இருந்தாலோ
அந்தக் காதல் கடிதம் நேரிடையாக நீ இப்போது சுற்
வரும் உதயசந்திரன் கைக்குச் சென்றுவிடும். புரிந்ததா
என எகத்தாளக் குரலில் முடித்தான் பாஸ்கர்.

அதிர்ச்சியான கற்சிலையாய் திரும்பி விறுவிறுவெ
நடந்தாள் அவள்.

14



அன்று இரவே மைவிழியால் தூங்கவே முடி
வில்லை.

கண்களை அகல விரித்து வைத்தவாறு பெரும் சி
தனைக்குப் போனாள்.

எங்கிருந்து இந்த பாஸ்கர் திடீரென முளைத்தான்?

எப்படி அவள் அங்கிருப்பதை கண்டுபிடித்தான்?

எல்லாவற்றுக்கும் மேல் இவ்வளவு வருடங்கள் ஆகியு
அவன் கொஞ்சங்கூட மாறவில்லை... அதே கொ
முகம். அதே கோணல் புத்தி... சிந்தனை... நல்ல வி
யங்களையே நினைக்க மாட்டானா? என யோசித்தவ
கடிதம் ஞாபகம் வர திகைத்துப் போனாள்.



பாவி, இவ்வளவு வருடமாகியும் அதை தொலைக்காமல் பத்திரமாக வைத்திருக்கிறானே!

விளையாட்டாய் அன்று முன் பின் யோசிக்காமல் அவன் கெஞ்சலுக்காக இரக்கப்பட்டு எழுதிக் கொடுத்தது, இன்று அவளுக்கு எதிராய் பெரும் சோதனையாக அல்லவா வந்துவிட்டது?

அவன் கேட்ட பணத்தைக் கொடுக்காவிட்டால், கடிதத்தை உதயசந்திரனிடம் அல்லவா கொடுத்து விடுவதாக மிரட்டுகிறான்.

மேலும் அதற்காக... பணம்... பத்தாயிரம் அவனுக்கு வேண்டுமாமா?

பணத்திற்கு என்ன செய்வது? என யோசித்தவள் முதலில் விஷயத்தை அண்ணன் காதில் போட்டு விடலாமா எனவும் நினைத்தாள்.

ஆனால் அண்ணன் படு கோபக்காரன். விஷயம் கேள்விப்பட்டால் பின் பெரும் ரகளை, அடிதடி என இறங்கி விடுவான். பின் விஷயம் போலீஸ் வரை கூடப் போனால் ஆச்சரியமில்லை!

அதனால் விஷயத்தை அண்ணனிடம் சொல்ல வேண்டாம். உதயசந்திரனுக்கும் சுத்தமாகத் தெரிய வேண்டாம். நாமே எப்படியும் சமாளிப்போம்.

பணத்திற்கு என்ன செய்ய?

யோசித்த மைவிழிக்கு அண்ணன் தன் பெயரில் கிராம கூட்டுறவு பேங்கில் பணம் போட்டு வைத்திருப்பது ஞாபகத்திற்கு வந்தது.

அதில் கிட்டத்தட்ட ஒரு லட்ச ரூபாய் வரை இரு க்கும். அதிலிருந்து பத்தாயிரத்தை எடுத்து விடலாம் என முடிவிற்கு வந்தாள்.

விஷயத்தைத் தானே சமாளித்துவிட வேண்டு அண்ணனிடம் சொல்லி வீணான கலக்கத்தை உண் பண்ண வேண்டாம் எனவும் நினைத்தாள்.

மறுநாள் மைவிழிக்கு எப்படி அந்த தைரியம் வந்த என தெரியவில்லை.

கடைசியில் துணிந்து விட்டாள்!

யாரிடம் சொல்லவும் இல்லை! அண்ணனிடம் கூட மூச்சு விடவில்லை. பாஸ்கரிடமிருந்து அந்த கடிதத்தை வாங்கிவிட வேண்டும் என்பதே அவளது குறியாயிரு ந்தது.

அது ஒரு பெரிய அவமானச் சின்னம்! திட்ட போட்டு பாஸ்கர் செய்த விஷமம்! அதனால் அது வே யாரிடமும், முக்கியமாய் உதயசந்திரன் கையில் போ விடக் கூடாது.

அவன் மட்டும் பார்த்தால், அதைப் படித்தால் அவளை பற்றி என்ன நினைப்பான்?

இப்படி எவனுக்கோ உருகி காதல் கடிதம் எழுதிவி ஒன்றும் தெரியாத அப்பாவி போல் நடித்திருக்கிறாளே என்று தானே நினைப்பான்!

அதன்பின் அவள் எந்தவொரு விளக்கம் சொ னாலும் எடுபடாது. புரிய வைக்க முடியாது!

அதனாலே... எப்பாடு பட்டாலும், என்ன பணம் செ வானாலும் சரி... அந்தக் கடிதத்தை கைப்பற்றியே வேண்டும்.



மைவிழி அன்று காலை அண்ணன் தனா வெளியே சென்றதும் யாரிடமும் சொல்லாமல் கொள்ளாமல் பேங்கில் எடுத்து பத்திரப்படுத்தி வைத்திருந்த பத்தாயிர ரூபாயுடன் கிளம்பி விட்டாள்.

பட்டணம் சென்றிருந்த உதயசந்திரன்கூட அன்று மதியம்தான் திரும்புவதாக அண்ணன் சொல்லியிருந் தான்.

அதுகூட ஒரு வகைக்கு நல்லதுதான்! அவன் வருவ தற்குள் அந்த மோசக்காரன் பாஸ்கரிடம் லெட்டரை வாங்கிவிட்டு திரும்பிவிடலாம்!

சைக்கிளை எடுத்தவள் விறுவிறுவென ஊருக்கு ஒதுக்குப்புறமாய் உள்ள மலைமுகடு நோக்கி அழுத்த ஆரம்பித்தாள்.

அடுத்த பதினைந்து நிமிடத்தில் ஆள் அரவமற்ற அந்த மலைமுகடுப் பகுதிக்கு வந்துவிட்டாள்.

சுற்றிலும் பெரிய பெரிய மரங்களுக்கு நடுவே அந்த மலைமுகடுப் பகுதி. தன் ஒற்றையடி செம்மண் பரப்பில் அந்த அம்பாஸிடர் கார்.

அவள் வருவதைப் பார்த்து காரின் கதவைத் திறந்தபடி பாஸ்கர் இறங்கினான்.

அவள் வேகமாய் சைக்கிளை மிதித்ததால் மூச்சு வாங்க பக்கத்தில் போனாள்.

''வா... மைவிழி... கரெக்டாக வந்து விட்டாயே?'' அசட்டுச் சிரிப்பை பெரிதாக்கி இளித்தான் பாஸ்கர்.

அவள் பதில் சொல்லாமல் அவனை முறைத்தாள்.

''ம்ம்... சொன்னபடி பணம் கொண்டு வந்து விட்டாயா...?''

மைவிழி கையிலிருந்த பணப் பொட்டலத்தை தூக்கி காட்டினாள்.

"சபாஷ்! சொன்னபடியே செய்து விட்டாயே...!" என்ற படி கைகளை வேகமாய் தட்டினான்.

அப்படி அவன் தட்டியதும் காரின் பின் கதவை திறந்து கொண்டு இரண்டு முரடர்கள் இறங்க கூடவே ஒரு பெண்ணும் இறங்கினாள்.

அந்தப் பெண் -

மதுரம்!

* * *

முரடர்களுடன் இறங்கிய பெண் சாட்சாத் மதுரமே

"மதுரம் நீ... நீயா?"

திகைத்து அரண்டு போனவளாய் கேட்டாள் மைவிழி

மதுரம் பாஸ்கர் பக்கத்தில் வந்து நின்று அவளை அலட்சியமாய் பார்த்து கடகடவெனச் சிரிப்பொன்றை யும் உதிரவிட்டாள்.

"நான்... நானேதான்! உன்னை ஒரு வழி பண்ண பாஸ்கர் மூலம் இவ்வளவு ஏற்பாடுகளையும் பண்ணிய வளே நான் தான்... புரிந்ததா? இந்த மதுரத்தோடு யா மல்லுக்கட்டினாலும் இந்த கதிதான்!"

"என்ன உளறுகிறாய்?"

மைவிழி கோபமாய் சீற... பாஸ்கர் அந்த தடியர் களுக்கு சைகை செய்தான்.

தடியர்கள் இருவரும் ஓடிப் போய் கோழிக் குஞ்சை அமுக்குவது போல் மைவிழியின் இரு கைகளையும்



அசைக்க முடியாதபடி பற்றிக் கொள்ள... மைவிழி... செய்வதறியாமல் திணறினாள்.

பாஸ்கர் அவள் முன்னால் வந்து அவள் கையிலிருந்த பணப் பொட்டலத்தைப் பிடுங்கினான்.

"ஹலோ... மைவிழி... நடப்பது எல்லாம் அதிர்ச்சி யாக இருக்கிறதா? எல்லாம் நாங்கள் இருவரும் சேர்ந்து போட்ட பிளான். என்னை காதலிக்காமல் என்னை ஏமாற்றிய உன்னைப் பழி வாங்க வேண்டும். மதுரத் திற்கு அவள் விரும்பும் உதயசந்திரனை மயக்கி மணக்க வேண்டுமென்றால் உன்னை அப்புறப்படுத்த வேண் டும். அதனாலே நாங்கள் இருவரும் சேர்ந்து இந்த பிளானைப் போட்டு உன்னை இங்கு கடிதத்தை திருப் பிக் கொடுப்பது போல் வரவழைத்தோம். எங்களிடம் நீ வகையாய் மாட்டிக் கொண்டாய். இனி உன் கதி அதோ கதிதான்! உன்னை ஒரு நாள் ஆசை நாயகியாய் வைத்து விட்டு மறுநாளே மும்பை சேட் ஒருவனிடம் நல்ல விலைக்கு உன்னை விற்றுவிடப் போகிறேன்..."

பாஸ்கர் கொக்கரித்தபடி, திரும்பவும் முரடர்களிடம் சைகை செய்தான். அவர்கள் தங்கள் பலத்தைக் காட்டி திமிறிய மைவிழியை இழுத்துச் சென்று காரில் அமுக்கி னார்கள்.

பாஸ்கர் மதுரத்திடம் நன்றி போல் கைகளைத் தட்டி சொல்லிவிட்டு அவனும் காரில் ஏறிக் கொண்டான்.

கார் மலைமுகடுவை விட்டுக் கிளம்பியது. செம்மண் பாதையைக் கடந்து சென்னை செல்லும் புறவழிச் சாலை யினுள் நுழைந்து வேகம் பிடித்தது.

மதுரம் மைவிழி ஓட்டி வந்த சைக்கிள், ஒரு பெ புதர்ப் பக்கமாய் கொண்டு சென்று மறைத்து வைத்த

பின் ஒன்றும் நடவாதது போல் அப்பாவி முகத்து ஊர் நோக்கி விறுவிறுவென நடக்க ஆரம்பித்தாள்.



## 15

மைவிழியை முதலில் தேடியது தனசேகரன் தான். கொள்முதல் பற்றிய குறிப்பு ஒன்றை தற்செயலாய் வீட்டுக்கு எடுக்க வந்தவன் வீட்டில் மைவிழியைக் காணாமல் திகைத்தான்.

எங்கே போயிருப்பாள்? என தேடிவிட்டு முன்புறம் வந்தால் அவளது சைக்கிளும் இல்லை!

சைக்கிளை எடுத்துவிட்டு எங்காவது சென்றிருப்பாள் என எளிதாய் அவனால் நினைக்க முடியவில்லை.

ஏனென்றால் மைவிழி எந்த விஷயமானாலும் அவனிடம் சொல்லிவிடுவாள். சொல்லாமல் செய்வதில்லை!

எங்கே போனாள்? அதே யோசனையில் வெளிவந்து வயற்பரப்பு நோக்கி நடந்தபோது எதிர்ப்பட்ட குமரேசன் பெரிய வணக்கம் போட்டான்.

குமரேசன் அந்த கிராம கூட்டுறவு வங்கியில் வேலை பார்ப்பவன். தனசேகரனின் சிபாரிசால் வேலை



பெற்றவன். அதனால் அவனை பெரிதும் வணங்கியவன் கூடவே. ''ஐயா, நேற்று சின்னம்மா நம் வங்கிப் பக்கம் வந்து பணம் எடுத்துச் சென்றார்களே...?'' என்றதும் தனசேகரனுக்கு தூக்கி வாரிப் போட்டது.

''என்ன பணமா?''

''ஆமாம் ஐயா... பத்தாயிரம் ரூபாய்...! நான்தான் காசாளரிடம் சொல்லி உடனே வாங்கிக் கொடுத்தேன்...''

தனசேகரன் ஒரேடியாய் திடுக்கிட்டாலும் அவன் முன் காட்ட விரும்பாதவனாய், ''ம்ம்... ஆமாம்... நான் தான் எடுத்து வரச் சொன்னேன்...'' என அவனை அனுப்பி விட்டு சிந்திக்க ஆரம்பித்தான்.

நம்மிடம்கூட சொல்லாமல் மைவிழி பத்தாயிரம் ரூபாய் எடுத்திருக்கிறாள்? எதற்காக...? என்ன காரணமாயிருக்கும்?

திரும்பவும் ஒன்றும் பிடிபடாதவனாய் அதே யோசனையில் நடந்தான். களத்து மேட்டுப் பக்கம் வந்தபோது மணியக்காரர் சண்முகம் பிள்ளை எதிர்ப்பட்டார். ''தம்பி...'' என அழைத்து அவனை நிறுத்தினான்.

''ஒரு முக்கியமான விஷயம்...'' என ஆரம்பித்ததும் தனசேகரன் புருவம் சுருக்கினான்.

''உங்கள் கணக்குப் பிள்ளை தங்கையாவின் மகள் மதுரம் இருக்கிறாளே...?'' என இழுத்தார்.

''ம்ம்... மதுரம்... அவளுக்கு என்ன?'' என்றான் தனசேகரன் வியப்பாய்.

''அந்தப் பெண்... அடக்க ஒடுக்கமாயிருந்த கிராமத்துப் பெண். இப்போது அவளது போக்கே சரியில்லையே தம்பி...''

அவர் சொல்ல அதிர்ந்தவன், ''என்ன சொல்கிறீர்க
புரியும்படி சொல்லுங்கள்...'' என்றான் தனசேகரன்.

''அந்த மதுரம்... நேற்று நம் கிராமத்து ஒதுக்கு
புறமான மலைமுகடு பக்கம் எவனோ ஒருவனுடன்
சிரித்து சிரித்து பேசிக் கொண்டிருந்தாள். அந்த ஆளுக்கு
ஒரு முப்பது முப்பத்தைந்து வயதுதான் இருக்கும். கூலிங்
கிளாஸும், பரட்டைத் தலையுமாய் பார்க்கவே அசிங்
மாய்த்தான் இருந்தான். இதில் அவன் அம்பாஸிட
காரில் தான் அங்கு வந்திருந்தான். மேலும் அவர்களது
பேச்சில் அடிக்கடி உங்கள் தங்கையின் பெயரை மைவிழி...
மைவிழி... என உச்சரித்தார்கள். அதான் உங்களிடம் இத
பற்றி காதில் போட்டு வைக்கலாம் என நினைத்தேன்...
நான் நினைத்த மாதிரியே தற்செயலாய் நீங்களும் எதிரே
வந்துவிட்டீர்கள்...''

விஷயத்தைச் சொல்லிவிட்டு விடைபெற்றுக் கிளம்
பினார் மணியக்காரர்.

தனசேகரன் விஷயம் ஏதோ விபரீதம் ஆகுவதை.
மைவிழிக்கு ஏதோ ஆபத்து என்பதை புரிந்து கொண்
டான். விறுவிறுவென கணக்குப்பிள்ளை வீட்டை
நோக்கி நடக்க ஆரம்பித்தான்.

கணக்குப்பிள்ளை தங்கையா வீட்டில் முன்புறம் குறுக்
கும் நெடுக்குமாய் கெக்கலிப்புடன், 'மைவிழி ஒழிந்
தாள்...!' என்ற சந்தோஷத்தில் நடந்து கொண்டிருந்தவள்.
திடீரென பதைப்புடன் தனசேகரன் முன் வந்து நிற்
பதைப் பார்த்து திடுக்கிட்டுப் போனாள்.

அவனைப் பார்த்ததும் முகம் பேயறைந்தது போல்
ஆகி உள்புறமாய் ஓடி ஒளியப் போனாள்.



அதற்குள் அங்கு அரவம் கேட்டு தங்கையாவும் வந்து
விட, தனசேகரன் மணியக்காரர் சொன்ன விஷயத்தைக்
கூறி, மைவிழி காணாமல் போனதையும் தெரிவித்து,
''எல்லாம் உங்கள் மகள் மதுரத்திற்கு தெரியும்...'' என
கைகளால் சுட்டிக் காட்டினான்.

தங்கையா உடனே ஆவேசமாகி மதுரத்தின் தலை
முடியைப் பற்றியவர் படபடவென கன்னத்தில் இரண்டு
போடு போட்டார். உண்மையை கக்க ஆரம்பித்தாள்
மதுரம்!

* * *

அடுத்த ஐந்து நிமிடத்தில் மதுரம் விபரம் முழு
வதையும் சொல்ல அனைவரும் அதிர்ந்தே போனார்கள்.

அதிலும் அவளது தந்தை தங்கையா ஆவேசமடைந்த
வராய், ''பாவிப்பெண்ணே! உண்ட வீட்டுக்கே இரண்
டகம் பண்ணிவிட்டாயே...! உன்னை இவ்வளவு நாள்
அப்பாவி என்றல்லவா நினைத்தேன்...'' என்றபடி பட
படவென மதுரத்தைப் பிடித்து மறுபடியும் அறைய
ஆரம்பித்தார்.

''என்னை எல்லோரும் மன்னித்து விடுங்கள். நான்
பெரிய பாவத்தைச் செய்துவிட்டேன்...!'' என கைகூப்பி
னாள் மதுரம்.

தனசேகரனும் தாமதிக்கவில்லை.

தனக்குத் தெரிந்த கிராம போலீஸ் இன்ஸ்பெக்டர் சகா
யத்தைத் தேடி காவல்நிலையம் நோக்கி தனது பைக்கைத்
திருப்பினான்.

அங்கு சென்று அவரிடம் விபரம் சொல்லி அவருடன்
கான்ஸ்டபிள்கள் சகிதம் போலீஸ் ஜீப்பில் எல்லோரும்

ஏறிக்கொண்டு புறவழிச் சாலை நோக்கி வேகமெடு
தனர்.

அதே நேரம் -

சென்னை சென்றிருந்த உதயசந்திரன் தன
வேலையை முடித்துவிட்டு காரில் புன்னைவன கிராம
நோக்கித் திரும்பிக் கொண்டிருந்தான்.

ஹைவேஸ் சாலையில் வேகமாய் வந்தவன், தற்செ
லாய் ரோட்டோரமாய் ஒரு அம்பாஸிடர் கார் நி
பதையும், அதில் நாலைந்து நபர்கள் ஒரு பெண்ணை
அழுத்திப் பிடித்துக் கொண்டு ஓடவிடாமல் பிடித்திரு
பதையும் கண்டுவிட்டான்.

என்ன பட்டப் பகலில் கடத்தலா...? என்ற நினை
போடு காரை சட்டென பிரேக் செய்து திருப்பினான்
சரக்கென அந்த அம்பாஸிடரின் குறுக்கே நிறுத்தியப
இறங்கினான்.

இறங்கி அம்பாஸிடரினுள் பார்வையை ஓட்டியவ
அப்படியே அதிர்ந்தான்.

உள்ளே... முரடர்களின் பிடியில் சிக்கியிருந்த பெண்...
மைவிழி!

''மைவிழி... நீயா...?''

கத்தியபடி உதயசந்திரன் ஓடிவர...

''சந்திரன்... என்னைக் காப்பாற்றுங்கள்...!'' என
மைவிழி அபயக்குரல் கொடுத்தாள்.

அடுத்த தான் கற்றுத் தேர்ந்திருந்த கராத்தே கலையை
உபயோகித்து பாஸ்கரையும், மூன்று முரடர்களையும்
புரட்டி எடுத்தான் அவன்.



வலி தாங்காமல் அவர்கள் அலறினர்... மைவிழி தப்பித்தோம், பிழைத்தோம் என ஓடிப்போய் அவனது நெஞ்சினில் ஒட்டிக் கொண்டாள்.

அதேநேரம்... தனசேகரனுடன் இன்ஸ்பெக்டர் சகாயம் தலைமையில் வந்த போலீஸ் ஜீப் அவர்களை கண்டு பிடித்து நெருங்க ஆரம்பித்தது.

## 16



அடுத்து ஐந்து நிமிடத்தில் பாஸ்கரும் அவனது கூட்டாளிகளும் கைது செய்யப்பட்டனர்.

எல்லாம் முடிந்து சந்தோஷமாய் வீடு திரும்பியிருந்தார்கள்.

வீட்டில் அவர்கள் இருவரையும் தனியறையில் விட்டு விட்டு குறும்புச் சிரிப்புடன் தனசேகரன் அகன்று போனான்.

''பெயருக்கேற்றாற்போல்... இந்த அழகான விழிகளை வைத்துக் கொண்டு நன்றாக விழிக்கத்தான் செய்கிறாய்...'' என்றபடி, விலகி நின்று விழித்தவளை தன் பக்கத்தில் இழுத்து அணைத்தான் உதயசந்திரன்.

''ஐயோ...! என்ன இது அணைக்கிறீர்கள்? நாம் என்ன காதலர்களா...? காதலித்தோமா?'' என போலியாய் பதட்டம் காட்டி அலறியவளை மேலும் தன்னோடு இறுக்கி

அவளது பட்டான கன்னங்களில் இதழ்களைப் பதித்த
அவன்.

"சொன்னால்தான் காதலா? சில சமயம் சொல்லாம
நடப்பதும் காதல்தான்!" என்று இதழ் ஸ்பரிசத்தி
சிலிர்த்தவளின் காதுகளில் தேனாய் உதிர்த்தான்.

"என்ன சொல்லாமல் நடப்பதா? என்ன சொல்கி
கள். எனக்குப் புரியவில்லை?" என மறுபடியும் க
களை அகலமாய் அவள் விரிக்க, "அட... இன்னும் விழி
பதைப் பாரேன்...!" என கேலி செய்தவன், பின் சொ
லாமல் அப்படி ஒரு எண்ணத்தை மனசுக்குள் இருவரு
வைத்திருப்பதற்கு பெயர் என்ன? அதுவும் காத
தான்!" என விளக்கமும் கொடுத்தான்.

"அப்படியா...? என் மனசுக்குள் அப்படி ஒரு எண்ண
இருந்ததா...? எப்படி கண்டு பிடித்தீர்கள்?" என வி
லான புருவங்களை உயர்த்தி வினவ, அவன் குறும்பு
புன்னகையை உதிர விட்டவன், "அதை எப்போதே
கண்டு பிடித்து விட்டேன் கண்மணி. இருந்தாலும் நீ
சட்டென புரிந்து கொள்கிற மாதிரி ஒரு விளக்க
கொடுக்கிறேன் கேள்...!" என்றபடி அவள் மலர் முக
நிமிர்த்தி அவள் கண்களை உற்றுப் பார்த்துவிட்டு
"இந்த மைவிழிக் கண்கள் ஒவ்வொரு முறை என்னை
பார்த்ததும் சரி, பார்க்கும் போதும் சரி... பார்வையின்
வீச்சைத் தாங்காமல் நாணமுற குனிந்தது. நேருக்கு நே
பார்க்க முடியாமல் தரை தாழ்ந்தது... எல்லாம் ஏன்...?
ஏன்...? நீயே உன்னைக் கேட்டுப் பார்! உனக்குப் பு
யும்...!"

அவன் சொல்ல மேலும் முகம் சிவக்க நாணியவ
அப்படியே குனிந்து அவன் நெஞ்சினில் பொதிந்தாள்.



அவன் தொடர்ந்து, "எனக்கும் அப்படித்தான் மைவிழி.
உன்னைப் பார்த்த முதல் சந்திப்பிலேயே இனம் புரியா
உணர்வு ஒன்று மனதில் விழுந்து விட்டது. அது
உன்னுடன் பழகப் பழக... உன்னுடன் பேசும் ஆர்வம்...
தினம் தினம்... உன்னைப் பார்க்கும் ஆர்வம் வந்து அது
காதல் தான் என எனக்குப் புரிந்தது. என்ன... நான்
சொல்வது சரிதானே? உனக்கும் பொருந்தும் தானே?"

அவன் ஆவலாய் நிறுத்த, "எனக்கும் அப்படித்
தான்...!" என்றபடி முத்துப் பற்களைக் காட்டி கலகல
சிரிப்பை உதிர விட்டாள் அவள்.

பின் நிறுத்தி, "பாஸ்கர், அந்தக் கடிதம்..." என அவள்
தயக்கமாய் ஆரம்பிக்க அவசாமாய் குறுக்கிட்டவன்,
"அது பற்றி நீ எதுவும் விளக்கம் சொல்ல வேண்டாம்
கண்மணி. எல்லாவற்றையும் உன் அண்ணன் தனா,
மதுரம் மூலம் அறிந்து கொண்டேன். பாஸ்கர் உன்னை
ஏமாற்றி உருவாக்கிய கடிதத்திற்காக நீ இவ்வளவு பயந்து
'ரிஸ்க்' எடுத்திருக்க வேண்டாம். என்னிடம் சொன்னால்
அன்றே பாஸ்கரை ரெண்டு தட்டு தட்டியிருப்பேன்..."
என்றதும் பெரும் நிம்மதி பெருமூச்சை உதிர்த்தாள்.

கூடவே மதுரம் ஞாபகமும் அவளுக்கு வந்தது. அதை
அவனே விளக்கவும் செய்தான். "கண்மணி, மதுரம் இவ்
வளவு கொடூரமாய் இருப்பாள் என நான் நினைக்கவே
இல்லை. பாவி, உன் தோழியாய் அப்பாவி போல் இருந்து
கொண்டே என்னவெல்லாம் செய்து விட்டாள். அவள்
தந்தை நன்றாக அவள் முதுகில் போட்டதும்தான் அவ
ளுக்கு புத்தியே வந்திருக்கிறது.

மனம் திருந்தி எல்லா உண்மைகளையும் உளறிக்
கொட்டி விட்டாள். அவள் சொன்னதை வைத்து உன்

அண்ணன் போலீசுடன் வர... தற்செயலாய் காரில் வந்
நானும் உன்னை கவனித்துவிட... உன்னைக் காப்பாற்
முடிந்தது...!

அவன் பேசி முடிக்க... "நடந்தவைகளை விடுங்கள்
நாம் நம்மைப் பற்றி பேச வேண்டியது நிறைய இரு
கிறது. அது பற்றி பேசுவோம்..." என்றாள் மலர் வி
களை மேலும் மலரவிட்டவாறு.

அவனோ அவளை மேலும் இறுக்கியவன். "ஆமாம்...
ஆமாம்... நிறையப் பேச வேண்டும்... அதுவும் நம்மை
பற்றி...! ம்ம்... பேசுவோம்! அதற்கு முன்... ஒரு சின்ன
இனிப்பு விஷயம்...?" என்றபடி அவளது செவ்விதழ்
களை நோக்கி ஆசையாய்க் குனிந்தான்.

மேலும் முகம் சிவந்தவளாய், கண்களை இறுக மூ
இனிமைக் கனவுகளில் சஞ்சரிக்க ஆரம்பித்தாள் அவள்!

# வந்தனம் மகாராணி...!



1

அன்று ஞாயிற்றுக்கிழமை. லீவுநாள் தான். இருந்தும் என்னவோ, எதுவும் சரிப்பட்டு வரவில்லை என்பது போல் முகத்தை தொங்கப் போட்டு வைத்திருந்தாள் கவிதா. பக்கத்தில் உட்கார்ந்திருந்த உயிர்த்தோழி அவளைப் பார்த்ததும் 'குபுக்' கென எழுந்த சிரிப்பை அடக்கிக் கொண்டு, "என்னடி பெரிய யோசனை?" என்றாள்.

"நீ சொல்வது ஒன்றும் புரியவில்லை..." என்றாள் கவிதா மைவிழிக் கண்களை படபடத்தவாறு.

"என்ன புரியவில்லை...?" என்றாள் நீலா அக்க யாய் கன்னத்தில் கை வைத்தபடி.

"நீ புதிர் போல் ஒவ்வொன்றாகச் சொல்கிறாய். என குழப்பமாய் இருக்கிறது முதலில் தெளிவாகச் சொ நான் கேட்ட பணம் எனக்குத் தேவையான பண கிடைக்குமா?"

"கிடைக்கும்..." என்றாள் நீலா.

கவிதாவின் முகம் மீண்டும் குழப்பமாய் போவதை பார்த்து, "இதோ பார் கவி... உனக்கு எல்லாவற் யும்விட அந்த ஒரு லட்ச ரூபாய் பணம் ரொம்ப ரொம் முக்கியம். அது கிடைத்தால்தான் உன் தாயாருக்கு அ ஆபரேஷனை பண்ண முடியும். இல்லாவிட்டால் உ தாயாரின் உயிருக்கு..."

அவள் முடிப்பதற்குள், "பேச்சுக்குக் கூட அப்படி சொல்லாதே நீலா..." என காதைப் பொத்தினாள் கவித

"தெரிகிறதல்லவா? பின் ஏன் இன்னமும் பயப்படு கிறாய்?"

"பயப்படவில்லை...! மானம்... மானம் போய்விடு மேயடி...!"

"ஐயோடி...! உன் மானம் ஒண்ணும் கடலில் நீந்தி போய் கப்பலேறிவிடாது. நீ அப்படிச் செய்கிற விஷ மும் யாருக்கும் தெரியாது. தெரியப் போவதும் இல்லை நாலு சுவற்றுக்குள் நடக்கிற விஷயம். எனக்கு மட்டு இப்படி ஒரு வாய்ப்பும், பணமும் கிடைத்தால் சேலை உதறிக் கொண்டு ரோட்டிலே கூட நின்றுவிடுவேன் ஆனால் பார்...! அந்தப் பாழாய்ப் போன அழகு உன் னிடம் தான் கொட்டிக் கொண்டு கிடக்கிறதாம்..."



என்றபடி பக்கத்தில் வந்து நின்றவள், "பார், உன் சிறு இடையும், நளினமான வளைவுகளும், காந்தமான கண்களும், பழத்துண்டுகளான உதடுகளும்..." என வில்லி வர்ணிக்க, ச்சீ! கிண்டல் செய்யாதடி!" என தட்டிவிட்டாள் கவிதா.

"நான் கிண்டல் செய்யவில்லை. அந்த ஓவியக்காரன்... ம்ம்... அவன் பெயரென்ன...? மதனா... மன்மதனா...? அவன்தான் சொன்னான். உன்னை அப்படி வர்ணித்தான்..."

"என்ன... என்னைப் பார்க்காமலே சொன்னாரா...? எப்படி...?"

"எல்லாம் உன் போட்டோவைப் பார்த்து விட்டுத் தான்... நேரில் பார்த்தால் என்ன சொல்லுவானோ...?"

"அவர் எப்படி" என அவள் மறுபடி ஆரம்பிக்க, "அவர் என்ன அவர்...? அவன் என்றே சொல்லு... அவனுக்கு அவ்வளவு மரியாதை போதும்..." சட்டென குறுக்கிட்டு திருத்தினாள் நீலா.

"அவன் எப்படிப்பட்டவன் சொல்லு...!"

"எப்படிப்பட்டவன் என்றால்...?" இழுத்தாள் நீலா.

"உனக்கு முன்னப் பின்ன தெரியுமா?"

"ச்சீ! என்னடி நீ ஆண்களைப் போய் யாராவது முன்னழகு, பின்னழகு என்று பார்ப்பார்களா?"

"ஐயோ! விளையாடாதே நீலா.... நான் சீரியஸாய் பயந்து போய் கேட்கிறேன்..." என குரல் உடையச் சொன்னாள் கவிதா.

"ஏன் நடுக்கம் என்றே சொல்லேன்... உன் அழகாட அந்த பழத்துண்டு உதடுகள் கூட அடிக்கடி தந்தியடிப்பது போல் நடுங்கத்தானே செய்கிறது?"

"ஏய், என் நிலைமை உனக்கு கூட அப்படி சிரிப்பாய் போய் விட்டதாடி? எல்லாம் என் நேரம்...!" தலையில் அடித்தாள் அவள்.

கவிதா அலுக்க... பக்கத்தில் மீண்டும் வந்து தோளைக் கட்டினாள் நீலா.

"ஐயோ கோபிக்காதேடி! சும்மா ஒரு விளையாட்டுக் காக சீண்டிப் பேசினேன்! சரி விடு!"

இப்போது உனக்கு என்ன? அந்த மதனைப் பற்றிய முழு விபரம். அவன் நல்லவனா... கெட்டவனா... என்று தெரிய வேண்டும். அப்படித்தானே?

"ஆமாம்...!"

"அது ஒன்றும் பெரிய விஷயமில்லை. அண்ணன் வரட்டும் விசாரித்து விடுகிறேன்..."

"உன் அண்ணன் எப்போது வருவார்...?"

கவிதா கேட்க, நீலா மணிக்கட்டை திருப்பி கைக்கடிகாரத்தில் பார்வையை பதித்து விட்டு, "மணி என்ன மூன்றரையா? எங்காவது அங்கு இங்கு என சோவாரி விட்டு ஐந்து மணிக்கு அந்த சோம்பேறி கரெக்டாக வந்து சேரும். அப்போது நான் கேட்டுக்கொள்கிறேன்..." என்றாள்.

மறுபடியும் மௌனமாகி யோசித்தாள் கவிதா.

"என்ன கவி?"



"ஒரே குழப்பமாய், பயமாய் இருக்கிறது நீலா, இதனால் பிரச்சினை ஏதும் வந்துவிடாதே?"

"கண்டிப்பாக வராது. பணம் தான் வரும்.. அதுவும் ஒரு லட்சம்...!"

"ரூபாய் தந்து விடுவார்தானே...? கடைசியில் ஏமாற்றி விடமாட்டாரே?"

"மாட்டார்..."

"அப்படியானால் சரி. நான் முடிவெடுத்துவிட்டேன். நான் சம்மதிக்கிறேன்...!" என்றாள் அவள்.

"நல்ல முடிவு!" கைகளைத் தட்டினாள் நீலா.

"எது எப்படியோ, அந்த ஒரு லட்ச ரூபாய் பணத்தை வாங்கி உடனடியாய் ஆஸ்பத்திரியில் கொண்டு போய் கட்டி, அம்மாவுக்கு ஆபரேஷனை சீக்கிரமாக பண்ணச் சொல்ல வேண்டும். எப்படியும் அம்மாவின் உயிரை காப்பாற்றியாக வேண்டும்... அது போதும் எனக்கு!"

"எனக்கும் அது போதும் தான்! சதா அம்மாவின் நோய்க்காக மருந்தும், மாத்திரைகள் வாங்க நீ அல்லாடிக் கொண்டிருப்பதற்கு பதில்... இப்படி ஒரு ஆபரேஷன் செய்துவிட்டால் போதும். உனக்கு நிரந்தர தீர்வு ஏற்பட்டுவிடும்."

"உண்மைதான்! எல்லாவற்றுக்கும் காரணமான உனக்குத்தான் நன்றி சொல்ல வேண்டும். நன்றி நீலா...!"

"உன் நன்றியை அப்படியே வாங்கி என் இதயத்தில் பத்திரமாக வைத்துக் கொள்கிறேன். அப்படியே இன்னொரு கோரிக்கை. மற்றொரு விண்ணப்பம்..." என்றாள் அவள்.

"என்ன நீலா...?"

"ரொம்பவும் போரடிக்கிறது... எதாவது சினிமாவுக்கு போகலாமா?"

"சினிமாவா...?" என்றபடி கவிதா முகம் சுளிக்க போனவள், ஆர்வமாய் தன்னைப் பார்த்த நீலாவின் முகத்தைப் பார்த்து மாறினாள்.

"சரி வருகிறேன்!" என்றாள்.

"என்ன வருகிறாயா? நிஜமாவா? இன்று மழை தான் போ!"

"அப்படியானால் மறக்காமல் குடையையும் எடுத்துக் கொள்!"

இருவரும் கலகலவென சிரித்தார்கள்.

சட்டென சிரிப்பை நிறுத்தி கீழே எதையோ தேடுவது போல் குனிந்தாள்.

"என்னடி?"

"ரொம்ப நேரம் கழித்து நீ அப்படிச் சிரித்ததும் ஒரே முத்து மணிகளாய் சிதறி ஓடியதே... அதை பொறுக்க முடியுமா எனப் பார்க்கிறேன்..."

"ச்சீ!" என்றபடி அவள் கைகளைத் தட்டி மறுபடியும் கலகலவென கவிதா சிரித்தாள்.

கூடவே, நீலா சொல்வது உண்மைதான். அவளுடன் இருக்கும் போதுதான் அவள் சிரிக்கிறாள். அவளால் சிரிக்கவும் முடிகிறது.

அதன்பின் நீலா தாமதிக்கவில்லை. உள்ளே ஓடினாள். வெளிவந்தாள். தன் சின்ன பர்ஸைத் திறந்து காட்டினாள்.



மூன்று நூறு ரூபாய்...!

ஆட்டோவிற்கு போய் வர நூறு. டிக்கெட் நூற்றைம்பது. பாப்கார்ன் கொறிக்க ஐம்பது. கணக்குச் சொன்னாள். "இன்று என்னோட ட்ரீட். நீ ஒரு பைசா செலவு செய்யக்கூடாது!" என்றாள் கண்டிப்புக் குரலில்.

"நீ சொன்னாலும் பஸ்ஸிற்கான இருபது ரூபாயைத் தவிர என்னிடம் வேறு பணம் இல்லை" என்றாள் கவிதா வெள்ளேந்தியாக.

"கவலையை விடு! இன்னும் மூன்று நாட்கள் தான். அதன் பின் தான் நீ லட்சாதிபதியாகப் போகிறாயே...?"

"நீலா..."

"என்ன?"

"அப்படி வெறும் போஸ் கொடுப்பதற்கு யாராவது அவ்வளவு பணம் கொடுப்பார்களா?"

"கொடுப்பார்கள்! உன் போஸுக்கு அல்லடி. உன் அபரீதமான அழகிற்கு! செக்கச் செவேலென கிறங்கடிக்கும் அழகில் மன்மதன் ஏவிவிட்ட ரதி போல் தான் நீ ஜொலிக்கிறாய். நான் மட்டும் ஆண் பிள்ளையாய் பிறந்திருந்தால் உன்னைத்தான் ஒற்றைக் காலில் நின்று கல்யாணம் செய்திருப்பேன்...!" சொல்லியபடியே நீலா தன் ஒற்றைக் காலைத் தூக்கிக்கொண்டு நின்று காட்ட, கவிதா டக்கென சிரித்துவிட்டாள்.

அதை மறுபடியும் உற்றுக் கவனித்த நீலா, "இப்படித் தான் அடிக்கடி சிரியேன்! அதை விட்டுவிட்டு எதை எதையோ நினைத்து பயந்துகொண்டு... வாழ்வது ஒரு முறை...! அதை தைரியமாக வாழ்ந்து விடலாம்.

"என்ன?" எனவும் "சரி...! சரி... பாட்டி...!" என தலை யாட்டினாள் கவிதா.

இருவரும் நகைப்பை விடாமல் கிளம்பினர்.

வெளிவந்து ஆட்டோ பிடித்து தியேட்டரில் இற கினர்.

தியேட்டரில் முன்பே ரிலீஸான படம் என்பதால் சு ரான கூட்டம். நீலா ஓடிப் போய் கவுண்டரில் டிக்கெ வாங்கினாள். அவளை இழுத்துக் கொண்டு உள்ளே நுழைந்தாள்.

இருட்டு இருக்கைகளில் இருவரும் நம்பரைச் ச பார்த்து உட்கார்ந்தனர்.

நீலா தலையை உயர்த்தி நாலாபுறமும் பார்த்துவிட்டு "அட...!" என்றாள்.

"என்ன நீலா?"

"உனக்கு இரண்டு இருக்கைகள் தள்ளி ஸ்டைலா கோட்சூட்டுடன் ஒரு ஆள் உட்கார்ந்திருக்கிறான் பார் தாயா?" என்றாள்.

திரும்பிப் பார்த்துவிட்டு அவளைப் போலவே கி கிசுப்பாய், "ஆமாம்...!" என்றாள்.

"அவனை நன்கு பார்த்துக் கொள். அவன் தான் நா சொன்ன மதன். உன்னை அப்படி போஸில் வரைய போகிறவன். உனக்கு ஒரு லட்சம் ரூபாய் பணம் த போகிறவன்!" என்றாள்.

கவிதா திரும்பி அவனை உற்றுப் பார்த்தாள்.

வாட்டசாட்டமான உடற்கட்டுடன் கம்பீரமாய் ஒருவ கால் மேல் கால் போட்டுக்கொண்டு ஸ்டைலாய் உட கார்ந்திருந்தான்.



மற்றவர்களைப் போல் தலையை திருப்பி அங்குமிங்கும் பார்ப்பதோ, பார்வையை அலைய விடுவதேயில்லாமல் ஒரு நேர்கோட்டில் அவன் தனது முகத்தை வைத்திருந்ததே எதையோ பறைசாற்றியது.

சரியான அகம்பாவக்காரனாய், திமிர்க்காரனாய் இருப்பானோ?

அப்படி நினைப்பில் பார்த்துக் கொண்டிருக்கும் போதே அவன் கொஞ்சம் முன்னால் முன் சீட்டுப் பக்கம் கவனம் செலுத்தி சலனப்படுவதை உணர்ந்தான்.

அப்போது தான் கவிதா அதை கவனித்தாள்.

அவனுக்கு முன் சீட்டு... இருக்கையொன்றில் பெண் ஒருத்தி தனியே அமர்ந்திருக்க, இரண்டு சீட் தள்ளி அமர்ந்திருந்த இருபது வயது விடலை ஒன்று, கைகளைக் காட்டி ஏதேதோ பேசி அவளிடம் சில்மிஷம் செய்து கொண்டிருந்தது.

அந்தப் பெண் பயந்து ஏறக்குறைய நடுங்கிக் கொண்டிருந்தாள்.. பேசாமல் எழுந்து போய்விடலாமா...? என அவள் நினைத்து முயற்சி செய்வதும் தெளிவாய்ப் புரிந்தது.

இதை கவனித்த பின் சீட்டுக்காரனான அவன், அந்த மதன்தான் எழுந்துவிட்டான்.

என்ன செய்யப் போகிறான் இவன்? என கவிதா நினைக்கும் போதே அந்த விடலைப் பையனின் சட்டையை கொத்தாய்ப் பற்றி ஓங்கி ஒரு அறை விட்டான் அவன்!

அந்தச் செயலைக் கண்டு அந்த விடலையை விட பலமாய் அதிர்ந்தவள் கவிதா.

''என்னடி இது?''

நீலாவின் கைகளைப் பிடித்து அழுத்தினாள்.

அதிர்ந்த நீலாவும், 'நடப்பதைப் பாரு!' என்றபடி கவனிக்க ஆரம்பித்தாள்.

அந்த அடி வாங்கிய விடலை கன்னத்தை தடவியபடி சீறலாய் எழுந்தவன் அவனின் திடகாத்திரமான உருவத்தைப் பார்த்து வாய் பேசாமல் விறுவிறுவென ஓடிப் போனான்.

அந்த முன் சீட் பெண் திரும்பி அவனுக்கு இருகரம் கூப்பி நன்றி தெரிவித்தாள்.

அதை லேசான தலையசைப்புடன் வாங்கிவிட்டு அவன் பாட்டுக்கு தன் சீட்டில் எதுவுமே நடவாதது போல் உட்கார்ந்து நேர் பார்வை பார்க்க ஆரம்பித்தான்.

நீள மூச்சிழுத்து ஆசுவாசம் கொண்டாள் கவிதா.

அவள் தோளைத் தட்டினாள் நீலா.

''என்னவோ... பயந்தாயே...? பார் அநியாயத்தை தட்டிக் கேட்கிறான். நியாயமாய் இருக்கிறான். இவனை நம்பி போஸ் கொடுப்பது என்ன... நீ உன்னையே கூட ஒப்படைக்கலாம்...'' என்றாள்.

நீலா சர்வசாதாரணமாய் அந்த வார்த்தையைச் சொல்வதைக் கண்டு கவிதா பயங்கரமாய் திடுக்கிட்டு, ''என்னது... என்னடி சொல்கிறாய்?'' என்றாள் அதிர்ச்சியோடு.

நீலாவும் பேசியதை உணர்ந்து, உதட்டைக் கடித்தவள், ''சாரிடி! வாய் தவறி அப்படிச் சொல்லிவிட்டேன். மொத்தத்தில் நீயே... பார்... அவன்... அவன்... நல்லவன் தானே?'' என்றாள்.



பயம் விலகி தலையாட்டினாள் கவிதா.

அதற்குப் பின் படம் ஓடியது. நீலா படத்தைப் பார்த்தாலும் கவிதாதான் படத்தில் லயிப்பில்லாமல் அடிக்கடி அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

களையான கம்பீரமான முகம், சற்றும் திரும்பாத நேர் பார்வை, கால் மேல் கால் போட்டு யாருக்கும் அயராத அந்த தோரணை... விலையுயர்ந்த சூட் கோட், கையில் மின்னும் பிரேஸ்லேட்....

பணக்காரர்கள் என்றால் இப்படித்தானா? என அவள் நினைத்துக் கொண்டிருக்கும்போதே அவன் சட்டென திரும்பி அவள் பக்கம்... அவள் பக்கம் என்ன அவளைத் தான் நன்றாக பார்த்தான்.

டக்கென பயமாகிப் போய்விட்டது கவிதாவிற்கு.

எதற்காக என்னையே பார்த்துக் கொண்டிருக்கிறாய்? என்று ஓடிவந்து அவளுக்கும் ஒரு அறை போட்டு விடுவானோ?

நல்லவேளை! பார்த்த வேகத்திலேயே மறுபடி முகத்தை திருப்பி திரையைப் பார்க்க ஆரம்பித்துவிட்டான் அவன்.

ஆனாலும் அப்படி அங்கே உட்கார்ந்திருக்க அவளுக்கு என்னவோ போல்தான் இருந்தது.

''படம் பார்த்தது போதும். போவோம்டி!'' என்றாள்.

நீலா திரும்பி முறைத்தாள்.

''படம் குப்பைதான்! அதற்காக கொடுத்த காசை திருப்பியா கொடுக்கப் போகிறார்கள்? பேசாமல் இந்த ஏ/சி

குளிரை இன்னும் ஒரு மணி நேரம் அனுபவித்துவிட்டு போவோம்.... இரு!''

''என்னால் முடியவில்லை நீலா... தலை வே பாரமாகிவிட்டது. போவோம்!''

''அட! தலைவலி அஸ்திரத்தை கையில் எடுத்து விட்டாயா? இனி உன்னை லேசில் சமாளிக்க முடியா தான். பிலுபிலுவென அரித்து எடுத்துவிடுவாய். ச கிளம்பு!'' என்றபடி நீலாவும் எழுந்துவிட்டாள்.

இருவரும் வெளிவந்தார்கள்.

வெளிவந்ததும், ''தலைவலி பொய்தானடி?'' என் றாள் நீலா.

''உண்மை நீலா...! எப்போது அந்த தலைவலி மா திரை விளம்பரப் படத்தை தியேட்டரில் போட்டா களோ... அப்போதே, அந்த நொடியே பயங்கர தலை வலி ஒன்று என் தலைக்குள் வந்துவிட்டது!'' என்று கூறிச் சிரித்தாள் கவிதா.

பதிலுக்கு சிரித்த நீலாவின் கண்களில் தியேட்ட கேண்டீன் தென்பட, ''இரு. பாப்கார்னையாவது வாங்கி விட்டு வருகிறேன். இந்த தியேட்டரில் அது சுவையா இருக்கும்!'' என்றபடி ஓடினாள்.

திரும்பி இரண்டு கூம்பு பைகளில் பாப்கார்னை கொண்டு வந்து ஒன்றை அவள் கையில் கொடுத்தாள்.

இருவரும் கொறித்தபடி சாவகாசமாய் தியேட்ட படிகளில் இறங்கினர்.



''ஆட்டோகூட வேண்டாம். இருவரும் இதை கொறித்துக்கொண்டே காலாற நடந்துபோய் விடுவோம். ஆட்டோ செலவு மிச்சம்!'' என்றாள் கவிதா.

தலையாட்டி நீலா சம்மதித்தாள்.

இருவரும் தியேட்டரின் மெயின் கேட்டை நோக்கி நடந்தார்கள்.

அங்கு தயாராய் அவள் வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருந்தது போல் நின்று கொண்டிருந்தான் அவன்... மதன்!



## 2

மதன் நிற்பதை முதலில் கவனித்தவள் கவிதா தான்...! அவனது அந்த நீளமான பளபளப்புக் காரில் சாய்ந்தபடி ஸ்டைலாக நின்று கொண்டு அவர்களையே பார்த்துக் கொண்டிருந்தான்.

நேராய் வாசலுக்கு நடுவே நின்று கொண்டிருந்ததால் அவனைத் தாண்டித்தான் அவர்கள் செல்ல வேண்டும்.

''அங்கே பாரு அவன்!''

கவிதா கிசுகிசுப்பாய் சொன்னதும் நீலாவும் பார்த்து திகைத்தாள்.

"என்னடி.... இது? நம்மைப் போலவே படம் பா காமல் எழுந்து வந்துவிட்டான். அவனுக்கும் தலைவ யாய் இருக்குமோ?"

"ஐயோ! இப்போது புதுத்தலைவலி போல் அ னிடம் வசமாய் மாட்டிக் கொண்டோமே அதை யோசி

நீலா திரும்பி அவளை முறைத்தாள்.

"ஏண்டி இப்படி பயந்து நடுங்குகிறாய்? அவர் ஒன் றும் உன்னைக் கடித்துத் தின்றுவிடமாட்டார். நான் தா பக்கத்தில் இருக்கிறேனே? தைரியமாய் வா! ஒரு 'ஹலோ சொல்லிவிட்டு போய்க்கொண்டே இருப்போம்..." எ றாள்.

நீலாவின் பேச்சில் தைரியம் வந்தவளாய் கவிதா ந தாள்.

அவன் இன்னும் அதே போஸில் அவர்களை பார்த்துக் கொண்டிருக்க.... பக்கத்தில் சென்றதும் நீல "ஹலோ, மிஸ்டர் மதன்..." என்றாள் உற்சாகமாய்.

தொடர்ந்து, "என்ன இந்தப் பக்கம்?" என்றாள் தெ யாதவள் போல் அவனை அப்போதுதான் பார்ப்ப போல்.

அவன் மதன் புருவம் உயர்த்தியவன், "வேறொன் மில்லை. இந்த இரண்டு இளம் பெண்கள் பாதி படத்துடன் தியேட்டரை விட்டு வெளியே வருவார்க அவர்களை பார்த்து விட்டுப் போகலாம் என காத்திரு கிறேன்..." என்றான் கொஞ்சமும் சிரிக்காமல்.

"ஓ..." என மறுபடியும் நீலா வாய் பிளந்தவள், "அ படியானால் தியேட்டரில் எங்களை நீங்கள் பார்த்து வி டீர்களா?" என்றாள்.



"நீங்களும் என்னை பார்த்து விட்டீர்கள் தானே?" மடக்கினான் அவன்.

"அது... அது... சரியாய் கவனிக்கவில்லை..." சமாளித்தாள் நீலா.

"நான் சரியாக கவனித்தேன்..." என்றான் அவன் லேசான சிரிப்பை அந்த இறுக்கமான உதடுகளில் பரவ விட்டவாறு.

கூடவே, "இது யார்.... நீங்கள் சொல்லவே இல்லையே...?" என கவிதாவைக் காட்டிக் கேட்க, நீலா தன் மறதிக்கு தலையிலடித்துக் கொண்டவள் போல், "பார்த்தீர்களா...? நான் ஒருத்தி... முக்கியமான விஷயத்தைச் சொல்லாமல்..." என்றவள் தொடர்ந்து, "இவள் தான் கவிதா. நான் அன்று சொல்லியிருந்தேனே... அந்த ஒரு லட்சம்..." என்றதும் சட்டென பிரகாசமானான் அவன்.

"மை காட்! அது நீங்கள் தானா?" என கவிதா மீது தன் பார்வையை முழுவதும் திருப்பி மேலிருந்து கீழ் வரை அளவிட... கூச்சமுடன் நாணினாள் கவிதா.

அவள் தயக்கத்தை உணர்ந்தவன் போல் டக்கென, "ஐ... ஆம் மதன்! மதன் குருப் ஆப் கம்பெனிஸ்..." என்றபடி கைகளை நீட்டினான்.

பதிலுக்கு பெரிதாய் கை கூப்பினாள் அவள். அதை அவளது கைகுலுக்காத தயக்கத்தை வேடிக்கையாய் ரசித்தவன், "ஓ... அவ்வளவு பயந்த பெண்ணா நீங்கள்?" என்றான்.

அதற்கும் அப்பாவியாய் தலையசைத்தாள் கவிதா.

"பார்த்தீர்களா... நான் சொன்னது உண்மை தானே?" என்றாள் நீலா குறுக்கிட்டு.

"உண்மை தான்...!" என்றான் அவன் அழுத்தமாய்.

'எதைச் சொல்லியிருப்பாள் இவள்?' என கவிதா நீலாவைப் பார்க்க, "எல்லாம் உன் கூச்சத்தைத்தான். ஆண்கள் என்றாலே பேசப் பழக ரொம்பவும் கூச்சப் படுவாய் என்று..." என விளக்கவும் நிம்மதி கொண்டாள்.

"அதற்காக பெண்கள் போல் சேலை கட்டிக் கொண்டெல்லாம் என்னால் வர முடியாது..." என மதன் சீரியஸான குரலில் சொல்ல சட்டென தன்னை மறந்து கவிதாவும் சிரித்துவிட்டாள்.

பின் அவள் சிரிக்கும் அழகை அவன் ரொம்பவும் உற்றுப் பார்ப்பது கண்டு நிறுத்தினாள்.

நீலா ஞாபகம் வந்தவளாய், "ஆமாம்... நீங்கள் ஏன் படம் பார்க்காமல் வந்துவிட்டீர்கள்?" என்றாள்.

"நீங்கள் எதற்காக எழுந்து வந்தீர்களோ... அதே காரணம் தான் எங்களுக்கும்...!" என்றாள்.

"எங்களுக்கு தலைவலி. அதுவும் பயங்கரத் தலைவலி!" என்றாள்.

"அந்த பயங்கரத் தலைவலி எனக்கும் வரக்கூடாதா? அப்படி எதுவும் சட்டம் இருக்கிறதா?" என்றான் பதிலுக்கு.

"நீங்கள் பேச்சில் கில்லாடி நான் ஒத்துக்கொள்கிறேன்!" என்றாள் நீலா சரண்டராகுவது போல் கைகளை உயர்த்தி.



அவன் கடகடவென சிரித்தவன், சிரிப்பை நிறுத்தி விட்டு மறுபடியும் கவிதாவை உற்றுப் பார்த்தான். அந்த படபடக்கும் மைவிழிகளை, பவழத் துண்டுகள் போலான அந்த செவ்விதழ்களை வெகுவாய் ரசித்தவன், "உங்கள் தோழிக்கு பேச்சு வராதா? ஊமையா?" என்றான் வேண்டுமென்றே.

"இல்லையே நன்றாகப் பேசுவாளே! கேட்கிறீர்களா?" என்ற நீலா, அதே வேகத்தில் கவிதா பக்கம் திரும்பி, "ஏய் கவி, கொஞ்சம் சாருக்கு பேசிக் காட்டிடு. ஆனா... ஆவனா... அல்லது பாட்டி வடை சுட்ட கதை என்று எதையாவது ஒண்ணாம் கிளாஸில் படித்ததைச் சொல்லேன்..." எனவும் மறுபடியும் மூவரும் சிரித்தார்கள்.

"மதன் ஸார் உங்களுடன் இருந்தால் சிரித்துக் கொண்டே இருக்கலாம் போல் இருக்கிறதே?" என்றாள் நீலா சிரிப்பை நிறுத்தி.

"ஆனால் உங்கள் அருமைத் தோழி பேசக்கூட யோசிக்கிறார்களே?" என மறுபடியும் கவிதாவின் மேல் பார்வையை ஒட்டி அவளைக் கூர்மையாகப் பார்த்தான் அவன்.

"அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. நான் பேசுவேன்..." என்றாள் கவிதா திணறிக்கொண்டு.

"ஆஹா! பேசா மடந்தை பேசிற்று!" கைகளைத் தட்டினாள் நீலா.

மதனும் முகத்தில் ஒருவித குறுகுறுப்பைக் கொண்டு வந்தபடி, "சரி... எளிமையாகவே உங்களிடம் கேள்வி

யொன்று கேட்கிறேன். பதில் சொல்கிறீர்களா?'' என்றான்.

''கேளுங்கள்...'' என்றாள் என்ன கேட்கப் போகிறானோ என்ற பயம் விலகாமலே.

''உங்கள் பெயர் என்ன?'' என்றான் அவன் அமைதியாய்.

''கவிதா...!'' என கிளிப்பிள்ளையாய் சொல்லி வாயை மூடினாள் கவிதா.

இருவரும் குபுக்கென திரும்பவும் விழுந்து சிரித்தார்கள்.

'ஏய் , ஓரசு, உன்னை அவர் கிண்டல் செய்கிறார் அதுகூடவா உனக்குத் தெரியவில்லை?' என்றதும் தான் கவிதாவுக்கு அது உரைத்தது.

டக்கென முகம் சிவந்து குனிந்தாள்.

அதை கவனித்து ரசித்த மதன், ''நீலா, உங்களிடம் மட்டும் இந்த கன்னக் கதுப்பு. வெட்கம் துளிக்கூட இல்லையே ஏன்?'' என்றான்.

''தெரியவில்லை ஸார்...! வேண்டுமானால் இவளிடம் கேட்டு கொஞ்சம் கடன் வாங்கிக் கொள்ளட்டுமா?'' என்றாள் அவள் சீரியஸான குரலில்.

கவிதா அப்போதுதான் வீணாக அவனிடம் பேச்சை வளர்த்துக் கொண்டிருப்பதை உணர்ந்தாள். அதனால் நீலா பக்கம் திரும்பி, ''மறந்துவிட்டாயா நீலா? நேரமாகிறது. வீட்டுச் சாவியை கொண்டு வந்துவிட்டாய். உன் அண்ணன் வந்து தேடுவாரே...?'' என்றபடி மதன்



அறியாமல் கண்களால் அவளுக்கு ஒரு ஜாடையும் காட்டினாள்.

நீலாவும் அதைப் புரிந்து கொண்டவள் போல் வெகுவாய் தலையாட்டி, ''ஆமாம்... ஆமாம்...! நேரமாகி விட்டது கிளம்புவோம்!'' என்றாள்.

''காரில் ஏறுங்கள். நானே ட்ராப் செய்கிறேன்...'' என்றான் மதன்.

''ஐயோ! இன்று வெள்ளிக்கிழமை தானே...? மன்னித்து விடுங்கள் ஸார்...!'' என்றாள் நீலா போலியாய் பதட்டம் காட்டி.

''ஏன்... வெள்ளிக்கிழமைக்கு என்ன?''

''அதாவது... சார், வெள்ளிக்கிழமை மட்டும் நாங்கள் யார் காரிலும் ஓசி சவாரி செய்யக்கூடாது என்று ஒரு திடமான கொள்கையை இருவரும் வைத்திருக்கிறோம். அதனால் நாங்கள் போய்க் கொள்கிறோம். நீங்கள் கிளம்புகிறீர்களா ஸார்...?''

சொல்லியபடி கொஞ்ச நேரத்திற்கு முன் கவிதா செய்தது போல் ஒரு ஜாடையை அவனுக்கு காட்டினாள் நீலா.

அவனும் புரிந்துகொண்டது போல் தலையாட்டினான்.

''நல்ல கொள்கை தான்!'' என்றபடி சிரிப்புடன் காரிலேறி கிளம்பினான்.

அவன் கார் பார்வையிலிருந்து மறைந்ததுதான் நெஞ்சு தாழ மூச்சு விட்டாள் கவிதா.

அதை கவனித்த நீலா, ''ஹேய், இன்னமும் உன் பயம் தீரவில்லை? அவர் என்ன கரடியா? புலியா? இந்த பயம் பயப்படுகிறாய்?'' என்றாள்.

"அது இல்லை... இது வேறு பயம்..." என்றாள் கவித

"வேறு பயமா...?"

"இப்படி வாட்டசாட்டமாய் கிண்டலும் கேலியுமா பேசுகிறார். இவர் முன் போய் அப்படி சிலை போ நிற்பது கூட முடியுமா?"

"நீ நிற்பாய். மேலும்..."

"சொல்லு..."

"மதன் தொழில் விஷயத்தில் பக்கா ஜென்டில்மே கையில் பிரஷ்ஷைப் பிடித்துவிட்டால் அவ்வளவு தா பக்கத்தில் இடியே விழுந்தாலும் கவனத்தை திருப்பமா டார்..."

"ஓவியத்தின் மீது அவ்வளவு ரசனையா அவருக்கு?

"ரசனையல்ல... பணக்காரர்களின் செல்ல ஹாபி என்ற நீலா தொடர்ந்து, "சரி... சரி... பேச நேரமில்லை. அதோ... ஒரு பஸ் வருகிறாற் போல் தெரிகிறது. நம் செவன்டிதான். வா... ஏறிவிடுவோம்...!" என்றப ஸ்டாப்பை நோக்கி ஓடினாள்.

கவிதாவும் பின்தொடர்ந்து ஓடினாள்.

இருவரும் பஸ்ஸில் தாவி ஏறிக் கொண்டார்கள். பிடித்து உட்கார்ந்தார்கள். ஜன்னல் ஓர இருக்கையி உட்கார்ந்த கவிதா பார்வையை வெளியே ஓட்டியவ திடுக்கிட்டாள். அங்கு சற்று தூரத்தில் தெருமு மறைவில் காரை நிறுத்தியபடி எல்லாவற்றை கவனித்துக் கொண்டிருந்தான் அவன்! மதன்!





# 3

ஸ்டாப்பை விட்டு பஸ் அகலும் போது... தெருமுனையில் இருந்து தன்னையே வெறித்துப் பார்த்த அந்த உருவம் மதன்தான் என கவிதா தெரிந்து கொண்டாள்.

ஆனால் நீலா நம்ப வேண்டுமே?

கெக்க பிக்கவென ஒரு சிரிப்பு சிரித்தவள், "ஒரு வேளை மதன் இன்று 'டபுள் ஆக்ட்' டாக இருக்கக்கூடும். ஒரு மதன் காரில் ஏறி போய்விட்டார். இன்னொரு மதன் தெருமுனையில் நின்று உன்னை வெறித்துப் பார்க்கிறார். சினிமா கதை போல் 'ட்வின்ஸாக' இருக்குமோ?" என்றதும், "சசீ! விளையாடதேடி. நான் பார்த்தது உண்மை!" என்றாள் கவிதா.

அதற்கும் சலிக்காமல் நீலா பதில் சொன்னாள்.

"வேறென்ன? மதனிடம் சிகரெட் பாக்கெட் காலியாகி இருக்கும். பெட்டிக்கடை பக்கம் அவசரமாய் நிறுத்தியிருப்பார். அப்படியே பெட்டிக் கடையில் சிகரெட் வாங்கியபடி அவர் பார்க்க... நீ... பார்க்க... அவள் நோக்கினாள்... அண்ணலும் நோக்கினாள் போலாகி..." என மறுபடியும் விளையாட்டுத்தனமாய் பேசிய அவளை இறுக தொடையில் கிள்ளிவிட்டாள் கவிதா.

"ஐயோ... வலிக்குதடி!"

"அப்படியானால் சீரியஸாய் பதில் சொல்லு. அ
பெட்டிக்கடைகூட இல்லை..." என்றபடி திரும்ப
கவிதா விஷயத்திற்கு வந்தாள்.

"ஐயோ...!" என தலையிலடித்தாள் நீலா. "இப்போ
அதுவாடி பிரச்சினை? மதன் தியேட்டரில் உன்னை
பார்த்தார். நீயும் அவரைப் பார்த்து விட்டாய். இருவ
பேசியாயிற்று. இனி இரண்டு நாள் கழித்து அந்த மாட
பெண்ணாய் நீ நின்றால் போதும். உனக்கு ஒரு லட்
கிடைத்துவிடும். அதைக் கொண்டு போய் நீ ஆஸ்ப
திரியில் கட்டினால் உன் அம்மாவின் முக்கியமான ஆ
ரேஷன் நடந்துவிடும். அது போதும்தானே? அதற்கு
பின் இந்த மதன் யாரோ... நீ... யாரோ...! ஏன் கவலை
படுகிறாய்?" என்றாள்.

கவிதாவிற்கும் அவள் சொல்வது நன்கு உரைத்தது

"உண்மைதானே? அந்த ஓவிய மாடலாய் அவ
முன் நின்றால் போதும். பணம் கிடைத்துவிடும். பி
அவள் பிரச்சினை எல்லாம் தீர்ந்துவிடும்..."

நீலா போலவே நினைப்பை ஓடவிட்டு உற்சாகமா
நினைத்தவள், "ரொம்பவும் தேங்க்ஸ் நீலா, உனக்கு
தான் நான் நன்றி சொல்ல வேண்டும்...!" என்றா
குரலில் நெகிழ்ச்சி பொங்க.

"அட... மறுபடியும் இந்த நன்றி கின்றி என ஆர
பித்துவிட்டாயா?" என்றவள், "ஒன்று செய்யேன். பே
மல் 'நீலாவுக்கு நன்றி...' என ஒரு பெரிய போஸ்ட
அடித்து ஊரெங்கும் ஒட்டி விடுகிறாயா? எனக்கும் ஒ



விளம்பரம் ஓசியில் கிடைத்தது போல் இருக்கும்?" எனவும் பக்கென சிரித்துவிட்டாள் அவள்.

அதற்கும் நீலா, "அப்பாடி! சிரித்துவிட்டாயா? இந்த சிரிப்பை அப்படியே நழுவவிடாமல் முகத்தில் பிடித்து வைத்துக் கொள்ளடியம்மா, வீடு வரும் வரை அப்படியே இருக்க வேண்டும். என்ன...?" என்று கேட்டுவிட்டு, "இல்லையென்றால் நான் ரொம்பவும் பொல்லாதவளாகிவிடுவேன்..." என முடிக்க அதற்கும் சிரித்தாள் கவிதா.

பின் ஏதேதோ பேசியபடி இருவரும் வீடு வந்து சேர்ந்தனர். கவிதாவின் வீட்டின் முன்புறம் லைட் எரிந்து கொண்டிருந்தது.

அம்மா இன்னும் தூங்கவில்லையோ?

நீலாவும் கூடவே உள்ளே வந்தாள்.

கட்டிலில் அம்மா படுத்திருக்க பக்கத்து மர நாற்காலியில் தங்கம்மா பாட்டி உட்கார்ந்து கொட்டாவி விட்டுக் கொண்டிருந்தாள்.

கவிதாவைப் பார்த்ததும் எழுந்து வெளிவந்து அவளையும் அறையை விட்டு கூட்டி வந்தாள்.

"இப்போதுதான் தூங்குகிறாள். மருந்து மாத்திரையெல்லாம் சரியாக கொடுத்துவிட்டேன். ஆனால் ஒரு மணி நேரம் ஒரே இளைப்புத்தான். மூச்சு விடவே ரொம்ப சிரமப்பட்டாள்..." என்றாள்.

கவிதா நிமிர்ந்து பார்த்தாள். உள்ளே அறையில் தூங்கும் அம்மாவின் முகத்தில் அந்த வேதனையின் கோடுகள் அப்பட்டமாக தெரிந்தது.

பாட்டி சொல்வது உண்மை தான். அம்மா ரொம்ப சிரமப்படத்தான் செய்கிறாள். அந்த ஆபரேஷனை சீ கிரமாகச் செய்ய வேண்டும். டாக்டர் தெளிவாகச் சொல் யிருக்கிறாரே? அந்த ஆபரேஷனை மட்டும் செய்துவிட டால் உன் அம்மாவின் உடம்பிற்கு இனி எவ்வித பிர சினையும் வராது என்று?

நீலாவுக்கும் அவளது நிலைமை புரிந்தது.

அவள் கைகளைப் பிடித்து அழுத்தினாள்.

''இன்னும் இரண்டு நாள் தானடி? பொறுத்துக் கொள் அதன்பின் பணம் கிடைத்துவிடும். எல்லாவற்றையும் சரிசெய்து விடலாம்...!'' என்றாள்.

கவிதா தலையாட்டினாள்.

கூடவே, ''சரி நீலா, உன் அண்ணன் வந்திருப்பாரா? அல்லது இங்கே தங்கிவிடேன்...'' என்றாள் அவளை விட்டுப் பிரிய மனமில்லாதவளாய்.

நீலா மறுப்பாய் தலையசைத்தாள்.

''இல்லை கவி... என் அண்ணனைப் பற்றித்தான் உனக்குத் தெரியுமே? நான் இல்லாவிட்டால் வேதாளம் முருங்கை மரம் ஏறுவது போல் திரும்பவும் அது குடிக்கச் சென்றுவிடும். அதற்காகவாவது நான் கிளம்பியாக வேண்டும். கிளம்பட்டுமா?'' என்றாள்.

மனமில்லாமல் அவளுக்கு விடை கொடுத்தாள்.

பின் அடுப்படி சென்று பழைய சாதத்தையும், ஊறு காயும் எடுத்துக் கொண்டு முன் தட்டிற்கு வந்தாள்.

''நீ சாப்பிடு கண்ணு. நான் சாப்பிட்டுவிட்டேன்...'' என்றாள் பாட்டி.



தங்கம்மா பாட்டிக்கு அம்மாவைவிட பத்து வயது கூடுதலாக இருக்கும். தூரத்து அம்மா வழிச் சொந்தம் தான். பெற்ற ஒரே மகனும் பெரிய படிப்பு படித்து வெளிநாடு சென்று விட கணவனையும் இழந்து ஆதரவு தேடி தனி மரமாய் நின்றவளை ஐந்து வருடங்களுக்கு முன் அம்மாதான் சேர்த்துக் கொண்டாள்.

இருக்கிற கஞ்சிச் சோற்றை இருவரும் பங்கு போட்டுக் கொள்ளலாம்.... என்று அழைத்ததும் தயங்கித் தயங்கி தான் வந்தாள்.

அப்போது கவிதா கல்லூரி படிப்பு படித்துக் கொண் டிருந்த நேரம். அம்மா பக்கத்து தீப்பெட்டி பேக்டரியில் தினக்கூலியாய் குச்சி அடுக்கும் பணி செய்து சம்பாதித் துக் கொண்டிருக்க... அவளோடு தங்கம்மா பாட்டியும் சேர்ந்துகொண்டாள்.

இருவரும் சேர்ந்தே வேலைக்குச் சென்று மாலை திரும்பினர். அதுவும் இரண்டு வருடங்கள் தான். அதற்குப் பின் பேக்டரியில் ஆள் குறைப்பு செய்கிறோம் என்று முடிவெடுக்க இருவருக்கும் அந்த வேலையும் போயிற்று.

பின் வீட்டிலே இருந்து வயர் கூடை பின்னினார்கள். ஊறுகாய், அப்பளம், வடாம் என தங்கம்மா பாட்டி தனக் குத் தெரிந்த வகைகளை எல்லாம் அம்மாவிற்கு சொல் லிக் கொடுத்து... அதை பாக்கெட்டில் வைத்து கடை களுக்கு, தெரிந்த வீடுகளுக்கு விற்க ஆரம்பித்தனர்.

ஓரளவு வருமானம் வர ஆரம்பித்தது.

அந்நேரம் பார்த்து கவிதாவும் டிகிரி படிப்பை முடித்து ஆடிட்டிங் கம்பெனி ஒன்றில் ஐந்தாயிரம் ரூபாய் சம்பளத்தில் வேலைக்குச் சேர்ந்துவிட்டாள்.

பின் அவள்தான் பிடிவாதம் பிடித்து, "இருவரு உழைத்தது போதும். நான் சம்பாதிக்கிறேன். நிம்மதிய உட்கார்ந்து சாப்பிடுங்கள்!" என இருவரையும் வீட்டி ஓய்வாய் உட்கார வைத்தாள்.

அப்படி ஒரு இரண்டு வருடங்கள் அமைதியா செல்ல, புயலடிப்பது போல் அம்மாவிற்கு அந்த மூ சிரைப்பு நோய் வந்துவிட்டது.

ஆஸ்பத்திரிக்கு ஓடினால் டாக்டர்கள் என்னெ ணமோ சொன்னார்கள். இதய பகுதியில் ஒரு சி ஆபரேஷன் செய்தால் சரியாகி விடுமாம். அதற்குத்தா ஒரு லட்சம் ரூபாய் செலவாகுமாம்.

அதைச் செய்யாவிட்டால் இன்னும் ஆறு மாத களில் அம்மாவின் உயிருக்கே ஆபத்தாகிவிடும் என் கெடு வேறு!

அதனாலே கவிதா யோசித்தாள். வழி தேடினா அப்படித் தேடியதில் நீலா மூலம் ஒரு வழியு கிடைத்தது.

அந்த மதன் கலா ரசிகனோ... இல்லை ஒவிய கிறுக்கனோ... எப்படியோ இருந்துவிட்டுப் போகட்டு ஒரு மணி நேரம் அவன் முன்னால் நின்றுவிட்டு பண துடன் ஓடி வந்துவிட வேண்டியதுதான்.

அவள் மனதுள் இப்படி யோசித்துக் கொண்டிரு வேளையில் தான், தங்கம்மா பாட்டி, "என்ன கண்ணு பணத்துக்கு வழி கிடைத்துவிட்டதா?" என்றாள்.

"கிடைத்துவிட்டது..." என்றாள் மென்மையாக.

"என்ன வழி கண்ணு...?"



பாட்டி திரும்பக் கேட்க திணறினாள் அவள். எதைச் சொல்வது? யாரோ ஒரு அந்நியன் முன் போஸ் கொடுத்துக்கொண்டு ஒரு மணி நேரம் நின்றால்... பணம் தருவானாம்!

பாட்டியிடம் சொன்னால் நம்பவா போகிறாள்?

யோசித்தவள், "அலுவலகத்தில் கேட்டிருக்கிறேன். தருகிறேன்... என்று சொல்லியிருக்கிறார்கள்..." என சமாளித்தாள்.

எதற்கும் கேட்டுப் பார்ப்போம் என அலுவலகத்தில் ஆடிட்டரிடம் கேட்ட போது, "ஸாரிம்மா. அப்படியெல்லாம் அட்வான்ஸோ, கடனோ கொடுக்கும் வழக்கம் கம்பெனி ரூல்ஸ்படி கிடையாது..." என கண்களை உருட்டி அவர் கறாராய்ச் சொன்னது அவள் ஞாபகத்திற்கு வந்து உரைத்தது.

அதற்குள் பேசும் அரவம் கேட்டு தாய் விசாலமும் விழித்துவிட உள்ளே ஓடினாள் அவள்.

"வந்துவிட்டாயா கண்ணு?" என்றாள் விசாலம். விழிகள் முழுவதையும் திறந்து அவளைப் பார்த்தபடி.

"பக்கத்தில் போய் அம்மாவின் தலைமாட்டுப் பக்கம் உட்கார்ந்து ஆதரவாய் தாயின் தலையைப் பிடித்துக் கொண்டு பரிவாய் முடிகளை கோதினாள்.

"வந்துவிட்டேன். உங்களுக்கு எப்படி இருக்கிறது அம்மா?" என்றாள் கனிவாய்.

"அது... அது... ஒன்றுமில்லை. கொஞ்சம் மூச் சிரைப்பு வந்தது கண்ணு...! மாத்திரை போட்டுக் கொண்டதும் சரியாய் போயிற்று..." உடம்பில் எழுந்த

வேதனையை மறைத்துக்கொண்டு அம்மா பேசுவது புரிந்தது.

குனிந்து மென்மையாய் தாயின் நெற்றியில் முத்தமிட்டாள். "ஒன்றும் கவலைப்படாதீர்கள் அம்மா. பணத்திற்கு ஏற்பாடு பண்ணிவிட்டேன். இன்னும் இரண்டு நாளில் கிடைத்துவிடும். அதற்குப் பின் ஆபரேஷன் செய்துவிடலாம்..." என்றாள் உற்சாகம் ஊட்டும் குரலில்.

கவிதாவின் பேச்சைக் கேட்டு உலர்ந்த உதடுகளில் வறண்ட புன்னகையை உதிரவிட்ட விசாலமும் நடுங்கும் கரங்களால் அவளை அப்படியே தோளோடு அணைத்துக் கொண்டாள்.

வரப் போகும் ஆபத்தை கொஞ்சமும் அறியாத அப்பாவியாய் அப்படியே தாயோடு ஒண்டிக் கொண்டாள் அவள்!



## 4

அன்று ஞாயிற்றுக்கிழமை.

அன்றுதான் அவள் அந்த மாடலிங் போஸ் கொடுக்க வேண்டிய நாள். அதனால் காலையிலே பரபரப்பாகி விட்டாள் கவிதா.

இதுவரை அவள் அப்படி யார் முன்னும் நின்றதும் இல்லை. அது என்ன அப்படி ஒரு ஓவிய ரசனை? அப்படி நின்றால் ஒரு லட்ச ரூபாய் வேறு தருவானாம்?



எப்படி இது சாத்தியம்?

அதற்கும் ரெடிமேடாய் நீலா சொல்லிய பதில் ஞாபகம் வந்தது. "அவன் பணக்காரன் மட்டுமல்ல. நன்கு படித்தவன். அடிக்கடி வெளிநாடு செல்லக் கூடியவன். அந்த பெயிண்டிங்கை கொண்டு போய் வெளிநாட்டில் விற்றால் லட்சக்கணக்கில் அவன் சம்பாதித்துவிடுவான். அதனால்தான் உனக்கு அவ்வளவு பெரிய தொகை கொடுக்கிறேன் என்கிறான்..." எனச் சொல்லி வாயை அடைத்து விட்டாள்.

ஆனாலும் ஒரு அந்நியன் முன் அவன் ஊடுருவி அவளைப் பார்க்கும் பார்வையை சகித்துக் கொண்டு ஒரு மணி நேரம் அப்படி நிற்க வேண்டுமே... என்ற கவலையும் எழுந்தது.

ஆனால் அம்மாவிற்காக... இதைச் செய்துதான் ஆக வேண்டும்... என நினைத்து பயத்தை ஓரளவு நீக்கினாள்.

ஆனாலும் எவ்வளவு விரட்டினாலும் தைரியம் கொண்டாலும்... ஏதோ ஒரு பெரிய ஆபத்தில் மாட்டிக் கொள்ளப்போகிறாமோ? என்றொரு பகீர் உணர்வு மனதில் எழும்பி அவளைத் தடுமாறத்தான் வைத்தது.

எல்லாம் நீலா வரும் வரைதான்.

நீலா சொன்னபடி பத்து மணிக்கு அண்ணன் பாஸ்கருடன் வந்திறங்கிவிட்டாள்.

பாஸ்கர் அவளைப் பார்த்து பெரிய சலாம் அடித்தவன், "சரியாக பதினொரு மணிக்கு மதன் சார் வரச் சொல்லியிருக்கிறார்..." என தகவல் தெரிவித்தான்.

கவிதா அவனிடமும் தன் பயத்தை வெளிப்படுத்தினாள்.

''பாஸ்கர் அண்ணா... வேறு ஒன்றும் பிரச்சினை
வராதே...?'' என்றாள்.

''ஐயோ.... தங்கச்சி! நீ... ஏன் இந்த பயம் பய
படுகிறாய்? அந்த மதன் ஸார் ஒரு ஜென்டில்மேன். ஒரு
மணி நேரத்தில் படத்தை வரைந்துவிட்டு காசை
கொடுத்துவிடுவார்...'' என்றான்.

அதற்கும் நீலா, ''அன்பு தங்கச்சிக்கு அன்பு அண்ண
தைரியம் சொல்லிவிட்டார் இல்லையா...? இனி பய
போய்விடும்...!'' என கிண்டலடித்தாள்.

பின் வீட்டில் அம்மாவிற்கும் பாட்டிக்கும் இந்த
விஷயம் தெரியக்கூடாது என்பதால் அது பற்றி மேற்
கொண்டு எதுவும் பேசவில்லை. வேலை விஷயமாக
நீலாவுடன் சென்று யாரையோ பார்க்க வேண்டும் என்று
சொல்லியே கிளம்பினாள்.

பத்து நிமிடத்தில் மூவரும் வீட்டை விட்டு வெளி
வந்து ஆட்டோ பிடித்தனர். கவிதா நீலா செலக்ட் செய்து
முன்பே கொடுத்திருந்த மஞ்சள் வண்ண ஷிபான்
சேலை... ஒன்றை உடுத்தியிருந்தாள்.

உடம்பை ஒட்டிய நளினத்துடன் அது இருப்பதால்
அவளது அழகை கூட்டுகிறதாம். கண்களில் மை.
டான் என நீலா சொன்னபடியே அன்று மேக்கப் விஷ
யங்களையும் அவளுக்கு பிடிக்காமலிருந்தும் கூட
நீலாவுக்காக செய்திருந்தாள்.

அது போதாதென்று கிளம்பும் சமயமாய் கையில்
வைத்திருந்த உயர்ரக செண்ட் ஒன்றை நீலா அவள்
உடைகளில் ஸ்பிரே பண்ண கூச்சம்தான் கொண்டாள்.



''இதெல்லாம் எதற்குடி?'' என அவள் சிணுங்க ஆளு
மட்டும் தூக்கியடித்தால் போதுமா... வாசமும் தூக்கி
யடிக்க வேண்டாம்?'' என்றாள்.

ஒரு வழியாய் பத்து நிமிட பயணத்திற்குப் பின் மதன்
குடியிருக்கும் லயன்ஸ் காலனியை அடைந்தார்கள்.
வரிசையாய் பங்களாக்கள். முன்னால் போர்டிகோவில்
விதவிதமான கார்களின் அணிவகுப்புடன்.

''பணக்கார கோமான்கள் வசிக்கும் இடம். கொடுத்து
வைத்தவர்கள்...!'' என்றான் பாஸ்கர் பெருமூச்சுடன்.

''கவலைப்படாதே அண்ணா.... அடுத்த பிறவியில்
நாம் இருவரும் இங்கு வந்து யாருக்காவது பிள்ளை
களாய் பிறந்துவிடுவோம்...'' என்றாள் நீலா.

அதற்கு பாஸ்கர், ''உன் ப்ரெண்டை விட்டுவிட்
டாயே... அவளையும் சேர்த்துக் கொள்...!'' என்றான்.

நீலாவோ, ''அவள் எதற்கு? அவள்தான் இன்று இந்தப்
பிறவியிலேயே இன்னும் கொஞ்ச நேரத்தில் லட்சாதிபதி
ஆகிவிடுவாளே...? பின் அப்படியே கோடீஸ்வரியாகக்
கூட ஆகிவிடுவாள்!'' என்றாள் கவிதாவை ஓரக்கண்
ணால் பார்த்து சிமிட்டியபடி. தொடர்ந்து, ''பின் பார்த்து
அம்மா... இந்த ஏழை பாழைகளை எல்லாம் கொஞ்சம்
கவனித்துக் கொள் அம்மா...!'' என்றாள் கண்களைச்
சிமிட்டி கெஞ்சுவது போன்ற தொனியில்.

கவிதாவும் விடாது, ''நீயும் அப்படியொன்றும் கவலை
கொள்ள வேண்டாம் தாயே! நான் அப்படி மகாராணி
ஆகிவிட்டால் பாதி ராஜ்யத்தை உடனே உன் அண்ண
னுக்கு பங்கிட்டு கொடுத்துவிடுகிறேன்... போதுமா?''
என்றாள் நகைப்பு பொங்க.

''சிரிக்கும் நேரம் இதுவல்ல...'' என இருவரையு அதட்டினான் பாஸ்கர்.

''நீ சரியான முட்டாள் அண்ணா...'' என்றாள் நீலா.

''என்னை... என்னையா முட்டாள் என்கிறாய்?'' சிலை தூக்க பாஸ்கர் பார்க்க மறுபடியும் சிரித்தாள் நீலா.

''பின் நீயே யோசி! இப்படி சிரித்து கலகலப்பா போய் கவிதா இறங்கினால் மதனும் அதை 'பிரமாதம்' என ரசிப்பார். அதை விட்டுவிட்டு உம்மணாம்மூஞ் போல் உம்மென்று இறுக்கமாய் போய் இறங்கினால்... மூஞ்சு சரியில்லையே.... எப்படி படம் வரைவது என யோசிக்க ஆரம்பித்து விடுவார்தானே? பிறகு ஒரு லட்சம் கவிதாவிற்கு கிடைக்காதே!''

நீலாவின் பேச்சுக்கு பாஸ்கர் பலமாய் தலையாட்டி ''ஒத்துக்கொள்கிறேன். நான் முட்டாள்தான்...!'' என்றான்.

கவிதா திரும்பவும் சிரிக்க, ''அடடா முதல்முறையாய் ஒரு உண்மையை வெளிப்படையாக ஒத்துக் கொண்டிருக் கிறாய்... பாராட்டுக்கள் உனக்கு...'' என நீலா கூறி அவளை மேலும் சிரிக்க வைத்தாள்.

அதற்குள் அவர்களது ஆட்டோ சரியான அட்ரஸை கண்டுபிடித்து அந்த பிரம்மாண்டமான கிரானைட் கற்கள் பதிக்கப்பட்ட பங்களா முன் நின்றது.

மூவரும் இறங்கினார்கள். ஆட்டோவை பணம் கொடுத்து அனுப்பினார்கள்.

கவிதாவை வெளியே நிற்க வைத்து திரும்பவும் பா கரும் நீலாவும் மதனிடம் அவள் நடந்து கொள்ள வேண் டிய முறையை விளக்கினர். பணத்தில் கறாராக இருக்க வேண்டும் என தீர்மானித்தனர்.



மதன் முன்பே சொல்லி வைத்திருக்கக்கூடும். அவர்கள் விபரம் சொன்னதுமே பங்களா செக்யூரிட்டி பவ்யமாய் கேட்டைத் திறந்து உள்ளே போகச் சொன்னான்.

பங்களா முன்புறம் அகலமான பச்சைப் பசேல் புல் தரைகள். சிறு சிறு செடிகள். விதவிதமான பூக்கள். குட்டை குட்டையான போன்சாய் மரங்கள்.''

இந்த மதன் சரியான கலா ரசிகன் போலும் தான் என்ற நினைப்புடன் கவிதா விழிகள் விரித்துப் பார்த்தாள்.

மறுகணமே போர்டிகோவில் கறுப்பு நிற பென்ஸ் கார் நின்றது அவளை பயமுறுத்தவே செய்தது. இதில் தானே அன்று இந்த மதன் சர்சர்ரென வந்து கிளம்பிப் போனான்? எத்தனையோ நல்ல நிறங்கள் இருக்க.... கறுப்பு நிறத் தைப் போய் ரசனையில்லாமல் வாங்கியிருக்கிறானே? என நினைத்தாள்.

முன் ஹாலில் தயாராய் இன்னொரு பணியாள்.

அவன் உள்ளே அழைத்துச் சென்றான்.

நடு ஹாலில் பெரிய பெரிய பொதுமும் குஷனுடன் இருக்கைகள். அதில் ஒன்றில் கால் மேல் கால் போட்ட படி ஸ்டைலாய் மதன் அமர்ந்து பேப்பர் ஒன்றை பார்த்துக் கொண்டிருந்தான்.

அவர்களைப் பார்த்ததும் பேப்பரை கீழே வைத்துவிட்டு உற்சாகமாய் பார்த்தான்.

''நம்பவே முடியவில்லையே...! சொன்னபடியே வந்து விட்டீர்களே...?'' என்றான் இன்னமும் நம்ப முடியாதவன் போல்.

''எல்லாம் ஒரு லட்சம் ஸார்... பணம்...!'' என்றான் பாஸ்கர்.

"பணத்திலேயே குறியாய் இருக்கிறீர்களே...!" என்றதும் ஹி.... ஹி...! என பாஸ்கர் அசடு வழிந்ததை பார்க்க கவிதாவிற்கே எரிச்சலாயிருந்தது.

ஆனாலும் இவன் போன்ற பணக்காரர்களிடம் பண விஷயத்தில் கறாராக இருப்பது நல்லதுதான். இல்லாவிட்டால் ஏமாற்றிவிடக் கூடும்தான் என்ற நினைப்பு ஓடியது.

"உட்காருங்கள்..." என்றபடி மதன் இருக்கையை காட்ட மூவரும் உட்கார்ந்தார்கள்.

மதனின் பார்வை மற்ற இருவரைவிட கவிதாவிடமே வந்து நின்றது. ஊடுருவுவது போல் அவள் மேல் பாய்ந்தது.

அதில் சங்கடமாய் உணர்ந்தவள் போல் கவிதா நெளிந்தாள்.

நீலா குறுக்கிட்டு, "மதன் ஸார் எல்லாம் ரெடிதானே?" என்றாள்.

"ரெடிதான்...." என்றான் மதன்.

"அப்படியானால் பணத்தை முன்கூட்டியே எங்களிடம் கொடுத்து விடுகிறீர்களா?" என்றாள் பறப்பது போல்.

மதன் தோளைக் குலுக்கினான். "தாராளமாய்...!" என்றான்.

"அப்படியானால் கொடுங்கள்..." என கைகளை நீட்டி விட்டாள் நீலா.

கவிதாவிற்கே அவளின் செய்கை ஒருவித சில்லறைத் தனமாய் அருவறுப்பாய் இருந்தது. பணம் தான் தந்...



விடுவாரே? எதற்காக இப்படி ஆளாய் பறந்து மானத்தை வாங்குகிறாள்...? என அவளை உற்றுப் பார்த்தாள்.

மதன் எழுந்து உள்ளே பணம் எடுக்கச் செல்ல... முறைத்த கவிதாவிடம், "பண விஷயத்தில் கறாராக இருந்து கொள்ள வேண்டும்டி. ஒரு லட்சம் அல்லவா?" என்றதும் கவிதா வாய் மூடினாள்.

மதன் உள்ளிருந்து இரண்டு ஐநூறு ரூபாய் நோட்டு கட்டுகளுடன் வந்து நீலாவிடம் நீட்டினான். ஆவலாய் வாங்கி கைப்பைக்குள் போட்டுக் கொண்டாள்.

"எதாவது சாப்பிடுங்கள்...!" என்றான் மதன்.

"குளிர்ந்த ஜூஸ் கொடுங்கள் மதன் சார். இந்த வெயிலுக்கு இதமாக இருக்கும்..." என்றாள் நீலா.

"ஓ... பழச்சாறு.... என் வீட்டில் தயார் செய்வது அருமையாக இருக்கும்..." என்றபடி பணியாளுக்கு சைகை செய்தான்.

பணியாள் செல்ல பாஸ்கரும் எழுந்து, "பாத்ரூம் செல்ல வேண்டும்" என்றபடி அவன் பின்னாலேயே நடந்தான்.

மதன் திரும்பி இருவரிடமும் அவனது தொழில்கள் பற்றி, தொழில் சாதனைகள் பற்றி விரிவாய் பேச ஆரம்பித்துவிட்டான்.

நீலா தான் 'உம்' கொட்டியவாறு கவனமாய் கேட்டுக் கொண்டிருக்க கவிதா கண்களைச் சுழற்றி பங்களாவை நோட்டமிடலானாள்.

பெரிய பெரிய சாண்டலியர் விளக்குகள், அலங்கார வேலைப்பாடுகள், விதவிதமான பர்னிச்சர்கள் என பணத்தை வாரியிறைத்து மதன் பங்களாவை கட்டியிருப்பதை ஆச்சரியமாய்ப் பார்த்தாள்.

கொஞ்ச நிமிடங்களிலேயே உள்ளே போன பாஸ் பழச்சாறு கோப்பைகளை ஏந்தியவாறு வந்தான்.

"எதற்கு பாஸ்கர் நீங்கள்...?" என மதன் கேட்க, "ப யாள் கொண்டு வந்தார். அதான் கையோடு வாங்கி கொண்டு வந்துவிட்டேன்..." என்றபடி கிளாஸ்களை நீட்டினான்.

எல்லோரும் எடுத்துக் கொண்டனர்.

எடுக்கத் தயங்கிய கவிதாவிற்கு கோப்பை ஒன்றை எடுத்து திணிக்காத குறையாய் கைகளில் கொடுத்தான் பாஸ்கர்.

"ம்ம்... குடியுங்கள்!" என்றான் மதன்.

"நன்றாக இருக்கிறது குடி... டி..." என்றாள் நீலா.

கொண்டிருந்த பரபரப்பில் கவிதா குடிக்க மனமில் லாமல் இருந்தாலும் இருவரின் வற்புறுத்தலுக்காக வேறு வழியின்றி குடிக்க ஆரம்பித்தாள்.

மொத்த பழச்சாற்றையும் குடித்துவிட்டு காலிக் கோப்பையை கீழே வைத்தாள்.

தான் பழச்சாறை குடிப்பதை பாஸ்கரும் நீலாவும் அடிக்கடி திரும்பித் திரும்பி.... பார்த்தது எதற்காக? என முதன்முறையாக திகைப்பாய் உணர்ந்தாள்.

மேலும் சிறிது நிமிடங்கள் நகர்ந்த போது ஒருவித தடுமாற்றத்தை மூளையில் உணர்ந்தாள். தலையில் கிறுகிறுவென ஒருவித உணர்வும், மின்மினிகள் பட்டாம் பூச்சிகள் டாலடித்து பறப்பது போன்ற ஒருவித கிறக்கமான நிலை தனக்கு ஏற்படுவதை அவளால் உணர முடிந்தது.



நீலா... அவள் நிலையை கைகாட்டி பாஸ்கரிடம் ஏதோ சொல்ல.... அதற்கு பாஸ்கர் சிரிக்க ஆரம்பிக்க... பின் அவர்கள் இருவரும் அவளைக் கைகாட்டி மதனிடம் ஏதோ சொல்ல... மதனும் பெரிதாய் சிரிக்க ஆரம்பிக்கிறான்... என்ன... இது? இங்கு என்ன தான் நடக்கிறது?

மூவரும் தன்னை நோக்கி பரிகாசமாய் சிரிப்பது போன்ற தொனியைத்தான் கடைசியாக கவிதா சிரமப்பட்டு உணர்ந்தாள்.

அதற்கு மேல் அவளால் திகைக்கவோ, அதிர்ச்சியடையவோகூட முடியவில்லை. அவளது சுயநினைவு பலவீனப்பட்டு ஒருவித மயக்க நிலைக்குப் போய்க் கொண்டிருந்தாள் அவள்.



# 5

கவிதா ஒருவித மயக்க நிலைக்கு கிட்டத்தட்ட போய்விட்டாலும் நடப்பது எல்லாவற்றையும் அவளால் ஓரளவு உணர முடிந்தது.

அவளை அலாக்காக தூக்காத குறையாய் மூவரும் கூட்டிக்கொண்டு மாடிப்படி ஏறுகின்றனர். அங்கு விசாலமான கட்டில்களுடன் கூடிய அறை தெரிகிறது. அதில் நுழைகிறார்கள்.

அவளை அந்தக் கட்டிலில் உட்கார வைக்கிறார்கள். அவள் கவிதாவும் தன் பங்கிற்கு ஏதேதோ பேசுகிறாள்.

கோபமாய் கத்த முயல்கிறாள். ஆனால் வாய் குழறுகிறது. நினைத்தது எதையும் பேச முடியாமல் தவிக்கிறாள்.

கை கால்கள் அவள் சொன்னபடி கேட்காமல் தடுமாறுகிறது. கண்களில் நீலாவும், பாஸ்கரும் மதனிடம் ஏதோ சிரிக்கச் சிரிக்க பேசுவது, பின் கைகுலுக்கியபடி விடைபெறுவது மங்கலாய்த் தெரிகிறது.

கடைசியில் அவர்களை அனுப்பிவிட்டு மதன் கதவை சாத்தியபடி அவள் பக்கம் வருகிறான்.

என்ன இது...? உரிமை உள்ளவன் போல்... கட்டிய மனைவியை அணைப்பது போல் அவளை வாரியெடுத்து அப்படியே அணைக்க ஆரம்பிக்கிறான்.

கவிதா முடிந்த மட்டும் திமிறுகிறாள். தன் பலத்தை எல்லாம் கூட்டி ஓங்கி அவனைத் தள்ளிவிட முயற்சிக்கிறாள். ஏதேதோ சொல்லி கத்துகிறாள்.

ம்ஹூம்! எல்லாம் அவளால் நினைக்க... நினைக்க மட்டும்தான் முடிந்தது.

நிஜத்தில் அவளால் ஒன்றும் செய்ய முடியவில்லை. மதனின் முரட்டுத்தனமான பிடியில் அவளால் கை கால்களை அசைக்கக்கூட முடியவில்லை.

அப்படியே பருந்திடம் சிக்கிய கோழிக்குஞ்சு போல் ஒடுங்கியிருந்தாள் அவள்.

ஒரு மணி நேரம் கழித்து அவளுக்கு உணர்வு வந்தபோது எல்லாம் முடிந்திருந்தது.

மெத்தைக் கட்டிலில் போர்வைக்குள் அரைகுறை ஆடைகளுடன் தான் இருப்பதை உணர்ந்து பயங்கரமாய் திடுக்கிட்டாள்.



என்ன நடந்தது? என்னாயிற்று எனக்கு? என பார்வையை திருப்பியபோது எதிர் இருக்கை ஒன்றில் சாய்ந்தபடி கையில் சிகரெட் புகை வளையத்துடன் மதன்.

அவன் அவளை ஒருவித திருப்தியுடன் ஏளனம் பொங்க பார்க்கும் பார்வை எதையோ அவளுக்கு உணர்த்தியது.

மறுபடியும் சுற்றும் முற்றும் பார்த்தாள். பூட்டிய அறை. கட்டிலில் அவள். எதிரே அவன்.

என்ன நடந்தது? நடந்திருக்கும்? என யோசித்தபோது அவளுக்கு உடம்பில் தோன்றிய வலிகள் எல்லாம் மெல்ல மெல்ல புரிய வைத்தது.

பெரும் அதிர்ச்சியோடு எழுந்து உட்கார்ந்தாள்.

உடைகளை அவசர அவசரமாய் சரி செய்தாலும் என்னவோ ஒன்று நடக்கக்கூடாதது நடந்துவிட்டதை புத்தி உணர்ந்து மூளைக்கு உரைத்தது. கண்களில் பொலபொலவென நீர் திரண்டு உருண்டோடியது.

கொஞ்சம் சிரமப்பட்டு யோசித்துப் பார்த்தாள்.

நீலா, பாஸ்கருடன் இந்த மதனின் பங்களாவிற்கு வந்தது... மதன் வரவேற்று அவர்களை உட்கார வைத்து... எல்லாம் ஞாபகத்திற்கு வந்தது.

ஆமாம், மதன் படம் வரைய மாடலாய் ஒரு மணி நேரம் உட்கார்ந்து போஸ் கொடுப்பதற்குத் தானே அவள் வந்தாள்? அதற்குத் தானே ஒரு லட்ச ரூபாய் சம்பளம் பேசியிருப்பதாய் சொல்லி நீலாவும் பாஸ்கரும் கூட்டி வந்தார்கள்?

ம்ம்... அந்த ஒரு லட்ச ரூபாய் பணத்தைக்கூட நீலா ஞாபகப்படுத்தி நச்சரித்து மதனிடம் பிடுங்காத குறையாய் வாங்கி பைக்குள் போட்டுக் கொண்டாளே!

எல்லாம் சரியாகத்தானே நடந்தது... பின் எப்படி தவறு நேர்ந்திருக்க முடியும்?

மீண்டும் யோசித்த போது பளீரென பாஸ்கர் பழச்சாறு கோப்பைகளை கொண்டு வந்ததும், அவளிடம் ஒரு கோப்பையை கொடுத்ததும்... அவள் குடிக்க மனமில்லாமல் இருப்பதைப் பார்த்து நீலாவும் பாஸ்கரும் வற்புறுத்தி குடிக்கச் செய்தது நன்கு நினைவுக்கு வந்தது.

அந்த பழச்சாறு!

அதுதான் காரணம்!

அதைக் குடித்த பின் தான் அவளுக்கு என்னவோ போல் ஆயிற்று. நடப்பது எதையும் உணர முடியாத அளவுக்கு அவள் சுயநினைவையும் இழந்து போனாள்.

அப்படியானால்...?

அந்தப் பழச்சாறுதான் காரணம்! அதில் தான் எதையோ யாரோ கலந்திருக்க வேண்டும். அதை குடித்த பின் தான் என்னென்னவோ பயங்கரமாய் அவள் வாழ்க்கையில் நடந்திருக்கிறது.

கடவுளே! என்ன சோதனை இது?

இழக்கக்கூடாத ஒன்றை இழந்துவிட்டோமே... என்ற எண்ணக் கீற்று திரும்பவும் தீயாய் அவளுள் எழ... துடித்தவளாய் பெருங்குரலுடன் மீண்டும் அழ ஆரம்பித்தாள்.

அவள் செய்கையைக் கண்டு மதன் பெரிதும் பதறியவன் போல் எழுந்துவிட்டான்.

"ஹாய்... என்னாச்சு... எதற்கு அழுகிறாய்?" என்றான்.

அவள் பதில் சொல்லாமல் தொடர்ந்து அழவும் எரிச்சலானவன் போல் குரலை உயர்த்தினான்.



"ஏய்... உன்னைத்தான்! ஏன் அழுகிறாய்... எல்லாம் தான் முடிந்துவிட்டதே?"

"எல்லாம் முடிந்துவிட்டது...!"

என்ன ஒரு வார்த்தை...! எவ்வளவு எளிதாய் தூசியை தட்டுவது போல் சொல்லிவிட்டான்? உள்ளபடியே அவள் இப்போது இழந்திருப்பது எவ்வளவு பெரிய விஷயம்? வெளியே சொல்லக்கூடியதா? மானம் போய்விடுமே!

எவ்வளவு தைரியமாய் முடிந்துவிட்டது எனக் கூறுகிறான். முடித்து வைத்தவனே இவன் தானே?

ஒரு கணம் அவள் பயங்கர ஆத்திரமும், ஆவேசமும் கொண்டவளாய் நிமிர்ந்து திமிறினாள். "மிஸ்டர், ஒரு பெண்ணை ஏமாற்றி... தவறாக நடந்துகொண்டு... மிகப் பெரிய தப்பு ஒன்றை செய்துவிட்டு... என்ன ஒரு திமிராய்... முடிந்து விட்டது... என்று சொல்லிக் கொண்டு... உங்களை... உங்களை... நான் சும்மா விடப் போவதில்லை... இருங்கள்... போலீஸ்... போலீசுக்கு போன் செய்து..." என வாய் குழற பேசியவள் கண்களால் அந்த அறையில் டெலிபோன் இருக்கிறதா... எனத் தேடினாள்.

பெரிய ஹாஸ்யத்தைக் கண்டது போல் கடகடவென அவன் சிரிக்க ஆரம்பித்ததும் அவள் மறுபடியும் திடுக்கிட்டாள்.

அவன் மறுகணமே சிரிப்பை நிறுத்திவிட்டு, "என்ன போதை இன்னும் தெளியவில்லையா?" என்றான்.

"போதை..." என்று அவன் சொன்னதுமே அவளுக்கு டக்கென அந்த பழச்சாறுதான் ஞாபகத்திற்கு வந்தது. அந்த பழ ஜூஸ் இவனது வீட்டில் தயாரானது தானே?

அப்படியானால் அதில் போதையைக் கலந்தது இவன் இவன்தானா?

அதையே கேள்வியாய் கேட்க மறுபடியும் சிரித்தான் அவன்.

"சரிதான் உனக்கு இன்னும் போதை தெளியவில்லை தான்! அதனால் தான் என்னென்னவோ உளறுகிறாய்?" என அவன் சர்வசாதாரணமாய் சொல்லவும் மறுபடியும் சீறினாள்.

"ஹலோ மிஸ்டர், நான் ஒன்றும் உளறவில்லை தெளிவாய்த்தான் பேசுகிறேன். என்ன நடந்தது என்பதை உங்கள் திருவாயாலே விளக்குங்கள். கேட்டுத் தொலைக் கிறேன்...!" என்றாள் ஆத்திரம் குறையாமல்.

அதுவரை அவளை ஒருவித கேலியுடன் ஏளனமாய் பார்த்துக் கொண்டிருந்த மதனின் முகம் முதல்முறை யாய் மாறியது.

இரண்டடி முன்னால் நடந்து அவள் பக்கத்தில் வந் தவன் கைகளை குறுக்காய் கட்டிக்கொண்டு அவள் முகத்தை உற்றுப் பார்த்தான்.

"நீ எதற்காக இங்கு என் வீட்டிற்கு வந்தாய்... அதைச் சொல்லு?" என்றான்.

இப்போது அவளுள் தடுமாற்றம் இல்லை. தெளி வாகவே பேசினாள். "ஓவியம்... ஓவியம்... நீங்கள் வரை வதற்கு... மாடலாய் போஸ் கொடுக்க வேண்டும்.... ஒரு மணி நேரம் உங்கள் முன் ஆடாமல் அசையாமல் மாடலிங் போஸ் கொடுக்க வேண்டும்... நீங்கள் அந்த அப்படியே பெயிண்டிங் செய்து..." என பேசிக்கொண்டு



போனவள் அவன் முகம் அதிர்ச்சியில் இருப்பதைக் கண்டு அப்படியே நிறுத்தினாள்.

"மாடலிங் போஸா...? ஓவியமா...? நான் ஓவியம் வரை வேன் என்று எந்த மடையன் உனக்குச் சொன்னான்?"

அவனும் அவளைப் போலவே சீற்றமும் கோபமுமாய் கேட்பதைக் கண்டு பயங்கரமாய் துணுக்குற்றாள்.

என்ன சொல்கிறான் இவன்? ஓவியம்... ஹாபி... ரசனை... ஓவியக் கிறுக்கு என்றெல்லாம் நீலாவும் பாஸ் கரும் இவனை வர்ணித்தார்களே... அதெல்லாம்... அதெல்லாம்... பொய்யா?

"பொய்தான்!" என்றான் அவன் மறுபடியும் குரல் உயர. தொடர்ந்து அவனே, "உன்னை யாரோ நன்கு ஏமாற்றியிருக்கிறார்கள். நான் ஒன்றும் ஓவியக்காரனும் இல்லை. நீ ஒன்றும் மாடலிங் போஸ் கொடுப்பதற்காக இங்கு வரவில்லை. என்னுடைய உடல் தேவைக்கு வந்த பெண் நீ. உன்னுடைய விலை ஒரு லட்சம். அப்படித் தான் என்னிடம் சொன்னார்கள். பேசினார்கள். நானும் உன் அழகை நேரிடையாய் பார்த்து அவர்கள் சொல்லும் 'ரேட்' அதிகம் என்றாலும், உடனே ஒத்துக்கொண்டேன். நீ சொல்வதைப் பார்த்தால்... நீ... 'தொழில்'காரி இல் லையா...?"

அவன் நிறுத்தி மறுபடியும் அவளை ஊடுருவி நம்ப முடியாமல் பார்த்தான்.

தொழில் காரி...!

வேசி...!

அவளா? அப்படியா நினைத்துவிட்டான்?

சுத்தமாய் நொறுங்கிப் போய் திரும்பவும் உணர்விழ்
தாள் அவள்!



# 6

ஒரு மணி நேரத்திற்குப் பிறகு அவள் முழு உண
வுடன் இயல்பு நிலைக்குத் திரும்பியிருந்தாள்.

அவளுக்கு இப்போது எல்லாம் புரிந்துவிட்டது.

நீலாவும் பாஸ்கரும் அவளை வைத்து ஒரு நாடகமாடி இருக்கிறார்கள். அவளிடம் ஓவியம் மாடலிங் அதற்காக ஒரு லட்சம் என்றெல்லாம் சொல்லிவிட்டு அவனிடம் அவளை அனுபவிப்பதற்கான ரேட் ஒரு லட்சம் என்று சொல்லி ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

இதுதான் மதன் பேசியது மூலம் அவள் அறிய முடிந்தது.

இது உண்மையா?

பாஸ்கர்... பாஸ்கரை விடுவோம்... நீலா... இன்று நேற்றா... பத்து வருட தோழியாயிற்றே...

.... அவள் ஏமாற்றுவாளா? இப்படி ஒரு துரோகத்தை அவளுக்குச் செய்யத் துணிவாளா?

இருக்காது!

இந்த மதன் பொய் சொல்கிறான்.



ஏதோ ஒரு நாடகம் போட்டு இவன் தப்பைச் செய்து விட்டு என்னென்னவோ புளுகுகிறான். இவனை நம்பக் கூடாது.

எழுந்தவள் அப்போதுதான் உரைத்தது போல் நீலாவையும் பாஸ்கரனையும் தேடினாள்.

ஹாலில் உட்கார்ந்திருந்த அவர்கள் எங்கே? தான் மாடலிங் முடிந்து வரும் வரை காத்திருந்து கூட்டிப் போவதாய் தானே சொல்லியிருந்தார்கள். பின்ன என்னவாயிற்று?

''பணத்தை வாங்கிகிட்டு உன்னை என்னிடம் கொடுத்துவிட்டு சிட்டாய் பறந்துவிட்டார்கள்...'' என்றான் மதன்.

அவளால் இப்போதும் நம்ப முடியவில்லை.

''சரி... அது இருக்கட்டும். அந்த பழச்சாறில் ஏதோ ஒரு போதை வஸ்துவை கலந்தது... நீங்கள்... நீங்கள் தானே?'' என்றாள்.

''நிச்சயமாக நான் இல்லை... பாஸ்கர்...!'' என்றான் மதன் அமைதியாக.

''பாஸ்கரா!''

''ம்ம்....'' என தலையசைத்தவன், ''நீ கொஞ்சம் நினைவுப்படுத்தி பார்... எனது பணியாளர் ஜூஸ் கொண்டு வர உள்ளே செல்ல அவன் பின்னாலேயே பாத்ரூம் செல்வதாக பாஸ்கர் கூறிச் சென்றான் அல்லவா... அவன்தான் பின் என் பணியாள் கொண்டு வந்த ஜூஸை வாங்கி அதில் உனக்கான கோப்பையில் அந்த போதை வஸ்துவை கலந்திருக்கிறான். அதை குடித்த நீயும் கொஞ்ச நிமிடங்களிலே கிறக்கமான ஒரு போதை நிலைக்குப் போய் விட்டாய்...''

"அப்படியா...? நிஜமாகவா...?"

"நிஜம்தான்! ஏனென்றால் இதை என்னிடம் சொ னதே அந்த பாஸ்கர் தான். அதற்கு அவன் சொன் காரணமும் விசித்திரமானதுதான்..."

"அப்படி என்ன காரணத்தைச் சொன்னான்?"

"நீ பணக்காரர்கள் என்றால் அந்த தொழில் விஷய தில் கொஞ்சம் கூச்சம், சங்கோஜம் கொள்வாயாம். அதை போக்க உன் அனுமதியுடன் தான் கலந்தானாம்..."

"ச்சீ...!" என்றாள் அருவறுப்பாய் அவள்.

பின் அதே கோபத்துடன், "நான் எப்படி நம்புவது! ஏதேதோ உளறுகிறீர்கள்... எனக்கு ஒன்றும் புரியவில்லை..." என்றாள்.

அவன் மதன் கூர்மையாய்ப் பார்த்தான்.

"உனக்கு அந்த பாஸ்கர், நீலா வீடு தெரியும் அல் லவா...? முதலில் கிளம்பு...! எனக்கு உன் மேலும் சந் தேகமாய்த் தான் இருக்கிறது. என்னிடம் மேலும் பணத்தை கறக்க... இப்படியெல்லாம் நாடகமாடுகிறாயா...! எனத் தோணுகிறது..."

மறுபடியும், 'ச்சீ...!' என காறி உமிழ்ந்தாள் அவள்.

"நான் ஒன்றும் அப்படிப்பட்ட பெண் இல்லை...! என் அம்மாவின் மருத்துவச் செலவுக்காக ஒரு லட்ச தேவைப்பட்டது. அதற்காக மாடலிங் போல் செய் சம்மதித்தேன். இது உண்மை...!" என்றாள் அவள்.

"கிளம்பு...!" என்றான் அவன்.

அவள் தாமதிக்காமல் கிளம்பினாள். அவன் கா எடுத்ததும் ஏறிக் கொண்டாள். நீலாவின் வீட்டுக்கா வழியைச் சொன்னாள்.



பத்து பதினைந்து நிமிடங்களில் தெருவைக் கண்டு பிடித்து நீலாவின் வீட்டு முன் காரை நிறுத்தினார்கள்.

அங்கு ஒரு பெரும் அதிர்ச்சி காத்திருந்தது.

நீலாவின் வீட்டில் பெரிய பூட்டு ஒன்று தொங்கிக் கொண்டிருந்தது.

அவர்கள் இருவரும் இறங்கித் தேடுவது பார்த்து பக்கத்து வீட்டுக்காரர் ஒருவர் எட்டிப் பார்த்து வெளிவந்தார்.

"யாரைத் தேடுகிறீர்கள்? நீலாவும் பாஸ்கரையுமா...? அவர்கள் வீட்டை காலி பண்ணிவிட்டு ஊரை விட்டே சென்று விட்டார்களே!" என்றார்.

"என்ன சொல்கிறீர்கள்?"

"நேற்று இரவு தான். 'இங்க பிழைக்க வழியில்லை என்றும் அவர்களது சொந்த கிராமத்திற்குச் சென்று விவசாயம் செய்து பிழைக்க நினைத்திருப்பதாகவும், அதற்காக ஊரை விட்டுச் செல்வதாகவும் என்னிடம் சொன்னார்கள். இன்று காலை ஒரு டெம்போ லாரியைக் கொண்டு வந்து சாமான்களை எல்லாம் எடுத்துக் கொண்டு காலியும் பண்ணிவிட்டார்கள்..."

"எங்கு சென்றார்கள் என்று தெரியுமா?"

"தெரியவில்லையே! சொந்த கிராமம் என்றுதான் சொன்னார்கள்... எந்த ஊர்... என்ன ஏதுவென்றெல்லாம் நான் கேட்கவில்லையே...!"

அப்பாவியாய் கைவிரித்தார் பக்கத்து வீட்டுக்காரர்.

"உன்னை மட்டுமல்ல... என்னையும் நன்றாக நடித்து முட்டாளாக்கி இருக்கிறார்கள்..." என்றான் மதன் கோபமாக.

அவள் அதிர்ச்சியில் பேச முடியாமல் அப்படியே விழித்தாள். கண்களில் இருந்து தாரையாய் நீர்த்துளிகள் புரண்டு ஓடியது.

அதை திரும்பி கவனித்த மதன் முகம் மாறி அவளையும் முறைத்தான்.

''உன்னையும் நம்ப முடியவில்லை...! நீயும் அவளுடன் கூட்டாக கூட இருக்கலாமே? என்னிடம் மேலும் பணம் கறக்க ஏதாவது திட்டம் கூட போட்டிருக்கலாம்...'' என பார்வையில் சந்தேகம் கூட்டினான்.

அவள் அழுகையை நிறுத்தி பார்வையில் அருவெறுப்பைக் காட்டினாள்.

அவன் நம்பிக்கையில்லாமல், ''முதலில் உன் வீட்டைக் காட்டு. உன் தாயார் உடம்பு சுகமில்லாமல் இருக்கிறார்களா... அவர்கள் மருத்துவச் செலவுக்கு ஒரு லட்ச ரூபாய் பணம் தேவை என நீ சொல்வது உண்மைதானா... என தெரிந்து கொள்கிறேன்...'' என்றான்.

அவள் மறுபேச்சில்லாமல் தன் வீட்டை காண்பிக்க முன் நடக்க ஆரம்பித்தாள்.

## 7

அடுத்த ஒரு மணி நேரத்தில் மதன் எல்லாவற்றையும் புரிந்து கொண்டான். அவள் வீட்டிற்குப் போய்



நோய்வாய்ப்பட்ட அவள் தாயாரை பார்த்ததோடு மட்டுமில்லாமல் தாயார் சிகிச்சை பெறும் ஆஸ்பத்திரிக்கும் சென்று ஒரு லட்ச ரூபாய் ஆபரேசனுக்கு தேவைப்படுவதை கேட்டு விசாரித்து தெரிந்தும் கொண்டான்.

பின் வாய் பேசாது மௌனமாய் அவளை காரில் ஏற்றிக்கொண்டு தன் பங்களா வந்து சேர்ந்தான்.

அவளுக்கும் சிந்திக்கவோ, பேசவோ தோன்றவில்லை. ஏதோ ஒரு பிரமையில் சிக்கிவிட்டவள் போல் அவன் பின்னாடியே சென்றாள்.

காரில் ஏறியவள் மறுபடியும் அடக்க முடியாத விம்மலுடன் பெரிதாய் அழப் போக டக்கென அவள் தோள்களைத் தட்டி அதட்டினான்.

''உஷ்...! முதலில் இந்த அழுகையை நிறுத்து. இப்படி அழுது ஊரைக்கூட்டி ஒப்பாரி வைக்கப் போகிறாயா?'' என்றவன் தன் பாக்கெட்டிலிருந்து கர்ச்சீப்பை வெளியெடுத்து நீட்டினான்.

இதுவரை அம்மாவின் உடல்நிலைக்காக அவ்வப்போது அழுதவள் இப்போது எதற்காகவோ எதை எதை நினைத்தோ அழுகை வருவதை உணர்ந்து எரிச்சலே கொண்டாள்.

அதனால் அவன் நீட்டிய கர்ச்சீப்பை வாங்கியவள் அழுகையை அடக்கி முகத்தை அழுந்த துடைத்துக் கொண்டாள்.

அவன் பங்களா வரும் வரை வெறித்த பார்வையுடனே உட்கார்ந்திருந்தாள்.

பங்களாவில் காரை நிறுத்தி விறுவிறுவென அவன் நடந்து முன் ஹாலுக்குப் போனான். இருந்த பெரிய ஷோபாவில் தொப்பென உட்கார்ந்து கொண்டான்.

எதிர் இருக்கையில் அவள் உட்கார்ந்தாள்.

எல்லா உண்மைகளையும் தெரிந்து கொண்டானே...? நம்மைக்கூட நம்பாமல் சந்தேகப்பட்டானே? இப்போது என்ன சொல்லப் போகிறான்? எப்படி சமாளிக்கப் போகிறான்?

எண்ணியபடி அவனையே முறைத்தாள் அவள்.

என்ன ஒரு கச்சிதமான நடிப்பு! நன்றாக ஏமாந்துவிட்டேனே! வேகமாய் தன் ஒரு கையினுள் மற்ற கையை வைத்து ஓங்கி குத்தினான்.

"நான் சரியான முட்டாள்! உன்னிடம் ஒரு வார்த்தை கேட்கவில்லையே? சே!" என கத்தவும் செய்தான்.

பின் டக்கென நிறுத்தி, "நான் கேட்காவிட்டால் என்ன...? நீயாவது கேட்டிருக்க வேண்டாம்...?" என்றவன் ஒரு நிமிட யோசிப்புடன், "அது... என்ன ஓவியம்... வரையப் போகிறேன்... என்று சொல்லியிருந்தார்களோ... கொஞ்சமாவது இந்த பங்களாச் சுவர்களில் பார்... ஒரு பெயின்டிங்... ஒரு படம்... ஏன்... ஒரு போட்டோ கூட கிடையாது.... நான் எப்படி கலா ரசிகனாய் இருக்க முடியும்?" என எதிர்கேள்வி கேட்க பதில் சொல்ல முடியாமல் குனிந்தாள்.

"ஏன்... என்... என்னிடம் ஒரு வார்த்தை கேட்கவில்லை? நான் அப்படி உன்னை நிற்க வைத்து... படம் வரைந்து... என்ன... என்ன செய்யப் போகிறேன்?"

இம்முறை அவள் வாய்திறந்து, "நீங்கள் அந்த பெயின்டிங்கை எல்லாம் வெளிநாட்டில் நல்ல விலைக்கு விற்று விடுவதாய் அந்த பாஸ்கர் சொன்னான்." தயங்கியபடியே சொல்லி முடித்தாள்.



'பாவிகள்!' என்றபடி மறுபடி ஆத்திரத்துடன் கைகளை குத்தினான் அவன். "என்னமாய் உன்னிடம் கதை விட்டிருக்கிறார்கள். நீயும் நம்பித் தொலைத்திருக்கிறாயே...?" என நிறுத்தியவன், "ஆமாம்... அந்தப் பெண் நீலா... உன் தோழி... உயிர்த் தோழி தானே? அவள்... அவள்... எப்படி... இப்படியொரு பயங்கர துரோகத்தை மனசாட்சி இல்லாமல் செய்யத் துணிந்திருக்கிறாள்... அதை யோசி...!" என்றான்.

கவிதாவிற்கு நீலாவை அவன் சொன்னதும் அவள் நினைத்ததுமே தலைதான் பாறாங்கல்லாகி கணப்பது போலிருந்தது. அவளால் இன்னமும் நம்ப முடியவில்லை.

நீலா அப்படியொரு துரோகத்தை செய்திருப்பாளா? நம்மிடம் சிரிக்கச் சிரிக்க பேசிப் பழகி அன்பு காட்டியவள். அப்படிச் செய்வாளா?

நிச்சயமாய் இருக்காது!

"இல்லை... அது... அவளது அண்ணன். அந்த பாஸ்கர் வேலையாகத்தான் இருக்கும். அவன் தான் கேடு கெட்டவன். பொறுக்கி. நிறைய கெட்டப் பழக்கங்கள் உள்ளவன். திருந்திவிட்டான் என்று நினைத்தேன். திருந்தாமல் என்னிடம் நடித்திருக்கிறான். என்னை நன்றாக ஏமாற்றியிருக்கிறான்...!" என்றாள்.

அவன் கைகளைத் தட்டி முறைத்தான்.

"திரும்பத் திரும்ப முட்டாள் மாதிரி பேசாதே...! உன்னை அவனோடு சேர்ந்து அந்த நீலாவும் தான் ஏமாற்றி இருக்கிறாள். அதனால் அவளும் கெட்டவள் தான். கேவலம் ஒரு லட்ச ரூபாய் பணத்திற்காக உன் வாழ்க்கையையே சூறையாடி இருக்கிறார்கள்."

இப்போது அவளுக்கு நன்றாக உரைத்துப் புரிந்தது.

பாஸ்கர் செய்தான் என்றால்... அதற்கு பின்புலமாக இருந்தது இந்த நீலாதானே? அவள் முன்னிலையில் தானே பாஸ்கரும் அந்த போதை கலந்த ஜூஸை கொடுத்தான்? எல்லாமே அவளுக்குத் தெரிந்து தானே நடந்திருக்கிறது?

பாதகி! உயிர்த் தோழி என்று கூட பார்க்காமல் இப்படி உலை வைத்துவிட்டாளே! அன்று மதனின் பர்ஸனாலிட்டியை சுற்றிக்காட்டி, 'இப்படி ஒரு கம்பீரமான ஆளிடம் உன்னையேகூட நீ ஒப்படைக்கலாம்' என... சொல்லியது இப்போது கவிதாவிற்கு ஞாபகம் வந்து இம்சித்தது.

இதை மனதில் வைத்துதான் அன்று அப்படிச் சொன்னாளோ?

அவள் மனம் நடுங்க யோசிக்க மதன் மறுபடி அவள் பக்கம் திரும்பினான்.

''அந்த பணப்பேய்கள், ஓடுகாலிகள் எங்கு சென்றிருப்பார்கள் என உன்னால் யூகிக்க முடிகிறதா?'' என்றான் அவன்.

அவள் யோசித்து மறுப்பாய் தலையசைத்தாள்.

''தெரியவில்லை...''

''சொந்த பந்தம்... உறவினர்கள்... அவர்கள் ஊர்... இப்படி ஏதாவது...?''

''நீலாவுக்கு சொந்த பந்தம் என்று எதுவும் கிடையாது. தூரத்து உறவு முறை அத்தை ஒருத்தி எங்கோ ஒரு கிராமத்தில் இருப்பதாய் முன்பு சொல்லியிருக்கிறாள்...''

கவிதா சொல்ல மதன் பரபரப்பாகி, ''எங்கு? எந்த கிராமம்...?'' என்று கேட்க மறுபடியும் கைகளை



விரித்தாள் தெரியவில்லை... நீலா பெயரைச் சொன்னதில்லை...'' என்றாள் அப்பாவியாய்.

மறுபடியும் மதன் ஆத்திரமாகி கைகளை, விரல்களை மடக்கி விரித்தான்.

பின் எரிச்சலடைந்தவன் போல் அருவையாய் முகத்தை வெட்டினான்.

''ம்ஹூம்...! அவர்களை தேடிக் கண்டுபிடிக்கலாம். ஆனால் என்ன லாபம்? என்ன பிரயோஜனம்? உன் வாழ்க்கை தான் பாழாகிவிட்டதே!''

அவன் சலித்த போதுதான் அவளுக்கும் மனதில் உரைத்துப் புரிந்தது.

அவன் சொல்வது போல் பாழாகித்தான் விட்டது. அவள் வாழ்க்கை...?

எவனோ அந்நியன் முன்பின் தெரியாதவன் அவளை இப்படி அனுபவித்து அவளை வேசி என்று வேறு நினைத்து... அசிங்கப்படுத்திவிட்டானே!

எவ்வளவு பெரிய அநியாயம்.

அவளுக்குத் தெரியாமல் அவளை ஏமாற்றி எவ்வளவு பெரிய தப்பு நடந்திருக்கிறது? நிச்சயம் அவள் காரணமல்ல!

அவள் எதற்கும் ஆசைப்படவில்லை. யாரையும் ஏமாற்றவில்லை. ஆனால் பலிகடா போல் ஆகிவிட்டாள்.

நடந்த தவறுக்கு காரணம் மூன்று பேர்!

நீலா, அவளது அண்ணன் பாஸ்கர் இந்த மதன்!

மற்ற இருவரும் ஓடிவிட்டார்கள். சொல்லப் போனால் அவர்கள்கூட ஏவிவிட்ட கருவிதான். அவளை அசிங்கப் படுத்திருப்பது இந்த மதன்தான்!

தெரிந்து செய்தாலும், தெரியாமல் செய்தாலும் குற்றம் குற்றம்தானே?

அவள் மானம், விலை மதிக்க முடியாத அந்த ஒழுக்கம் கற்பு எல்லாம் கெட்டது கெட்டதுதானே?

என்ன செய்யப் போகிறாள்?

இல்லை இவன்தான் என்ன செய்யக்கூடும்? என்ன சமாதானம் சொல்லி அவளை அமைதிப்படுத்த முடியும்?

கேள்விகள் தீயாய் எழ மறுபடியும் அவள் கண்களில் இருந்து பொலபொலவென கண்ணீர் வழிந்தது.

சற்று பக்கத்தில் வந்து அப்படி அவள் அழுவதை உற்றுப் பார்த்தவன், கண்களை மூடி ஒரிரு கணம், யோசித்து குழம்பினான்.

பின் தெளிவடைந்தவன் போல் அவள் பக்கம் வந்து அவள் தோள்களைத் தொட்டான்.

''நான் வேண்டுமானால் உன்னைக் கல்யாணம் செய்து கொள்ளட்டுமா?'' என்றான்.



# 8

அந்த கேள்வியை அவள் சற்றும் எதிர்பார்க்கவில்லை. அதைவிட அவன் தோளை உரிமையாய் தொட்டது கம்பளிப்பூச்சி விழுந்தது போல் அருவருப்பாய் இருந்தது.



சரேலென தட்டிவிட்டாள் அவள்!

என்ன உரிமையில் கை வைக்கிறான்? ஓ... இவளைத் தான் முழுவதும் தொட்டுவிட்டோம்... என்ற உரிமையிலா?

சே...! என வெறுப்பு பொங்க மறுபடியும் அழப் போனவள் அடக்கிக்கொண்டு நிமிர்ந்தாள். அவனோ அவள் கைகளைத் தட்டிவிட்டதை கூட பெரிதாய் நினைக்காமல் மறுபடியும் தன் கேள்வியிலேயே குறியானான்.

''ரொம்பவும் யோசித்துக் குழம்பாதே. நான் கேட்டதற்கு மட்டும் பதில் சொல். நான் உன்னை கல்யாணம் செய்து கொள்ளட்டுமா? உன் எல்லாப் பிரச்சினைகளும் தீர்ந்துவிடும். நடந்த தப்புகூட சரியாகிவிடும்... என்ன சொல்கிறாய்?''

கேட்டுவிட்டு அவள் முகக் குறிப்பையே ஆவலாய் பார்த்தவன், அவள் முகம் கோபத்தில் மேலும் சிவப்பதை திகைப்பாய்ப் பார்த்தான்.

''ஓஹோ! தப்பு சரியாகிவிடும்! உங்கள் மனதில் உள்ள குற்ற உணர்ச்சி போய்விடும். ஆனால்... ஆனால்...''

எதையோ கோபமாய் சொல்ல வந்தவள் தயக்கமாய் நிறுத்த ''எதுவானாலும் தயங்காமல் சொல்லு...'' என்றான் அவன்.

உடனே தயக்கம் நீங்கியவள், ''ஆனால் அதற்காக நீங்கள் காமுகன் இல்லை என்று ஆகிவிடுமா? ஒரு காமுகனை கட்டிக்கொள்ள நான் தயாராய் இல்லை...!'' என்றாள் ஆத்திரமாக.

''காமுகன்...!''

அவள் வார்த்தையில், அவள் உச்சரித்த விதத்தில் அவன் அப்பட்டமாய் அதிர்ந்து ஸ்தம்பிப்பது அவன் முகத்திலேயே தெரிந்தது.

மறுபடியும் உதடுகள் இறுக முகம் குனிந்தான். விரல்களை மடித்து தவிப்பை மறைத்தான். பின் அதே வேகத்தில் நிமிர்ந்து அவளை நன்றாகப் பார்த்தான்.

"நான் ஒன்றும் கொடியவன் இல்லை..." என்றான்.

"ஆஹா..." என அலட்சியம் காட்டியவள், "பின் ஒரு லட்ச ரூபாய் கொடுத்து ஒரு பெண்ணை அனுபவிக்க துடித்தவர் நல்லவரா? பெரும் பரோபகாரியா... அல்லது கொடை வள்ளலா? நீங்களே சொல்லுங்கள்!" என்றாள் மறுபடியும் ஆத்திரமாகி.

அவன் இம்முறை குனியவில்லை. வெட்கம் கொள்ளவில்லை. நிதானமாக அவள் பக்கத்தில் வந்து அவள் மைவிழிக் கண்களை ஊடுருவது போல் பார்த்தான்.

"ஆனால் நான் நல்லவன். அது மட்டும் உண்மை...!" என்றான்.

"ஒரு நல்லவன் செய்கிற காரியமா இது? தினம் தினம் பணத்தை வீசி பெண்களைத் தேடிப்பிடித்து அனுபவிப்பது ஒரு நல்லவனுடைய 'நல்ல' பொழுதுபோக்கு... அப்படித்தானே?"

அவன் கைகளை உயர்த்தி அவள் பேச்சை மறுப்பது போல் தலையசைத்தான்.

"நான் ஒன்றும் காமுகன் இல்லை. கண்ட கண்ட பெண்களுடன் சுகம் தேடும் ஈனப் பிறவியும் இல்லை...!" என்றான் உறுதியான குரலில்.

"பின் யாராம்...?" என்றாள் அவள் எதிர்கேள்வியோடு

"உன் அழகைக் கண்டு மயங்கி... அதை குறுக்கு வழியில் அடைய நினைத்து... அடைந்துவிட்ட ஒரு சராசரி சபல புத்திக்காரன்."



"சபலப்புத்தி...? அதையாவது ஒத்துக் கொண்டீர்களே...? அது போதும் ஸார். இன்னும் உங்களது அந்த சபலப் புத்தியால் எத்தனை பெண்களின் வாழ்க்கையை சீரழிக்க நினைத்திருக்கிறீர்களோ? எத்தனை அபலைப் பெண்கள் உங்கள் பிடிகளில் மாட்டி சீரழியப் போகிறார்களோ...?" என்றவள் நிறுத்தி, "ஆனால் ஒன்று. உங்களுக்கு நரகம் நிச்சயம்...!" என்று முடித்தாள்.

அவன் மறுபடி முகம் இறுகி கைகளை குத்தினான்.

"என்னை... என்னை... கடைசியில் சினிமாப் படங்களில் வரும் வில்லன் போலவே நினைத்து முடிவு செய்துவிட்டாயா?"

"பின் நீங்கள் யாராம்...?"

இப்போது அவன் முகத்தில் கோபம் மெல்ல துளிர்த்தது.

கைகளை உயர்த்தியபடி அவளைப் பார்த்தவன், "இதோ பார், நான் யாரோவாக இருந்துவிட்டுப் போகிறேன். ஆனால் நடந்த தவறுகளுக்கு நான் மட்டுமல்ல. நீயும் காரணம்தான். நல்ல பாம்பாய் உன்னுடன் பழகி சமயம் பார்த்து உன்னைத் தீண்டிய உன் அன்புத் தோழியின் சுயரூபத்தை அறியாத நீயும் முட்டாள்தானே? அதனால் அதையும் உணர்ந்து பேசு..." என்றான் குரலை உயர்த்தி.

அவளும் இப்போது முகம் இறுகிக்கொண்டு அவனைப் பார்த்தாள்.

"சரி, இப்போது நான் என்ன செய்ய வேண்டும்?" என்றாள்.

"நடந்தது நடந்துவிட்டது. நடந்த பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும்..."

"என்ன தீர்வு?"

"நீ எதற்காக வந்து இப்படி ஏமாந்தாயோ. அந்த ஒரு லட்ச ரூபாயை உன் தாயாரின் மருத்துவச் செலவுக்கு அவசியம் வேண்டிய தொகையை நான் தந்துவிடுகிறேன். எனக்கு பணம் ஒன்றும் பெரிதல்ல..."

"நீங்கள் ஒன்றும் பிச்சை போட வேண்டாம்..." என்றாள் அவள் ஆத்திரமாக.

"பிச்சை இல்லை.... பிராயச்சித்தம்..." திருத்தினான் அவன்.

அவள் திரும்பவும் முறைக்கவே, "உன் முட்டாள்தனத்திற்காகவோ, நான் தவறு செய்ததற்காகவோ உன் தாயார் பலிகடா ஆக வேண்டாம். அவர்களை குணப்படுத்தி விடுவது நம் கடமையும் கூட..." என்று சொன்ன போது அவளது புருவங்கள் உயர்ந்தது. நம் கடமையா...? அதற்குள் உறவாகிவிட்டானா இவன்?

அவள் பார்வையை புரிந்தவன் போல், "நான் அப்படிச் சொல்லியதில் அர்த்தம் ஒன்று இருக்கிறது..." என்றான்.

"என்ன அர்த்தம்...?"

"நான் உனக்கு தாலி கட்டிவிட்டால், உன் கணவனாய் உன் தாய்க்கு மருமகன் முறையாகி உன் தாயின் உடம்பை சீராக்குவது எனக்கும் ஒரு கடமையாகத்தானே போய்விடும்?"

"என் கழுத்தில் நீங்கள் தாலி கட்டுவது இந்த ஜென்மத்தில் நடக்காத காரியம்..."

"பின் நான் என்ன... என்னதான் செய்ய வேண்டும் என்று நினைக்கிறாய்...?" என்றான் அவன் சலிப்படைந்தவன் போல்.



"செய்த தப்புக்கு நீங்கள் தண்டிக்கப்பட வேண்டும்..." என்றாள் பார்வையை அவன் மேல் கூர்மையாக்கியபடி.

அவன் அதைக் கேட்டு வறண்ட புன்னகையை சட்டென உதிர்த்தவன், "எப்படி...? முன்பு மன்னர் காலத்தில் நடப்பது போல் கழுவேற்றி என்னைக் கொல்லப் போகிறாயா...? அல்லது இந்தக் காலத்துப் பெண்ணாய் காவல் நிலையம் சென்று புகார் கொடுக்கப் போகிறாயா...?" எனக் கேட்க, "இரண்டும் இல்லை...!" என்றாள் அவள் ஆத்திரமாக.

"பின் வேறு என்ன வழி?"

அவன் கண்கள் சுருக்கி கேட்க தோள்களை அலட்சியமாய் அவள் குலுக்கினாள்.

"தெரியவில்லை. யோசிக்க வேண்டும்...!"

அவன் மறுபடியும் சலிப்படைந்தவனாய் தலையில் கைவைத்துக் கொண்டான். "ம்ம்... நன்றாக யோசி. யோசித்துக் கண்டுபிடி. வேண்டுமானால் அரபு நாடுகளில் செய்வது போல் எனக்கு சவுக்கினால் கசையடி கொடுக்க நினைத்தாலும் நான் வாங்கிக்கொள்ள தயார் தான்... போதுமா?"

அவன் முடித்ததும் அவள் பதில் பேசாது உதடுகளை இறுக மூடிக் கொண்டாள்.

அவன் சிந்திப்பது போல் ஹாலின் குறுக்கும் நெடுக்குமாய் வேகமாய் நடந்தான்.

பின் நின்று அவள் பக்கம் பார்த்தான்.

"இதோ பார்... இப்போது உன் தாயாரின் உடல்நிலை ரொம்பவும் முக்கியம். அந்த ஹாஸ்பிடலில் உடனே

நான் பணத்தை கட்டிவிடுகிறேன்... அந்த ஆபரேஷனை அவர்கள் உடனே செய்யட்டும். மற்ற விஷயங்களை பின்பு பேசி நாம் முடிவு செய்து கொள்வோம். என்ன சொல்கிறாய்? இதற்காவது சம்மதிக்கிறாயா...? இல்லை இதற்கும் குரங்குப் பிடி பிடிக்கப் போகிறாயா...?'' என்றான்.

தான் சீரழிந்தது சீரழிந்ததுதான், தாயாரையாவது படுத்தும் நோயில் இருந்து காப்பாற்றுவோம் என முடிவெடுத்தவள், ''சரி.... சம்மதிக்கிறேன்...'' என்றாள்.



# 9

ஒரு மணி நேரத்தில் அங்கிருந்து கிளம்பி வீடு வந்து சேர்ந்துவிட்டாள்.

மதன் ஒரு ஆட்டோ பிடித்து, ஆட்டோவிற்கான பணத்தையும் கொடுத்துதான் அனுப்பி வைத்திருந்தான்.

கூடவே அவள் காதுகளில், ''எதற்கும் கவலைப்பட்டு வருத்தம் கொள்ளாதே. எல்லாவற்றையும் சரியாக்க வேண்டியது என் பொறுப்பு!'' என்று சொல்லி அனுப்பி வைத்தான்.

பெரிய மகாராஜா... தப்பை எல்லாம் செய்துவிட்டு... பிராயச்சித்தம் தேடி சரிப்படுத்திவிட்ட நினைப்பு...



எல்லாம் பணக்காரத் திமிர்...! என்ற நினைப்புடன் அப்போது பற்களைக் கடித்தபடி முகத்தை வெட்டிக்கொண்டாள் அவள்.

ஆட்டோவில் வரும்போது கூடவே நீலாவைப் பற்றிய நினைப்பே ஓடியது. நீலா என்ன அப்படிப்பட்டவளா? பணத்திற்காக... இப்படி கூடவே அலைந்து கழுத்தறுக்கும் அளவுக்குப் போவாளா? அதுவும் அவளுக்கு இழைக்கப்பட்டிருப்பது எவ்வளவு பெரிய கொடுமை?

இந்த அநியாயத்தை அவள் செய்திருப்பாளா? அல்லது... இந்த மதன்தான் ஏதேதோ சொல்லி நாடகமாடுகிறானா...?

அப்படி ஒரு நினைப்பு ஓடியதும் மறு நிமிடமே மதனிடம் அந்த ஒரு லட்ச பணத்தை வாங்க நீலா காட்டிய அவசரம் ஞாபகத்திற்கு வந்தது.

நடப்பது நடந்தது உண்மைதான்! நீலா தான் ஏமாற்றி இருக்கிறாள். வீடு வரை சென்று பார்த்தாயிற்றே... ஒரு இரண்டு மணி நேரத்தில் வீட்டை காலி பண்ணிவிட்டு ஊரை விட்டே ஓடிவிட்டாளே!

நீலா ஏற்கனவே... கொஞ்சம் பணத்தாசை உள்ளவள் தான். அடிக்கடி அவளிடமே, எத்தனை நாளடி இந்த ஓட்டு வீட்டில் உட்கார்ந்து கொண்டு பழைய சோற்றை கஞ்சியையும் குடித்துக் கொண்டிருப்பது... நாமும் பணக்காரர்கள் ஆக வேண்டாமா? என அவ்வப்போது புலம்புவாள்.

கவிதா அப்போது அதை பெரிதாய் எடுத்துக் கொள்ளவில்லை. ஆனால் இப்போதல்லவா தெரிகிறது. அந்த அவளது ஆசை பேராசையாய் மாறி பாஸ்கர் போட்ட தூபத்தில் தோழியின் வாழ்க்கையையே நாசமாக்கும் அளவுக்கு துணிந்துவிட்டாளே?

என்னவெல்லாம் பேசினாள்? சிரிக்கச் சிரிக்க எப்படி யெல்லாம் பழகினாள்?

எல்லாம் பொய்யாய்... அவள் போட்ட வேஷமாய் நடிப்பாய் போய்விட்டதே!

சே!

ஒருகணம் நீலாவைப் பற்றி நினைப்பதையே அருவறுப்பாய் உணர்ந்தவள் மனதை கட்டுப்படுத்திக் கொண்டாள்.

கூடாது! இனி நீலாவைப் பற்றி நினைப்பதில் அவள் செய்து துரோகத்தை நினைத்து பொருமுவதில் எவ்வித பிரயோஜனமும் இல்லை. இனி நடக்க வேண்டியதைப் பார்ப்போம்...! என்ற நினைப்போடு எண்ணங்களை மாற்றினாள்.

வீட்டில் நுழைந்து 'படபட'வென வேலைகளை கவனிக்க ஆரம்பித்துவிட்டாள்.

நல்ல வேளையாய் தங்கம்மா பாட்டி அவள் வராததை உணர்ந்து தாய்க்கு வீட்டிலிருந்த மதிய உணவையும் கொடுக்க வேண்டிய மருந்து மாத்திரைகளையும் கொடுத்து உதவியிருந்தாள்.

அவளுக்கு நன்றி சொல்லிவிட்டு அரைத் தூக்கத்தில் கண்கள் மூடியிருந்த தாயின் பக்கம் போனாள்.

மெல்ல தன் கரங்களால் பரிவுடன் அவள் தலைமுடியை வருடிய போது விசாலம் கண்களைத் திறந்துப் பார்த்தாள்.

தாயின் கண்களைச் சந்தித்ததும் அவளுக்கு அழுகை அழுகையாய் வந்தது. அப்படியே தாயின் மடியில் விழுந்து எனக்கு என்னவெல்லாம் நேர்ந்துவிட்டத



பார்த்தாயா அம்மா? என்று கதற வேண்டும் போலிருந்தது.

ஆனால் பெற்ற தாய் இப்படி ஒரு கொடுமை மகளுக்கு நேர்ந்திருப்பது தெரிந்தால் துடித்துப் போய்விடுவாளே...? அந்த அதிர்ச்சியில் உயிரைக்கூட விட துணிந்து விடுவாளே!

தாய் எதையும் தன்னிடம் கண்டுபிடித்துவிடக்கூடாது என்ற உணர்வில் கஷ்டப்பட்டு தன் உணர்ச்சிகள் முழுவதையும் அடக்கி அழுகையை கட்டுப்படுத்தினாள்.

"என்ன கண்ணு... நீ வரும்போது எல்லாம் நான் தூங்கிக்கொண்டிருக்கிறேன். நீ வெளியே சென்றதும் நான் முளித்து விடுகிறேன். பார்த்தாயா?" என்றாள் ஒரு வறண்ட சிரிப்புடன்.

அவள் வீடு வர லேட்டானதும் பாட்டி தானாக கூறி சமாளித்த பொய்கள் என்பதை தெரிந்து கொண்டவளாய் பதிலுக்கு தாயைப் போலவே வறண்ட சிரிப்பை உதிர்த்தாள்.

விசாலம் அவள் பணத்திற்காக அலைந்து அல்லாடுவதை உணர்ந்தவள் போல், "ஆப்ரேஷன் பணத்திற்காக ரொம்பவும் சிரமம் கொள்ளாதே கண்ணு. நடப்பது நடக்கட்டும்...." என்றாள் நடுங்கும் விரல்களால் அவளது கையை அழுத்தியவாறு.

அப்படிச் சொல்லும் போது படபடவென இருமலும் சிறிது மூச்சிரைப்புமாய் வந்து அவள் உடம்பையே உலுக்கியது.

தனது கைகளால் தாயின் நெஞ்சை இதமாய் தடவி விட்டு தலையணையை கட்டிலில் உயர்த்தி சற்று

சாய்வாய் உட்கார்ந்திருக்கும்படி தாய்க்கு உதவி செய்தாள்.

"ஒன்றும் கவலை வேண்டாம் அம்மா. பணம் எல்லாம் கிடைத்து விட்டது. அடுத்த வாரம் உங்களுக்கு ஆபரேஷன் நடந்துவிடும்..." என்றாள்.

தாய் சற்று தன் விழிகள் உயர்த்தி தன்னையே பார்ப்பதை உணர்ந்து, "எல்லாம் என் அலுவலகம் மூலம் தான் அம்மா. எங்கள் முதலாளி லோன் போல் பணம் தருவதாய் சொல்லிவிட்டார். மாதாமாதம் சம்பளத்தில் ஒரு பகுதியை அதற்காக பிடித்தம் செய்து கொள்வதாகவும் கூறிவிட்டார்..." என்று சமாளித்தாள்.

பின் ஸ்டூலில் இருந்த ஆரஞ்சுப் பழங்களை உறித்து பிழிந்து ஜூஸை தாயிடம் நீட்டினாள். விசாலம் வாங்கி மெல்ல பருக ஆரம்பித்தாள்.

ஜூஸைப் பார்க்கும் போது பகீரென அந்த எண்ணம் ஓடியது. ஒரு ஜூஸால் தானே இப்போது அவள் வாழ்க்கையே தடம் புரண்டுவிட்டது.

அவள் மட்டும் அன்று மதன் பங்களாவில் பாஸ்கர் நீட்டிய அந்த ஜூஸைக் குடிக்காமல் இருந்திருந்தால்... ஒன்றும் நிகழ்ந்திருக்காதே...? யாரும் அவளை ஏமாற்ற முடியாமல் போயிருக்குமே?

அவளும் வேண்டாம் என்றுதானே மறுத்தாள். ஆனால்... அந்த நீலாதானே பிடிவாதம் பிடித்து குடிக்க வைத்தாள். கூட இருந்தே குடி கெடுத்த பாதகி...! சே...! வெறுப்பாய் பற்களைக் கடித்து ஆத்திரத்தை அடக்கினாள்.

அம்மா வேறு அந்நேரம் பார்த்து, "ஆமாம் கண்ணு... உன் தோழியைக் காணவில்லையே...?" என நீலா பற்றி



விசாரிக்க எழுந்த எரிச்சலை மறைத்துக்கொண்டு, "ஊருக்குச் சென்றிருக்கிறாள்..." என்று கூறி பேச்சை மாற்றினாள்.

அன்று இரவு படுத்தவள் தூக்கம் வராமல் தவித்தாள். நடந்ததை நினைத்து அழுகைதான் முட்டிக்கொண்டு வந்தது.

தாயும் பாட்டியும் பார்க்காதவாறு தலையணையில் புதைந்து அழுது தீர்த்தாள். மறுநாள் மதன் காலையிலே அவள் வீடு தேடி வந்து பெரும் அதிர்ச்சி ஒன்றையும் கொடுத்தான்.



# 10

மறுநாள் விடிந்ததை உணர்ந்தும் ரொம்ப நேரம் படுக்கையை விட்டு எழ மனமில்லாமல் அப்படியே கிடந்தாள். பாட்டி காபி டம்ளரை கொடுத்த போதும் படக்கென வாங்கி உறிஞ்சிவிட்டு டம்ளரைக் கொடுத்தாள்.

"வேலைக்கு கிளம்பலையா கண்ணு?" என அக்கறையாய் கேட்ட பாட்டியிடம் இரண்டு நாள் லீவிற்கு தொலைபேசி மூலம் அலுவலகத்திற்கு தெரிவித்துவிட்டதாகவும் உடம்பு கொஞ்சம் அசதியாய் இருப்பதாகவும் கூறினாள்.

பாட்டி விடாது தனக்குத் தெரிந்த நாட்டு மருந்துகளை வாங்கி மதியம் கஷாயம் வைத்து கொடுப்பதாய்ச் சொன்னாள்.

ஆனால் அவள் மெல்ல எழுந்து குளித்து அம்மாவின் மருந்து, மாத்திரைகள் எல்லாம் கொடுத்துவிட்டு காலை உணவை உண்ண ஆரம்பித்த போது வெளியே காரின் ஹாரன் ஒலி கேட்டது.

அவள் நினைத்தது போலவே கதவைத் திறந்து வீட்டினுள் நுழைந்தது மதன்தான்!

எவ்வித தயக்கமுமில்லாமல் விறுவிறுவென நுழைந்து அவளைத் தேடியவன் உள் ரூமிற்கே வந்துவிட்டான். அவளுக்கு எதிரே இருந்த இருக்கை ஒன்றை இழுத்துப் போட்டுக் கொண்டு உட்கார்ந்து நேராய் அவளைப் பார்த்தான்.

நேற்று போல் அவன் முகத்தில் எவ்வித தடுமாற்றமும் இல்லாமல் ஒருவித உறுதி கூடியிருந்தது.

"உன்னிடம் நிறைய பேச வேண்டும்..." என்ற போது வேண்டா வெறுப்பாய் அவள் முகத்தை திருப்பிக் கொண்டாள்.

அவனோ அதற்கு கொஞ்சமும் அலட்டிக் கொள்ளாமல், "இதோ பார். இப்படி முகத்தை திருப்பிக் கொண்டால் நடந்தது எல்லாம் நடக்கவில்லை என்று ஆகிவிடுமா?" என்றவன் அவள் முகத்தையே கூர்ந்து பார்த்தவாறு, "நான் பேச வந்தது உன் அம்மாவைப் பற்றி..." என முடித்தான்.

"அம்மாவுக்கென்ன?" என்றாள் அவள் ஆத்திரம் சிறிதும் குறையாதவளாய்.

"ஹாஸ்பிடலில் பேசி ஆபரேஷனுக்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்துவிட்டேன். நாளையே கூட அந்த ஆபரேஷனை பண்ணிவிடலாமாம். உன் சம்மதம் தான் தேவை..." என்றான்.



அவன் வேறு என்னவோ நடந்தவைகளுக்கு பேசி சப்பைக்கட்டு கட்டுவான் என எதிர்பார்த்தவளுக்கு அவன் இப்படிப் பேசியது பெரும் ஆச்சரியத்தை உண்டு பண்ணியது.

"ஆபரேஷனா...? ஏற்பாடு பண்ணி விட்டீர்களா?" என்றாள் நம்பமுடியாதவளாய்.

அவன் தலையை ஆட்டினான்.

"பணம்... ஒரு லட்ச ரூபாய்...?"

"நான் தான் கட்டினேன்..." என்றவன் அவள் முகம் போன போக்கை பார்த்துவிட்டு, "எனக்கு பணம் ஒன்றும் பெரிதான விஷயம் இல்லை. உன் அம்மாவின் உடல் நிலையை உடனே சீரபடுத்த வேண்டும். இல்லாவிட்டால் பெரும் ஆபத்தில் முடிய வாய்ப்பிருப்பதாக டாக்டர்கள் சொல்லியிருக்கிறார்கள்..." என்றான் அக்கறையாய்.

"அது எனக்கும் தெரியும்..." என்றாள் அவள் கோபமாய்.

"பின் ஏன் யோசிக்கிறாய்? மற்ற விஷயங்களை எல்லாம் விடு. பின்னால் பார்த்துக் கொள்வோம். இப்போது உன் தாயாரை குணப்படுத்துவது ஒன்றே முக்கியம்."

அவன் முடிப்பதற்குள், "அதற்காக உங்களிடம் பிச்சை ஒன்றும் கேட்க நான் விரும்பவில்லை..." என்றாள்.

"ஓ... நீ அப்படி வருகிறாயா?" என புருவம் உயர்த்தியவன், "அப்படியானால் உன் வழிக்கே வருகிறேன்.... அன்று நடந்த விஷயங்களுக்கான சன்மானம் என்று வைத்துக்கொள்...!" என்றான்.

"சன்மானம்...? அதாவது... கூலி...? அப்படியானால் நான்... நான்..." என இழுத்தவள் அந்த வார்த்தைகளை சொல்ல முடியாமல் தவித்தாள்.

அவன் இம்முறை மெல்ல அவள் பக்கம் வந்து நின்றான். "அந்த வார்த்தைகளை ஒவ்வொரு முறையும் தேடிப் பிடித்துச் சொல்லி உன்னையே ஏன் நீ தாழ்த்திக் கொள்கிறாய்? நடந்த விஷயம் முழுவதற்கும் வஞ்சகர்களான நீலாவும் பாஸ்கரும்தான் காரணம். நீயோ, நானோ காரணமில்லை. இருந்தும் நடந்த தவறுக்கு நான் முழுப் பொறுப்பேற்றுக் கொள்கிறேன். உன் தாயாரின் மருத்துவச்செலவு முழுவதையும் கொடுத்துவிடுகிறேன். நீ விருப்பப்பட்டால் உன்னையும் கல்யாணம் செய்து மனைவி அந்தஸ்தை கொடுக்கிறேன்... என்ன?"

அவன் நிறுத்த, "எனக்கு விருப்பமில்லை..." என்றாள் அவசரமாக.

"அப்படியானால் சரி. உன் தாயின் மருத்துவச் செலவுகளை செய்ய விடு. அந்த ஆபரேஷன் நாளையே நடந்து விடும். வீணாய் எல்லா விஷயங்களிலும் பிடிவாதம் பிடிக்காதே. என் பொறுமைக்கும் ஒரு எல்லை உண்டு..."

படபடவென பேசிவிட்டு அவன் கிளம்புவது போல் திரும்பி நடக்க ஆரம்பித்து விட்டான்.

அவள் ஒன்றும் தோன்றாது சிலை போல் நின்றிருந்தாள். அவன் சென்றதும் தான் உணர்வுக்கு வந்தவள் இந்த அறையில் அவர்கள் பேசியதை அம்மாவோ, பாட்டியோ கேட்டிருக்கக்கூடாதே என்று பயந்தாள்.

நல்லவேளையாய் அம்மா அசந்து தூங்கிக் கொண்டிருக்க... பாட்டி பக்கத்து கடைத் தெருவுக்கு சென்றிருப்பதைக் கண்டு நிம்மதி கொண்டாள்.

பின் நிதானமாய் யோசித்த போது... எது எப்படியோ இப்போது அம்மாவின் உடல்நிலை முக்கியம். அதை முதலில் சரிப்படுத்த வேண்டும். அதற்கு இந்த மதனின் உதவியைப் பெறுவதில் தவறில்லை... என முடிவெடுத்தாள்.



அதனாலே அடுத்த அரை மணி நேரத்தில் மதனின் அலைபேசிக்கு டயல் செய்து விபரத்தை தெரிவித்தாள். "குட்! ஏற்பாடுகளைச் செய்கிறேன்..." என ஒரே வார்த்தையில் போனை வைத்துவிட்டான் மதன்.

பின் பாட்டியிடமும் அம்மாவிடமும் மதன் லயன்ஸ் கிளப் ஒன்றின் தலைவர் எனவும் நம் போன்ற ஏழைகளுக்கு உதவ வந்திருக்கிறார்... எனக்கூறி மதனை அறிமுகப்படுத்தி வைத்தாள். மறுநாள் செய்ய வேண்டிய ஆபரேஷனுக்காக எல்லாவற்றையும் தயார்படுத்தினாள்.

மதனின் ஏற்பாட்டின்படி அன்று மாலையே வேன் பிடித்து ஹாஸ்பிடலில் அட்மிட் ஆனார்கள். மதன் டாக்டர்களிடம் பேசி தேவையான மொத்த பணத்தையும் கவுண்டரில் கட்டினான்.

மறுநாள் ஆபரேஷன் நடக்கும் போதும் பயந்து நடுங்கிய அவளுக்கு தைரியம் சொல்லி கூடவே இருந்தான்.

ஒரு மூன்று மணி நேரத்தில் டாக்டர்கள் வெளிவந்து, "ஆபரேஷன் நன்றாக நடந்துவிட்டது. இனி உன் தாயார் பூரண குணம் அடைந்து விடுவார்கள்!" என்று சொன்னதும் தான் அவளுக்கு உயிரே வந்தது.



# 11

அடுத்து வந்த இரண்டு நாட்களில் பூரண குணமாகி தாயாரை டிஸ்சார்ஜ் செய்தார்கள். மதன் உடனிருந்து உறுதுணையாய் எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டான்.

தாயார் முகத்திலும் நோய் நீங்கி தான் குணமாகி விட்டதை உணர்ந்து அன்றுதான் இனிமையான ஒரு புன்னகையை அவளால் பார்க்க முடிந்தது.

அது ஒன்றே தான் பட்ட பாட்டிற்குப் போதும் என நிம்மதியடைந்தாள் அவள். இன்னும் ஒரு பத்து நாட்கள் பெட்ரெஸ்ட் எடுத்துவிட்டால் போதும், அதற்குப் பின் தாயார் எழுந்து நடமாடலாம். வீட்டு வேலைகளைக்கூட செய்யலாம் என டாக்டர் கூறிவிட்டார்.

மதனும் முன்பே சொல்லியபடி ஹாஸ்பிடலின் செலவு முழுக்க ஏற்றுக் கொண்டான். எல்லாம் சேர்த்து ஒரு லட்சத்து பத்தாயிரம் ரூபாய் என பில் வந்திருந்தது. மதன் உடனேயே கேஷாய் கவுண்டரில் கட்டிவிட்டான்.

''ரொம்பவும் நன்றி...'' என ஒருவிதக் குரலில் திக்கித் திணறிச் சொன்னாள் அவள்.

மதன் திரும்பி அவளை ஒரு பார்வை பார்த்துவிட்டு, ''இது எனக்கு முக்கியம் அல்ல. எனக்கு முக்கியமானது... இன்னொரு விஷயம்...'' என்றான்.

''என்ன அது?'' என்றாள் அவள்.

கழுத்தில் மாலை போல் செய்து காண்பித்து விட்டு, ''தாலி...'' என்றான்.

அவள் முகத்தை திருப்பிக்கொண்டு விறுவிறுவென நடந்துவிட்டாள்.

தப்பு செய்து விட்டு... குற்ற உணர்ச்சி குடைந்து குறுக்கிறதாக்கும்? நன்றாக குடையட்டும்... அப்படியாவது புத்தி வந்தால் சரி...!

யோசனையில் நடந்தாள் அவள்.



மறுநாள் தாயின் உடல் நலம் பார்க்கும் சாக்கில் ஆரஞ்சுப் பழ கூடை ஒன்றுடன் வந்தான்.

முதலில் மறுக்க நினைத்தவள் பின் ஒன்றும் பேசாது வாங்கிக் கொண்டாள்.

அம்மா பக்கத்தில் உட்கார்ந்து அக்கறையாய் கைகளைத் தொட்டு தொட்டு விசாரித்தான்.

அவளுக்கு அதைப் பார்க்கையில் ஆத்திரமாகவே இருந்தது.

அவள் நினைத்தது போலவே அவன் சென்றதும் அம்மா அவன் புகழ் புராணம்தான் பாடினாள்.

யார்... இது...? உனக்கு நட்பாய் கிடைத்த நல்லவரா? நம்பவே முடியவில்லை. பெரும் பணக்காரராய் இருந்தாலும் எவ்வளவு எளிமையாகப் பழகுகிறார். இனிமையாகப் பழகுகிறார். தங்கமான குணம்...! என புகழாரம் சூட்டியபோது எரிச்சலாக உணர்ந்தாள் அவள்.

இவனுக்கா தங்க குணம்...? இவன் யாரென்று இவன் செய்த செய்கை என்னவென்று சொன்னால் அம்மாவால் பொறுக்க முடியுமா? காறித்துப்பி விடுவாளே!

மேலும் இப்போதெல்லாம் மதன் அவளைப் பார்க்கும் போதும் சரி... அவள் வீட்டிற்கு வரும் போதும் சரி... எவ்வித குற்ற உணர்ச்சியும் இல்லாமல் உரிமை உள்ளவன் போல் வருவது அவளை ஒருவிதத்தில் ஆத்திரப்படுத்தவே செய்தது.

அம்மாவிடமும் சரி, பாட்டியிடமும் சரி அன்பாய் குழைய குழையத்தான் பேசினான். ரொம்ப நாள் பழகியவன் போல் பக்கத்தில் உரிமையுடன் உட்கார்ந்து பேசினான்.

அவள்தான் அவன் வருவது தெரிந்தாலே உள்புறமாய் ஒதுங்கிவிடுவாள். அவன் கிளம்பி சென்றது உறுதியானதும் தான் வெளிவந்து தலைகாட்டுவாள்.

சில சமயம் அவனே உள்ளறை வந்து எட்டிப் பார்த்து "இன்னும் வேலைக்கு கிளம்பவில்லை? நான் வேண்டுமானால் ட்ராப் செய்யட்டுமா?" என அக்கறையாய் கேட்டான்.

பதிலுக்கு வாயைத் திறக்காது முகம் வெட்டிய மறுப்பான ஒரு சைகையுடன் அவனை திருப்பி அனுப்பி விடுவாள்.

ஆனாலும் ஒருநாள் அவளிடம் வந்து அவளை மிரட்டுவது போல், "இன்னும் என்ன யோசிக்கிறாய்? எப்போது உன் கழுத்தில் தாலி கட்டி என் பாவத்தைப் போக்க நினைக்கிறாய்? நீயாய் சம்மதிக்கிறாயா... இல்லை உன் அம்மாவிடமும் பாட்டியிடமும் விஷயம் எல்லாவற்றையும் சொல்லி உன்னை சம்மதிக்க வைக்கட்டுமா?" என்றபோது அவள் ஒரேயடியாய் அதிர்ந்தே போய்விட்டாள்!

என்ன இது...? இப்படி ஒரு பயங்கரத் திட்டம் இவன் வைத்திருக்கிறானா? என திகைத்தாள்.

அப்படியே அது பற்றி சிந்திக்காமல் தட்டிக் கழித்துவிடலாம் என்று பார்த்தால் அம்மாவிடமும் பாட்டியிடமும் சொல்லிவிடுவதாய் மிரட்ட வேறு செய்கிறானே?

அது பெரும் ஆபத்தாக போய்விடுமே?

அன்று இரவு முழுவதும் அதற்காக தூங்காமல் சிந்தித்தாள்.

அதற்காக மதனுக்கு கழுத்தை நீட்ட அவள் கொஞ்சமும் தயாராய் இல்லை.



எவ்வளவு புனிதமானது கல்யாணம் மற்றும் சடங்குகள்...

ஆனால்... அன்று அவன் அவளைத் தொட்டது... தொட்டு சிதைத்தது... ஒரு விலைமாது... வேசி என்ற நினைப்பில் தானே?

அப்படி ஒரு எண்ணத்துடன் தன் உடம்பை உபயோகித்துவிட்டு இன்று பெரிய நல்லவன் போல் தாலி கட்டி வாழ்வு கொடுக்கப் பார்க்கிறானா?

என்ன ஒரு அக்கிரமம்! இப்படி ஒரு தீங்கு செய்தவனின் உள்ளம் அந்த மனம் தான் எவ்வளவு கடுமையாய் கொடியதாக இருக்கும்? இப்படி இவன் போடுவது கூட எதையோ சாதிக்க... ஆயுசு பூராவும் அவளை அடிமையாக்க அவன் போடும் நாடகமாய்கூட இருக்கலாமே?

மேலும் இப்படி பணத்தை தூக்கிப் போட்டு எத்தனையோ பெண்களின் வாழ்க்கையை சீரழித்தவனுக்கு தாலி கட்டுவது ஒன்றும் பெரிய விஷயமில்லையே? மாடுகளுக்கு கயிறு கட்டி கொட்டிலில் அடைத்து விடுவது போல் அவளுக்கு தாலி கட்டி அவனது அந்தப்புரத்தில் அடைத்துவிட நினைக்கிறான்.

இதற்கு ஒரு நாளும் ஒப்புக் கொள்ளக்கூடாது? அவன் செய்த பாவத்தை தீர்க்கவே வழி தெரியவில்லை. இதில் அவனை கட்டிக் கொண்டு தினம் தினம் அவனது பாவச் சுமையையும் சேர்த்து சுமப்பதா?

முடியாது? முடியவே முடியாது...!

தீர்மானமான முடிவிற்கு வந்தாள் அவள்.

அடுத்து வந்த இரண்டு தினங்களும் தீவிரமாக யோசித்தாள். மூன்றாம் நாள் தற்செயலாய் தின பேப்பர் ஒன்றைப் புரட்டியபோது அந்த விளம்பரம் பளிச்சென அவனது

கண்களில் பட்டது. சிறு பாலகர்கள், முதியோர்கள் காப்பகம் ஒன்றுக்கு காரியதரிசி போன்ற பணியாள் தேவை எனவும், சம்பளத்துடன் குடும்பத்துடன் வந்து தங்க உறைவிடமும் உணவும் இலவசமாக வழங்கப்படும் என அறிவிப்பில் வெளியிடப்பட்டிருந்தது... குஷியடைந்தவளாய் அதில் இருந்த டெலிபோன் நம்பருக்கு உடனடியாய் டயல் செய்தாள்.

தன்னைப் பற்றி சொன்னதும் மறுமுனையில் வந்த பதிலைக் கேட்டு அவள் முகம் மிகவும் பிரகாசமடைந்தது.

வழி... கிடைத்துவிட்டது...! என தனக்குத்தானே உற்சாகமாய் கூவிக்கொண்டாள்... அன்றே மதனுக்குத் தெரியாமல் வீட்டைக் காலி செய்து கொண்டு அம்மாவையும் பாட்டியையும் கூட்டிக்கொண்டு கிளம்பத் தீர்மானித்தாள் அவள்!



## 12

சேலத்திலிருந்து முப்பது கிலோமீட்டர் தொலைவில் புன்னையனூர் என்ற கிராமத்தில் அந்த காப்பகம் இருந்தது. ஊர் சந்தடிகளில் இருந்து விலகி அமைதியான சூழ்நிலையில் இருப்பதாகவும், அவளுக்கு தகவல் கிடைத்தது.

அதுதான் தான் போவதற்கு சரியான இடம் என முடிவெடுத்தாள் கவிதா. தாயிடமும் பாட்டியிடமும் என்ன சொல்லி சம்மதிக்க வைப்பது என குழம்பினாள்.



பின் யோசித்து, தன் கல்லூரி பேராசிரியர் ஒருவர் இந்த சமூகப்பணி வேலையை தனக்கு வாங்கிக் கொடுத்திருப்பதாகவும், இது போன்ற சேவைப் பணிகளில் ஈடுபட்டால் பெரும் மகிழ்ச்சியும் மன அமைதியும் கிடைக்கும் என விளக்கினாள்.

நல்ல சம்பளத்துடன், தங்க உறைவிடம், உணவு வசதி என எல்லா வசதிகளையும் செய்து கொடுக்கிறார்கள். வேலையில் வந்து உடனே சேர அழைப்பும் விடுத்திருக்கிறார்கள் எனவும் கூறி அவர்களை சம்மதிக்க வைத்தாள்.

தன் திட்டப்படியே மதனுக்குத் தெரியாமல், தெரிவிக்காமல் பக்கத்து வீட்டினர் உதவியுடன் வீட்டுச் சாமான்களை எல்லாம் டெம்போ லாரி ஒன்றில் ஏற்றி கிளம்பிவிட்டாள்.

மறுநாள் அதிகாலை அவளுக்கு புன்னையனூர் கிராமத்தில்தான் விடிந்தது. அவள் நினைத்தது போலவே மரங்கள் சூழ அமைதியான சூழ்நிலையில் இருந்தது காப்பகம்.

காப்பக நிர்வாகியான சரவணன் அவர்களை அன்புடன் வரவேற்றான். சரவணனுக்கு முப்பது முப்பத்தைந்துக்குள்ளான வயது தான். அந்த சிறிய வயதிலேயே காப்பகத்தை நிர்வகித்து திறம்பட நடத்தும் அவனது பங்கு குறித்து வியக்கவே செய்தாள்.

சரவணன் அவளுக்கு காப்பகத்தில் இருக்கும் சிறுவர்கள், முதியோர்கள் என எல்லோரையும் அறிமுகப்படுத்தி விளக்கினான். முதியோர்களுக்கு தேவையான பணிவிடைகளை செய்வதும், சிறுவர்களுக்கு காப்பகத்திலேயே ஒரு பகுதியில் இயங்கும் ஆரம்பப் பாடசாலை

யில் அடிப்படை கல்வியை கற்றுக் கொடுப்பதும் தான் அவளுடைய வேலை என்பதை விளக்கி புரியவைத்தான்.

மனமுவந்து உற்சாகத்துடன் அந்த வேலையை ஏற்றுக் கொண்டாள் கவிதா.

காப்பகத்தை ஒட்டிய அவுட்ஹவுசில் அவர்கள் தங்குவதற்கு வீடும் ஏற்பாடு செய்யப்பட்டது.

ஓரிரு நாளிலே கவிதாவிற்கு மட்டுமல்ல... தாய் விசாலத்திற்கும் பாட்டிக்குக்கூட அந்த புதிய இடம், புதிய சூழ்நிலை பிடித்துவிட்டது.

தினம் சிறுவர்கள் பள்ளியில் பாடம் சொல்லிக் கொடுப்பதும், அந்தப் பாலகர்களோடு நேரம் போவது தெரியாமல் பேசி, சிரித்து விளையாடி பொழுதை கழிப்பதும், இல்ல முதியோர்களுக்கு பணிவிடை செய்வதும் என்பதாக நேரம் விரைந்து சென்றது.

கவிதா அதை ரொம்பவும் விரும்பிச் செய்தாள். தான் பட்ட கஷ்டங்கள் எல்லாம் விலகிவிட்டது போல் குதூகலம் கொள்ளவே செய்தாள்.

ஆனால் பத்து நாட்கள் கழித்து திடீரென வயிற்றில் குமட்டல் ஏற்பட்டு வாந்தி வந்தபோது அவளது மொத்த சந்தோஷமும் தொலைந்து போனது.

ஆசிரமத்தில் உள்ள மருத்துவ டாக்டரிடம் தன்னைப் பரிசோதிக்கச் சென்றவள் அதிர்ந்தே போனாள். வயிற்றில்... சிசு வளர்வதை டாக்டர் தெரிவித்த போது மயக்கம் வராத குறையாய் எதிரில் திகைத்துப் போய் உட்கார்ந்திருந்தாள் அவள்.

கடவுளே! அவள் வயிற்றில்... அன்று நடந்த அந்த பாவச் செயலின் சாட்சியாகவே? எது நடக்கக்கூடாது என்று அவள் நினைத்தாளோ... அது கடைசியில் நடந்து விட்டதா!



அந்த பணத்திமிர் பிடித்த கொடூரன் பாவக்காரன் மதனின் வாரிசு அவள் வயிற்றில் வளர்கிறதா?

முதலில் எழுந்த கோபத்தில் அழித்துவிடவே நினைத்தாள்.

தனக்கு அறியாமல் நடந்த தவறுக்கு, தான் பிறரை நம்பி ஏமாந்தமைக்கு அந்தச் சிசு என்ன செய்யும்?

மேலும் கடவுளின் படைப்பாய் உயிர் பெற்றிருக்கும் ஒரு ஜீவனை அழிக்கும் உரிமை அவளுக்கு ஏது?

ஆனால்... அதற்காக அம்மாவிடமும், பாட்டியிடமும் ஏன் விடுதி காப்பாளர் சரவணனிடமும் எப்படிச் சொல்வது?

இனியும் உண்மையை மறைக்க முடியாதே?

அம்மாவும் பாட்டியும் விஷயத்தைக் கேள்விப்பட்டால் அப்படியே துடித்துப் போய்விடுவார்களே?

என்ன செய்வது? என ஒரு நாள் முழுவதும் யோசித்தாள்.

வேறு வழியில்லை.

சொல்லித்தான் ஆக வேண்டும்.

அதனால் ஏற்படும் அவமானங்களை சகித்துதான் ஆக வேண்டும்.

மனதுள் தீர்மானமாய் முடிவெடுத்தவள், மறுநாளே எல்லோரிடமும் தான் நீலா, பாஸ்கர், மதன் மூவரிடமும் ஏமாந்த கதையை ஏமாற்றப்பட்ட கதையை சொல்லி விட்டாள்.

அம்மாவிற்கும் பாட்டிக்கும் ஒரே அதிர்ச்சி தான்.

அந்தத் தம்பியா? பார்ப்பதற்கு நல்லவனாய் வந்து பேசிப் பழகினானே?

இரண்டு நாள் விஷயத்தை ஜீரணிக்க முடியாமல் அழுது தீர்த்தனர்.

விடுதி நிர்வாகி சரவணனோ, ''நீ... எதற்கு அம்மா இதற்காக வருந்த வேண்டும். உன் வாழ்க்கையை சீரழித்த அந்த மதனை தேடிப்பிடித்து, சண்டை போட்டு உனக்கு நான் கட்டி வைக்கிறேன். அவனை நல்ல ஒரு மனிதனாய் நான் மாற்றிக் காட்டுகிறேன்...'' எனச் சொல்ல தலையாட்டி வெகுவாய் மறுத்தாள் அவள்.

''அப்படி ஒரு கெட்டவரோடு என் வாழ்க்கையை இணைத்து வாழ்நாள் முழுவதும் துன்புற தான் தயாரில்லை...!'' என உறுதியாய் தெரிவித்தாள்.

தன்னை வெகுவாய் வற்புறுத்திய தாய்க்கும், பாட்டிக்கும் அதையே பதிலாய்ச் சொன்னாள்.

மேலும் உள்ளபடியே யோசித்து யோசித்துப் பார்த்து அதில் தெளிவாய் இருந்தாள்.

நீலாவும் பாஸ்கரும் வஞ்சகமாய் ஏமாற்றியது ஒரு பக்கம் இருக்கட்டும்.

மதன் ஒன்றும் நல்லவன் இல்லையே? ஒரு லட்ச ரூபாய் கொடுத்து, ஒரு பெண்ணை அனுபவிக்க விரும்புகிறவன் எப்படி நல்ல மனது உடையவனாய் இருக்க முடியும்?

அப்படியானால் பணத்திமிர் பிடித்த கெட்டவன்தானே? அப்படி ஒரு கெட்டவனுடன் வாழ்நாள் முழுவதும் அவளால் எப்படி வாழ்க்கை நடத்த முடியும்?

மேலும் இப்படிப் பெண்களுக்காக அலைகிறவன் எப்படிப்பட்ட காமுகனாய் இருப்பான்?

அவனுக்கு தாலி கட்டி வாழ்க்கை கொடுத்து விட்டால் மட்டும் திருந்தி விடுவானா? அவளைப் போல்



இன்னும் எத்தனைப் பெண்களின் வாழ்க்கையை சீரழிக்க நினைத்திருக்கிறானோ... அல்லது சீரழித்து வைத்திருக்கிறானோ...?

யோசித்தவள், எது எப்படியோ... போகட்டும் இனி நம் வாழ்க்கை இப்படித்தான். இந்த காப்பகம்தான் நமக்கு எல்லாம். இங்கே பணி செய்து இப்படியே வாழ்க்கை முழுவதும் ஒட்டி விட வேண்டியதுதான்! மனதுள் தீர்மானமாய் முடிவெடுத்தாள் அவள்.



# 13

மதன் மறுநாள் வந்து பார்த்தவன் கவிதா வீடு பூட்டப்பட்டிருப்பது பார்த்து திகைத்தான். விசாரித்த போது நேற்று ஒரே நாளில் ஊரைக் காலி செய்துவிட்டு சென்றுவிட்டார்கள் என்ற விபரத்தைக் கேட்டு அதிர்ந்தே போனான்.

என்ன இது...? இப்படிச் செய்துவிட்டாள்? இவளை எங்கே போய் தேடுவது? எங்கு தான் போய் இருப்பாள்?

விசாரித்துப் பார்த்தான்.

எவ்வித தகவலும் கிடைக்கவில்லை.

அப்படி எங்குதான் போய் இருக்க முடியும்? என தன் பணியாட்களை அனுப்பி பக்கத்து ஊர்களுக்குச் சென்று விசாரித்து வர அனுப்பினான்.

ம்கூம்! எவ்வித பிரயோஜனமுமில்லை. அவள் எங்கு சென்றாள் என்று அவனால் கண்டுபிடிக்க முடியவில்லை.

ஆனாலும், 'விடக்கூடாது! எப்படியும் அவளை கண்டு பிடித்தாக வேண்டும். கண்டுபிடித்து அவள் கழுத்தில் தாலியைக் கட்டி செய்த தவறுக்கு பாவ விமோசனம் செய்து கொள்ள வேண்டும்.'

தனக்குத்தானே சூளுரைத்தவனாய் உறுதி கொண்டான் அவன்.

அதே நேரம் கவிதா அங்கு புயலடித்து ஓய்ந்தது போல் அமைதியாகி இருந்தாள். இதுதான் வாழ்க்கை. இப்படித் தான் வாழ்வது என தன்னைத்தானே பழக்கிக் கொண்டாள்.

ஆசிரமப் பெண்கள் கூட அவள் கல்யாணம் ஆகாமலே கருவுற்றிருப்பதைப் பார்த்து ஏளனப் பார்வை வீசிப் பார்த்தவர்கள் அவளது அமைதியான நடவடிக்கையைப் பார்த்து இரக்கமே கொண்டனர்.

அம்மாவும் பாட்டியும் தான், "உன் வாழ்க்கை இப்படி ஆகிவிட்டதே கண்ணு? என்னைக் காப்பாற்ற உன் வாழ்க்கையையே பலியாக்கிக் கொண்டாயே?" என புலம்பித் தீர்த்தார்கள். அவர்களை சமாதானப்படுத்த வழி தெரியாது பல்லைக் கடித்துக் கொண்டு குனிந்து கொள்வாள் அவள்.

ஆனால் இல்ல நிர்வாகி சரவணன்தான் பெரும் ஆறுதல் சொன்னான். சரவணனுக்கு மதனைவிட ஒன்றிரண்டு வயதுதான் அதிகமாக இருக்கும். ஆனால் பேச்சில், சிந்தனையில், சமூகப் பணிக்கு தன் வாழ்க்கை



முழுவதையும் அர்ப்பணித்த லட்சியத்தில் எவ்வளவு உறுதியாக இருக்கிறான் என நினைத்தாள்.

"காலம் எல்லாவற்றையும் சரிப்படுத்திவிடும். நீங்கள் கவலைப்படாதீர்கள்!" என அவன் சமாதானப்படுத்தும் விதமாய் சொன்ன வார்த்தைகளில் பெரும் ஆறுதலைக் கண்டாள்.

மேலும் ஆறேழு மாதங்கள் உருண்டோடிய போது வயிறு பெரிதாகிவிட ஆசிரமத்து பக்கத்தில் உள்ள கிளினிக் ஒன்றுக்கு ரெகுலரான செக்கப்புக்கு சென்றாள்.

அந்த கிளினிக்கிலேயே பத்தாவது மாதம் அட்மிட் ஆகி அழகான ஆண் குழந்தை ஒன்றை பெற்றெடுத்தாள்.

குண்டு கருவிழிகளுடன் பிஞ்சுக் கரங்களை, கால்களை ஆட்டிக்கொண்டு சிணுங்கிய குழந்தையின் அழகை கண்களில் நீர் தழும்ப பார்த்தாள். 'பாலு' என குழந்தைக்கு பெயர் வைத்து சீராட்டி பாராட்டி வளர்க்கவும் செய்தாள்.

மேலும் இரண்டு வருடங்கள் ஓடியபோது பாலு வளர்ந்து 'ங்கா... ம்மா..." என மழலை மொழியில் பேச ஆரம்பித்துவிட்டான்.

கவிதாவிற்கு பாதி நேரம் அவனைக் கொஞ்சுவதிலும் பிஞ்சு மொழியில் பேசி அவன் பண்ணும் சேட்டைகளை ரசிப்பதிலுமே சென்றது. அவளுக்கு மட்டுமல்ல... தாய் விசாலத்திற்கும் பாட்டிக்கும் கூட தான் சந்தோஷமாய்ப் போனான்.

அவனைப் பார்க்கும் போதெல்லாம் தகப்பனைப் பற்றித் தெரியாமல் அரவணைப்பு இல்லாமலே வளர்கிறானே என்ற வேதனை கவிதாவினுள் எழத்தான் செய்யும்.

அதைவிட இப்படியொரு மகன் இருப்பது கூட அந்தத் தகப்பனுக்குத் தெரியாதே என்ற உண்மை கூராய் நெஞ்சைக் கிழிக்கும்.

இருந்தும், என்ன செய்ய? அந்த மதன் இதைப் பற்றியெல்லாமா இப்போது கவலைப்படப் போகிறான்...? இந்நேரம் எங்கு எந்தப் பெண்ணுடன் சல்லாபித்துக் கொண்டிருக்கிறானோ? என்றுதான் நினைத்தாள்.

அப்படி அவள் வேதனைப்படும் சமயங்களில் காப்பக நிர்வாகியான சரவணன் தான் வந்து அவளுக்கு ஆறுதல் சொல்லிவிட்டுப் போவான். இந்த உலகில் சரவணன் போன்ற நல்ல மனிதர்களும் இருக்கத்தானே செய்கிறார்கள் என்று வியந்தாள் அவள்.

தன் வாழ்க்கையையே சேவைப் பணிகளுக்கு அர்ப்பணித்துக்கொண்டு அதையே தன் உயிர் மூச்சு போல் நினைத்து வாழ்ந்து வரும் சரவணன் போன்றோர் பாராட்டுக்குரியவர்களே! என நினைத்தாள்.

அவ்வப்போது சரவணனுடன் காப்பகத்துக்கு நன்கொடை விஷயமாய் வெளியே செல்ல நேர்ந்தது. சில சமயம் பாலுவையும் தன்னோடு தூக்கிக்கொண்டு சென்றாள்.

அப்படி ஒரு நாள் செல்கையில் காப்பகம் இருக்கும் கடைத்தெரு பக்கம் காதில் விழுந்த கிசுகிசுப் பேச்சு கேட்டு அதிர்ந்தே போனாள்.

"யாரு... புதுசா குழந்தையை தூக்கிட்டுப் போறாளே... ஒரு பெண்... அவதான் இந்த காப்பகம் நடத்தும் சரவணனை மயக்கி தன்னோட கைக்குள்ள போட்டுட்டதா சொல்றாங்க...!" என்ற பேச்சு அவளைத் திடுக்கிட வைத்தது.

நிமிர்ந்து சரவணனையும் பார்த்தாள்.



அவன் காதுகளில் இந்தப் பேச்சு விழத்தான் செய்திருக்கும்.

அவன் என்ன நினைப்பானோ என்ற அவள் பயம் கொண்டதற்கு இரண்டு நாள் கழித்து, "வெட்டிப் பேச்சு பேசுவதற்கு என்றே ஒரு கூட்டம் எல்லா ஊரிலும் உண்டு. அதை எல்லாம் நாம் பொருட்படுத்தக்கூடாது. என்ன?" என அவன் கேட்டபோது நிம்மதி கொண்டாள் அவள்.

மேலும் அவளுக்கு பாலுவே உலகம் என்றாயிற்று. காப்பக பணிகளை முடித்துவிட்டு வந்தால் பாலுவை தூக்கி வைத்துக் கொண்டு கொஞ்ச ஆரம்பித்து விடுவாள். அவனது மழலைப் பேச்சில் மயங்கி நேரம் போவது தெரியாமல் அவள் உட்காருவது உண்டு.

புலிக்கதை, கரடிக்கதை என ஒவ்வொன்றாய்ச் சொல்லி சத்தங்கள் எல்லாம் கொடுத்து அவனை சிரிக்க வைப்பாள். பொக்கை வாய்ச் சிரிப்புடன் அவன் குலுங்கக் குலுங்க சிரிப்பதை ரசிப்பாள்.

இப்படியே பாலுதான் தனது உலகம் என தன் வாழ்நாள் முழுவதையும் ஓட்டிவிடலாம் என அவள் நினைத்த போதுதான்... அது நிகழ்ந்தது.

அன்று வெளியே நன்கொடை விஷயமாய் ஒரு நிறுவனத்தில் செக் வாங்கிவிட்டு திரும்பிக் கொண்டிருந்தவள், வழியில் நின்ற அவனைப் பார்த்து அதிர்ந்தாள்.

யாரை சந்திக்கக்கூடாது, யாரை தன் வாழ்நாள் முழுவதும் பார்க்கக்கூடாது என்று நினைத்தாளோ... அந்த மதன்!

அவன்தான் அவளை கண்டுபிடித்து அவளிடம் பேசுவதற்காக வழியில் நின்று கொண்டிருந்தான்.

# 14

அவள் மதனைப் பார்த்து திகைத்து அதிர்ந்தது எல்லாம் ஒரு சில வினாடிகள்தான்!

படக்கென்று குனிந்தவள் அவன் பக்கம் திரும்பாமலே விறுவிறுவென நடந்தாள்.

''கவிதா...! கவி...! கவி...!'' என அவன் கூப்பிட்டவாறு அவன் பின்னாலே வருவது தெரிந்ததும் சட்டென எதிர்பட்ட ஆட்டோ ஒன்றை நிறுத்தி ஏறிக்கொண்டாள். அவன் பார்வையில் இருந்து நொடியில் அகன்றுவிட்டாள்.

ஆனால்... ஆட்டோவில் உட்கார்ந்து நிம்மதிப் பெருமூச்சுவிட்டாலும் அவளது உடம்பே நடுங்கியது.

கடவுளே! கடைசியில் கண்டுபிடித்துவிட்டானே!

யார் பார்வையில் படக்கூடாது என்று ஒளிந்து வாழ்ந்தாளோ... கடைசியில் அவன் பார்வையில் பட்டுவிட்டாளே?

இனி விடமாட்டானே... அவளை துரத்தி துரத்தி வருவானே?

மனம் பதைத்தவளாய் அவன் காரில் தன்னைப் பின் தொடர்கிறானா என பயந்து எட்டிப் பார்த்தவாறே காப்பகம் வந்து சேர்ந்தாள்.

நல்லவேளையாய் அன்று அவன் பின் தொடரவில்லை.



நம்மைப் பற்றி நாம் தங்கியிருக்கும் இந்த பாலர் காப்பகம் பற்றியெல்லாம் அவனுக்குத் தெரியாது என்று அவள் நினைத்துக் கொண்டிருக்க... மறுநாள் மொட்டு மாதிரி காப்பகத்திற்கு வந்துவிட்டான் மதன்!

அவன் அப்படி வந்ததைவிட வேறொரு அதிர்ச்சி கவிதாவிற்கு காத்திருந்தது. அது... காப்பக நிர்வாகி சரவணனும், மதனும் பால்ய நண்பர்கள்... முன்னாள் சிநேகிதர்கள் என்று.

அதனால் மதன் வந்து காப்பகத்தில் நின்றதுமே அலுவலகத்தில் இருந்த தற்செயலாய் வெளிவந்த சரவணன் உடனே அவனைப் பார்த்துவிட்டான். அடையாளம் கண்டுவிட்டான். இருவரும் உயிர் நண்பர்கள் போல் கட்டிப் பிடித்துக் கொண்டனர்.

மணிக்கணக்கில் தங்களை மறந்து பழைய கதைகளை பேச ஆரம்பித்துவிட்டனர்.

தூரத்தில் தற்செயலாய் நின்று இதையெல்லாம் கவனித்த கவிதா திகைத்துதான் போனாள்.

இனியும் இங்கு நின்றால் ஆபத்து என காப்பகத்தின் மற்றொரு பகுதிக்கு ஓடி ஒளிந்தாள்.

ஆனால் அதை ஓரக்கண்ணால் மதன் கவனித்துவிட்டான்.

பின் மதன் தான் காப்பகத்திற்கு கவிதாவைத் தேடி வந்த விஷயம் பற்றிக்கூற இம்முறை சரவணன் தான் அதிர்ந்துவிட்டான்.

அவனால் கொஞ்சமும் நம்ப முடியவில்லை.

கவிதாவின் வாழ்வு சீரழிந்ததற்கு காரணம் அவனது நண்பன் மதன்தானா?

நம்ப முடியாமல் வாய் பிளந்தவனிடம் மதன் தலைகுனிந்தபடி அப்போது தான் பணத்திமிரில் மைனர் போல் நடந்து கொண்ட விஷயங்களை விளக்கினான்.

தான் இப்போது மனம் திருந்தி கவிதாவை ஏற்றுக் கொண்டு அவளுக்கு ஒரு நல்ல வாழ்க்கை அமைத்துக் கொடுக்கவே இந்த நான்கு ஆண்டுகளாய் அவளைத் தேடி வருவதாய் சொன்னபோது சரவணனே பெரும் நிம்மதி கொண்டான்.

பின் கவிதாவிற்கு ஒரு மகன் பிறந்திருப்பதை சொன்னபோது மதன் நெகிழ்ந்தே போய்விட்டான்.

என்ன... எனக்கொரு மகன் பிறந்திருக்கிறானா? நான் அப்பாவாகிவிட்டேனா?

அதுகூட தெரியாமல் அப்பாவாய் நான் இருந்திருக்கிறேனா? சே...!

தன்னைத்தானே நொந்து கொண்டவன், பாலுவை பார்க்கத் துடித்தான்.

சரவணன் அவன் ஆவலைப் புரிந்துகொண்டு உடனடியாக அவனை கூட்டிச் சென்று பாலுவைக் காட்டினான்.

புதிதாய் உதித்த தந்தைப் பாசத்தில் அவனைப் பிடித்து கொஞ்சினான் மதன். அவனை உச்சி முகர்ந்து, கட்டியணைத்து முத்தமாரி பொழிந்து தன் ஆவல் முழுவதையும் வெளிப்படுத்தினான்.

இதையும் தூரத்தில் இருந்து திகைத்துப் போய் பார்த்துக் கொண்டிருந்தாள் கவிதா.

அதன்பின் மதன் என்ன நினைத்தானோ பாலுவை கொஞ்சிவிட்டு அவளை சந்திக்காமலே காப்பகத்தில் இருந்து சென்றுவிட்டான்.



கவிதா பெரும் நிம்மதி கொண்டாலும் நம் இருப்பிடத்தை தெரிந்துகொண்டானே. இனி என்ன நடக்குமோ... என்ன செய்வானோ...? என்ற பயம் கொண்டாள்.

அதேநேரம் சரவணன் அவளை சந்தித்து மதன் நிலைமை பற்றி விளக்கவே செய்தான்.

அவன் அறிந்தவரையில் மதன் ஒன்றுமே மோசமானவன் கிடையாது என்றும் சூழ்நிலையாலே மோசமாய் ஆக்கப்பட்டவன் என்றும் தெரிவித்தான்.

ஆனால் அதை கவிதா கொஞ்சமும் காதில் வாங்கவில்லைதான்.

ஆனால் தொடர்ந்து அந்த வாரம் முழுவதும் மதன் காப்பகத்திற்கு வந்தான். தினமும் ஒன்று அல்லது இரண்டு மணி நேரமாவது பாலுவை வைத்து கொஞ்ச ஆரம்பித்தான்.

அவனுக்குத் தேவையான விளையாட்டுப் பொருட்கள், பொம்மைகள் எல்லாம் வாங்கிக் கொடுத்து உடன் இருந்து பாசமாய் விளையாடினான்.

பாலுவும் அவன் கொடுத்த விளையாட்டுப் பொருட்களின் சந்தோஷத்தில் அவனையே சுற்றி வந்தான்.

கவிதா திடுக்கிட்டு யோசித்தவள். இதை எப்படி தடுப்பது என சிந்திக்க ஆரம்பித்தாள்.

மேலும் பத்து நாட்கள் ஓடியது.

பாலு தினம் காப்பகம் வரும் மதனுடன் நன்றாக ஒட்டிக் கொண்டான். அப்பா! அப்பா...! என மழலை மொழியில் அவனை அழைத்து பொக்கை வாய் சிரிப்பு சிரித்தான்.

அப்படித்தான் அவள் ஒருநாள் கடைத்தெரு பக்கம் பாலுவை கூட்டிக்கொண்டு சென்றவள் திரும்ப

காப்பகத்திற்கு திரும்ப, அப்போது அந்த அதிர்ச்சியான சம்பவம் நடந்தது.

மதன் அவள் வரும் வழியில் காரை சடக்கென நிறுத்தி இறங்கினான்.

திகைத்தவளின் பக்கம் நிதானமாய் நடந்து வந்தான்.



## 15

மதனை கவிதா கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை!

அவன் பாட்டுக்கு உரிமையுள்ளவன் போல் காரை நிறுத்தி இறங்கி விறுவிறுவென அவள் பக்கம் வந்தான்.

காரையும் முன்பே பழகிய அவனையும் பார்த்த பாலு அவனைப் பார்த்ததும், "அப்பா..." என்றபடி ஆவலாய் தாவி வந்துவிட்டான்.

கவிதாவோ, நடப்பதை நம்ப முடியாமல் திகைக்க மதனோ... தாவி வந்த பாலுவை அணைத்து உச்சி முகர்ந்து முத்தமாரி பொழிந்தான்.

பின் கவிதாவைப் பார்த்து, "நடந்த எல்லாவற்றுக்கும் என்னை மன்னித்துவிடு. நான் திருந்திவிட்டேன்...!" என்றான் கண்கலங்க.

வேகமாய் முகத்தை திருப்பியபடி பாலுவை அவனிடமிருந்து பிடுங்கிக் கொண்டு நடக்கப் போனாள் கவிதா.



ஆனால் வலுவான அவனது கரங்களுக்கு முன் அவளால் ஒன்றும் செய்ய முடியாமல் போனது.

அதற்குள் மதன் காரின் கதவைத் திறந்து பாலுவை முன் சீட்டில் உட்கார வைக்க... சந்தோஷமாய் ஏறிக் கொண்டான் பாலு.

பின் கவிதா பக்கம் திரும்பி கவிதாவை ஏறும்படி சொன்னான்.

"முடியாது...! மாட்டேன்...!" என பிடிவாதம் பிடித்தாள் அவள்.

பின் மதன் என்ன நினைத்தானோ, சட்டென அவள் கைகளையும் தோளையும் அழுந்தப் பற்றி ஒரு வேகத்தோடு காருக்குள் தள்ளி கதவை மூடினான்.

பின் சீட்டில் போய் தொப்பென விழுந்தாள் அவள். அவனது செய்கையினால் ஏற்பட்ட அதிர்ச்சியில் திகைத்துத்தான் போனாள்.

பின், முன் டிரைவர் சீட்டில் அவன் ஏறிய போது, பக்கத்து முன் சீட்டில் பாலு தன் பிஞ்சுக் கரங்களால் அவனைத் தட்டியபடி, "அப்ப் ப்பா... கா... கார்ர்... கார்ர்ர்..." என்று மழலை மொழியில் உச்சரிக்க அவன் விரல்களில் முத்தமிட்டவாறு காரைக் கிளப்பினான் மதன்.

பாலுவும் கியருக்கு கொண்டு வந்த மதனின் கையை கெட்டியாய் பிடித்துக்கொள்ள... அவனை ஒருவித அணைப்புப் பிடி பிடித்தபடியே வண்டியை ஓட்டினான் அவன்.

இது... என்ன வலுக்கட்டாயமான காட்டுமிராண்டித்தனம்? பேசாமல் கதவைத் திறந்து வெளியில் குதித்து விடுவோமா...? என்று தான் நினைத்தாள் அவள்.

ஆனால் பாலு மதனின் கைகளை, கெட்டியாய் பிடித்திருந்த விதம் அவளது சிந்தனையைத் தடுத்தது.

காரைக் கண்டதும் அப்பா.... அம்மா என்று ஓட்டிக்கொண்டான்... உடனே... அப்பா பிள்ளையாய் மாறி விட்டானா? ஆண் பிள்ளை என்றாலே இப்படித்தானா?

ஒரு கணம் பாலு மீது கூட சுரீர் கோபம் கொண்டாள் அவள்.

மறுகணமே அவன் பாலு இயல்பாய் அவள் பக்கம் திரும்பி பொக்கை வாய் சிரிப்பை அழகாய் காட்டிய போது சட்டென குளிர்ந்தும் போனாள்.

அவர்களது சண்டை.... அவனுக்கு எப்படித் தெரியும்? அவனைப் பொறுத்தவரையில் எல்லோரையும் போல் தனக்கும் அப்பா... அம்மா வேண்டும் என்று தானே நினைப்பான்?

அவள் அந்த யோசனையில் இருக்க காரை விரைவாய் செலுத்திய மதன் லயன்ஸ் காலனியை அடைந்து, தான் தங்கியிருந்த கெஸ்ட் அவுஸ் பங்களா முன் சரக்கென காரை நிறுத்தினான்.

அது அவனுக்குத் தெரிந்த தொழிலதிபர் ஒருவரின் சொகுசு பங்களா. பணியாட்கள், கார்கள் என சகல வசதிகளோடும் இருந்தது.

பங்களாவின் அலங்காரத்தைப் பார்த்து முகம் சுளித்தாள் அவள். பணக்காரத்தனம்! எல்லாம் பணத்திமிர்! என முணுமுணுத்தாள்.

அவனோ எதையும் சட்டை செய்யாமல் இறங்கி ஒரு கையில் பாலுவை தூக்கியபடி மறுகையால் அவளை தரதரவென இழுக்காத குறையாய் கூட்டிப் போனான்.



ஒன்றிரண்டு பணியாட்கள் நின்று உறுத்துப் பார்ப்பதை அவள் தான் தவிப்பாய் உணர்ந்தாள். ஆனால் அலட்டிக் கொண்டது போல் தெரியவில்லை.

ஒருவேளை இப்படி அடிக்கடி பெண்களை கூட்டி இழுத்து வருவது வாடிக்கையாய் போய் பணியாளர்களுக்கும் பழகிப் போய் இருக்குமோ?

நேராக அவளைக் கூட்டிப் போய் விசாலமாய் இருந்த பெரிய அறையின் படுக்கையில் தள்ளி கதவை மூடினான்.

பிளாஸ்டிக் பேக் ஒன்றில் முன்பே வாங்கி வைத்திருந்த விளையாட்டுப் பொருட்கள் எல்லாவற்றையும் பளிங்குத் தரையில் போட்டு பாலுவையும் கீழே விட்டான்.

''அய்... கார்...! பிளேன்...! பொம்மை...!'' என ஒவ்வொன்றாய் எடுத்து ஆவலாய் பார்த்தபடி பாலு விளையாட ஆரம்பித்துவிட்டான்.

பின் மதன் நிதானமாய் நடந்து வந்து முறைத்துக் கொண்டிருந்தவளின் பக்கம் இடிப்பது போல் நெருக்கமாய் உட்கார்ந்தான்.

''என்ன... இது?'' கோபமாய் அதட்டினாள் அவள்.

அவன் பதில் பேசாமல் அவளையே உற்றுப் பார்த்தான்.

''உன் கோபம், ஆத்திரம் இன்னும் தீரவில்லை?'' என்றான்.

''தீராது... தீரவே... தீராது...'' என்றாள் அவள் உறுதியான குரலில்.

''அப்படியானால் அதற்கு இதுதான் மருந்து...!'' என்றபடி அவள் எதிர்ப்பை பொருட்படுத்தாமல் கைகளால் வளைத்து அவளை வேகமாய் அணைத்தான்.

அவனது பிடியை தட்டிவிட முயற்சித்தபடி வெகுவாய் திமிறினாள் அவள்.

ஆனால் அவன் ரொம்பவும் முரட்டுப்பிடி பிடிக்காமல் மென்மையாக அவளை முழுவதும் அணைத்தபோது அவளையறியாமல் அவனை விலக்கப் போன அவளது கைகள் பின் வாங்கியது.

அணைத்தவன் அத்தோடு நில்லாமல் அவள் நெற்றியிலும், கன்னங்களிலும் இதமாய் முத்தமிட்டான்.

அதில் சட்டென ஆத்திரம் துளிர்த்தவளாய், "என்ன மீண்டும் இந்த உடம்பை அனுபவித்துப் பார்க்கும் வெறி வந்துவிட்டதா? இம்முறை எவ்வளவு பணம் தரப் போகிறீர்கள். ஒரு லட்சமா... இல்லை இரண்டு லட்சமா?" சீண்டினாள் அவள்.

அவன் கொஞ்சமும் முகம் மாறாமல் அவளை அணைத்துப் பிடித்தபடியே இயல்பாய் புன்னகைத்தான். "நீ... என்ன பேசினாலும் நான் கோபம் கொள்ளமாட்டேன். உனக்கு பேசுவதற்கு உரிமை இருக்கிறது கவி!" என்றான்.

"ஓஹோ...! இப்படி மாற்றி கீழிறங்கி பேசுவதும் ஒரு கலைதான். இப்படி எத்தனை பெண்களை மயக்கி வீழ்த்தியிருக்கிறீர்களோ?"

அவள் குத்தலாய் கேட்டதற்கு மீண்டும் புன்னகையை பெரிதாக்கியவன், "ஒன்றைப் புரிந்து கொள் கவி. நான் இப்படி படுக்கையில் உட்கார்ந்து பேசிய முதல் பெண்ணும் நீதான். கடைசிப் பெண்ணும் நீதான். அன்று அந்த மாபெரும் தவறை உனக்கு இழைத்த பிறகு வேறு பெண்ணிடம் மனம் செல்லவில்லை. உன் நினைவாகவே பிராயச்சித்தம் தேடி இன்று வரை இருக்கிறேன்..." என்றவனை நிமிர்ந்து, எப்படி நம்புவது? என்பது போல் உற்றுப் பார்த்தாள்.



அவள் கேள்வியைப் புரிந்தவன் போல், "என்னை நன்றாகப் பார். முன்பு நீ பார்த்த பணக்கார மதனுக்கும், இந்த மதனுக்கும் நிறைய வித்தியாசங்கள் இருப்பது உனக்குப் புரியும்..." என்றான்.

அவள், அவன் சொன்னது போலவே அவனை நன்றாகப் பார்த்த போது உணர்ந்தாள். பகட்டான சபாரி உடை, மோதிரம், பிரேஸிலெட், மைனர் செயின் என்று எதுவுமில்லாமல் சாதாரண பேண்ட், சர்ட்டில் சற்றே கலைந்த முடி... இறுகிய கன்னங்கள்... ஷேவ் செய்யப் படாத தாடை ஓரங்கள். முன்பு தெரிந்த அந்த பணக்கார திமிர் அறவே இல்லாமல் இயல்பான சராசரி மனிதனாய்... மதனா இப்படி?

நிஜமாகவே நடந்தவைகளுக்கு வருந்துகிறானா...? அவளுக்கு இழைத்த கொடுமைக்கு தினம் தினம் துடித்து மருகுகிறானா?

நிஜம்தானா... இல்லை நடிப்பா?

"அப்படிப் பார்க்காதே கவி! உன்னிடம் இன்னமும் நடிக்க வேண்டிய அவசியம் எனக்கு என்ன இருக்கிறது...? ஒன்று இரண்டல்ல... நான்கு ஆண்டுகள் ஓடிவிட்டதே...! இந்த நான்கு ஆண்டுகளும் உன் நினைவாகவே... உன்னைத் தேடிக்கொண்டே இருந்திருக்கிறேனே...? அது... ஒன்று போதாதா...? என் உண்மையான நிலையை உனக்கு பறைசாற்ற?"

கண்கலங்க மெய்யான வருத்தம் தொனிக்கும் குரலில் அவன் கேட்ட போது, அதற்கு மேலும் பொறுக்க முடியாதவளாய் தன் இறுக்கம் தளர்ந்து அப்படியே உடைந்து போனாள் அவள்.

அப்படியே அவளை இறுகப் பிடித்து மறுபடியும் அணைப்பில் வைத்து கண்களை மூடிக்கொண்டான் அவன். அவளும் அவன் நெஞ்சத்தில் பொதிந்து சிறிது நேரம் அப்படியே விழிகளை மூடி வைத்துக்கொண்டாள்.

நடந்த விஷயங்களை எல்லாம் எண்ணிப் பார்க்க... ஒருவரையொருவர் பிரிந்து கொண்டிருந்த தவிப்பை உணர... உணர்வினால் எழுந்த உணர்ச்சிகளை எல்லாம் ஆசுவாசப்படுத்திக் கொள்ள இருவருக்கும் கொஞ்ச நேர... அவகாசம் தேவைப்பட்டது போல சில நிமிடங்கள் மௌனமாகவே கரைந்தது.

பின் மதன் நிமிர்ந்து அவள் முகம் நிமிர்த்தி அவளது கண்ணை மறைத்த கூந்தல் சுருளை விலக்கியவாறு, ''மீண்டும் மீண்டும் உன்னிடம் மன்னிப்பைக் கேட்டுக் கொள்கிறேன் கவி. இனியும் என்னைப் புரிந்து கொள்ளாமல் பிரிந்து போய்விடாதே...! இனி நீ அப்படிப் பிரிந்து சென்றால் உன்னைத் தேடுவதற்குக்கூட என் மனதிலும் உடம்பிலும் பலம் இல்லை...'' என்றான் குரல் கம்ம.

அவனது இளைத்து சற்று மெலிந்த உடல்வாகே அவனது பேச்சின் உண்மையை அவளுக்குப் புரிய வைத்தது.

அதில் நெகிழ்ந்து முதன்முறையாய் அவனது கரங் களை மெல்ல பற்றி அழுத்தியவள். ''என்னை அவ்வளவு தேடினீர்களா?'' என்றாள்.

அவன் பலமாய் தலையசைத்து. ''தொழில் முழு வதையும் மேனேஜரிடம் ஒப்படைத்துவிட்டு ஊர், ஊராய் போய் தேடினேன். உனக்குத் தெரிந்தவர்கள்.



தோழிமார்கள், தூரத்து உறவினர்கள் என எல்லோர் முகவரியையும் சேகரித்து தேடிச் சென்று விசாரித்தேன். எல்லோரும் கைவிரித்தார்கள். ஆனால் நம்பிக்கையை இழக்காமல் தொடர்ந்து அன்பு இல்லங்கள், அனாதை ஆசிரமங்கள் என்றெல்லாம் போய் உன்னைத் தேடி னேன். அப்படித் தேடும் போதுதான் இந்த மெர்ஸி ஹோம் பற்றி கேள்விப்பட்டு வந்தேன். இங்கு வந்து பார்த்தால்... என் பழைய நண்பன் பால்ய கால தோழன் சரவணன் நடத்தி வரும் மெர்ஸி ஹோமில் நீ இருப்பது. நான்கு வருடங்களாய் நீ இங்கே பணியாற்றுவது எல்லாம் தெரிந்தது...''

அவன் முடிக்கவும் ''சரவணனையும் என்னையும் பற்றி சிலர் தப்பாகப் பேசினார்களே... அதை நீங்கள் நம்ப வில்லையா?'' என்றாள் தன் சந்தேகம் முழுவதையும் தீர்த்துக் கொள்ள விரும்புபவள் போல்.

மதன் அதற்கு மென்மையாய் சிரித்தவன், ''எனக்கு சரவணனைப் பற்றி நன்றாகத் தெரியும். அவன் கள்ளங் கபடமில்லாத மாசு மருவற்ற நிலா போன்றவன். கிட்டத் தட்ட உன்னைப் போலவே...!'' என முடித்தவன் தொடர்ந்து, ''ஆனால் நான் தான் அழுக்காய், போக் கிரித்தனமாய் கெட்டவனாய் உங்கள் இருவர் முன்பும் தலைகுனிந்து நிற்கிறேன். என் பணக்காரப் புத்தி நிறைய கேளிக்கை விஷயங்களில் பழக்கப்படுத்தி என் சிந்தை யிலேயே தடுமாற வைத்துவிட்டது. இப்போது மனம் திருந்தியவனாய் மறுஜென்மம் எடுத்து புது மதனாய் உன் முன் நிற்கிறேன். என்னை ஏற்றுக் கொள்வாயா கவி?'' என திரும்பவும் மருகியபடி அவன் கேட்டபோது

தாங்க முடியாதவளாய் அவனை அப்படியே இறுக அணைத்துக் கொண்டாள்.

தொடர்ந்து அவனே, "கவி! அதற்காக மட்டுமில்லை... நம் மகனுக்காகவும் தான்! இந்தப் பிஞ்சு வயதில் தாய்ப் பாசம் கிடைத்தாலும் தகப்பன் பாசம் கிடைக்காமல் அவன் வளர்வது கொடுமைதானே? இங்கு வந்து... உன்னைப் பற்றி அறிந்து உனக்கு அதாவது நமக்கு பாலு என்ற மகன் பிறந்து மூன்று வயதில் இருப்பதை அறிந்ததும் எவ்வளவு சந்தோஷம் அடைந்தேன் தெரியுமா?

அன்று காப்பகத்தில் சரவணன் வந்து பாலுவைக் காட்டியதும் நான் பத்து நிமிடங்கள் விடாமல் தூக்கி வைத்துக்கொண்டு முத்தமாரி பொழிந்ததைக் கண்ட அவனே திகைத்துவிட்டான் என்றால் பாரேன்..."

அவன் முடிக்க, "சரவணன் இதை என்னிடம் சொல்லிவிட்டார்..." என்றாள் அவள் அமைதியாக. பின் அவளே, "அது முதல் என்னவோ உங்கள் மேல் நான் கொண்டிருந்த அந்த இறுக்கமான கோபம் மெல்ல தளர ஆரம்பித்துவிட்டது என்று கூட சொல்லலாம்...."

அதை அவனுக்குப் புரிய வைப்பது போல் தனது மைவிழிக் கண்களை கிறக்கத்தோடு மூடி பெரும் நிம்மதி தேடுபவளாய் அவன் நெஞ்சில் புதைந்து கொண்டாள் கவிதா.

*